# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

நவம்பர் 13 -19, 2013 பக்கம் - 24 30/-




## அழிவின் நினைவேந்தி...!

## எதிர்ப்புக்கு மூடுவிழா




# "ஐயோ! அது நானில்லை!"

"நீ பிரபாகரனின் மகள் தானே?" " இல்லை. அது நானில் லை" கத்துகிறாள் அவள். அவள் தான் தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் ஊ ட க வி ய ல ா ள ர் இசைப்பிரியா.




"ஐயோ! அது நானில்லை!"

கடந்த சில நாட்களின் முன்பு இணையத் தளங்களிலும், கொலைக் காட்சிகளிலும் கேட்ட ஒரு இளம் பெண்ணின் அவலக்குரல் அந்தக் காட்சியைப் பார்த்த அத்தனை பேரின் நெஞ்சுகளையும் கசக்கிப் பிழிந்து உக்கிரம் கொள்ள வைத்திருக்கும் அந்த விழிகளில் கொப்புளித்த மிரட்சி கொடிய மிருகங்களிடம் அகப்பட்ட அபலையின் உயிரச்சத்தின் உச்சத்தை பார்த்தவர் மனதில் வலி வைத்திருக்கும்.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் குதறப்பட்டு மேலாடை களையப்பட்டு நீருக்குள் போடப்பட்டிருந்த அவளிடம் கேள்வி கேட்கப்படுகிறது. "நீ பிரபாகரனின் மகன் தானே?" " இல்லை. அது நானில்லை" கத்துகிறாள் அவள். அவள் தான் தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் இசைப்பிரியா.

முழு உலகமுமே அந்தக் காணொலிக் காட்சியைப் பார்த்திருக்கிறது. போரின் இறுதி நாட்களில் இலங்கை அரசும், இலங்கை அரச படைகளும் நடத்திய மனித வேட்டை வெறியாட்டத்தின் மேலுமொரு அசைக்க முடியாத ஆதாரமாக அந்தக் காட்சி உலகெங்கும் பயணிக்கிறது.

ஆனால் இலங்கையின் இராணுவப் பேச்சாளர் வழமை போல் வாய் நிறைந்த பொய்களைக் கக்குகிறார். அது ஒரு போலியான ஆவணம் எனவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு நாடகம் எனவும் வாய் கூசாமல் சொல்கிறார். அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல இன்னும் ஒரு படி மேலே போய் அது போலியாகத் தயாரிக்கப்பட்டது எனவும் அதனால் இலங்கை அரசுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென்று தெரிவித்துள்ளதுடன் சனல் 04 இப்படி மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் , பொதுநலவாய மாநாடு போன்ற விசேட நிகழ்வுகள் இடம்பெறும் போது இப்படியானவற்றை வெளியிடுவதும் உண்டு. அடுத்த மார்ச் மாதமும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும் போது இப்படியான வெளியீடுகள் வரும் எனவும் ஆரூடம் கூறியுள்ளார்.

" இலங்கையின் கொலைக்களம்", போர்த்தவிர்ப்பு வலயம் , தலைவர் பிரபாகரனின் இளை மகன் பாலச்சந்திரனின் கொலை ஆகிய காணொலிகள் வெளியிடப்பட்ட போதும் அரச தரப்பால் இப்படியான மறுப்புக்கள் வெளியிடப்பட்டன. அரசாங்கத்திற்குத் துதி பாடும் சில தொழில்நுட்பவியலாளர்கள் அந்த வெளியீடுகள் போலியாக தயாரிக்கப்பட்டவை எனப் பொய்ச் சாட்சியமும் வழங்கினர். ஆனால் உலகிலேயே மிகச் சிறந்த தொழில் நுட்ப நிபுணர்கள் அவற்றை ஆய்வு செய்து அவை யாவும் உண்மையானவை என்று தீர்ப்பு வழங்கி விட்டனர்.

அத்துடன் அந்த வெளியிடுகள் பற்றிக் கதைப்பதையே இலங்கை அரசு நிறுத்தி விட்டது. இப்போது இசைப்பிரியா தொடர்பான காணொலியைப் போலியானது எனவும் நாடகம் எனவும் புலம்பத் தொடங்கியுள்ளது அரச தரப்பு.

ஆனால் சனல் 04 தயாரிப்பாளரான கெலும் மந்ரே இலங்கை இராணுவச்சிப்பாய் ஒருவராலேயே அந்த காட்சிப் பதிவு தனக்கு வழங்கப்பட்டதாகவும் இதை அரசாங்கமும் பார்த்திக்கக் கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதற்குக் கூட இராணுவப் பேச்சாளர் கெலும் மத்ரே கூறுவது பொய் எனவும் முடிந்தால் அந்த இராணுவச் சிப்பாயின் பெயரை வெளியிடும் படியும் சவால் விடுவார். அந்தச் சிப்பாயின் பெயர் வெளியில் வந்தால் அவனுக்கு என்ன நடக்கும் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. மேலும் எந்த ஒரு ஊடகவியலாளனும் தனது செய்தி மூலத்தை வெளியிட்டு ஊடகதர்மத்தை மீற மாட்டான். அப்படியான ஒரு நிலையில் இராணுவப் பேச்சாளரோ, அமைச்சரவைப் பேச்சாளரோ இதை விடப் பெரிய சவால்களையும் விட முடியும்.

இலங்கை அரசின் மீது போர்க்குற்றங்கள், மனிதகுல விரோத நடவடிக்கைகள் என்பன தொடர்பான குற்றச் சாட்டுக்கள் எழும் போது அவர்கள் தாங்கள் போரை நடத்தவில்லை எனவும் மனிதாபிமான நடவடிக்கையையே மேற்கொண்டதாகவும் தமது படையினர் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக்கவர்கள் எனவும் அவர்கள் அப்படியான குற்றங்களில் ஈடுபடுவதில்லை எனவும் சொல்லிக் கொண்டவர்கள்.

அவர்களின் மனிதாபிமான நடவடிக்கை அவ்வளவு கொடூரமானதாகவும் மிருகத்தனமானதுமாக இருக்குமென்றால் இவர்களின் போர் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதைச் சர்வதேசம் நன்றாகவே புரிந்து வைத்துள்ளது.

பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்துவதும் அவர்களை நிர்வாணப்படுத்தி பாலியல் ரீதியாக உட்பட பலவித சித்திரவதைகளுக்கும் உட்படுத்திக் கொல்வதும், பெண்களின் இறந்த சடலங்களைப் பிறந்த மேனியுடன் தூக்கி சாக்கு மூடைகள் போன்று உழவு இயந்திரப் பெட்டிக்குள் எறிவதும், இறந்து கிடந்த பெண்ணின் பிறப்புறுப்பைச் சப்பாத்தால் தேய்த்துச் சிதைப்பதும் இவர்களின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கும், ஒழுக்கம், கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்கும். போர் வலயத்திற்கு வெளியே கிருஷாந்தி, ரஜனி முதல் ஏராளமான பெண்கள் படையினரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். போர் முடிந்த பின்பும் கூட எட்டு வயதுச் சிறுமி உட்படப் பல பெண்கள் படையினரால் கெடுக்கப்பட்ட செய்திகளும், கொல்லப்படும் செய்திகளும் அடிக்கடி வெளி வருகின்றன.

இங்கிருந்து கெயிட்டிக்கு ஐ.நா. அமைதிப் படையாக சென்றவர்கள் கூடப் பாலியல் குற்றங்கள் காரணமாகத் திருப்பியனுப்பப்பட்டனர். அண்மையில் கூட இரு படையினர் அதே விதமான குற்றங்கள் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இலங்கையில் இடம்பெறும் கொள்ளைகள், கொலைகள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகக் கைது செய்யப் படுபவர்கள் பெரும்பாலானோர் படையை விட்டு ஓடி வந்தவர்களே .தற்சமயம் இராணுவத்தில் பீரங்கிப் படையணியைச் சேர்ந்த ஒருவர் கொழும்பு செட்டித் தெருவில் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துள்ளார். ஏற்கனவே இவர் பல கொள்ளைகளில் ஈடுபட்டவர்.

இவைதான் இலங்கை இராணுவத்தின் மனிதா பிமான ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவாகும். இப்படியான மிருகவெறி நடவடிக்கைகள் படைச் சிப்பாய்களின் தனிப்பட்ட மன வக்கிரகங்களும்,கொலைவெறியும், பாலியல் கொடுமைகளும் என்று பார்க்க முடியுமா? நிச்சயமாக இல்லை!

போர்க்காலத்தில் பெரும் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதமாகப் படையினர் உளவியல் ரீதியிலும் வக்கிர சிந்தை உடையவர் களாகவும் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்களின் மனிதாபி மான உணர்வுகள், இரக்ககுணம் , மனிதநேயம் என்பன திட்டமிட்டுக் மழுங்கடிக்கப்பட்டு அவர்கள் மிருக வெறியூட்டப்பட்டனர். அவர்கள் தமிழ் மக்கள் மீது இழைக்கும் எந்தக் கொடுமைகளுக்கும், குற்றங்களுக்கும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்ற உணர்வு ஊட்டப்பட்டது.

கண்ணில் காண்பவற்றையெல்லாம் அழிப்பது, கண்ணில்படுபவர்களையெல்லாம் கொல்வது, என்பதே படை நடவடிக்கைகளின் அடிப்படைச் சித்தாந்தமாக விளங்கியது. இன்னொரு புறம் சிங்கள இனம் ஆளப் பிறந்த இனம் எனவும் ஏனைய அனைத்து இனங் களும் அடிமைகள் என்ற கருத்தூட்டலும் மேற்கொள்ளப்பட்டது.

எனவே போர்க் காலத்தில் சுதந்திரமான முறையில் இன அழிப்பு நடவடிக்கைகள் படையினரால் மேற்கொள்ளப் பட்டன. கொலைகள் , பாலியல் வல்லுறவுகள் என்பன பெருமைக்குரிய விஷயங்களாகப் படைத்தரப்பினரால் பார்க்கப்பட்டன.

எனவே போர் முடிந்த பின்பும் ஏற்கனவே படையினரிடம் உருவாக்கப்பட்ட கொடிய வக்கிரக சிந்தனைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. அதன் பலனைத் தமிழ் மக்கள் மட்டுமன்றி தற்சமயம் சிங்கள தேசமும் அனுபவிக்க ஆரம்பித்து விட்டது. இப்போது இங்கு நடக் கும் கொலைகள், கொள்ளைகள் , பாலியல் கொடுமைகள் என்பன இவற்றின் விளை பலன்களே! சாகடிக்கப்பட்ட மானிதாபிமானத்தின் தோற்றப்பாடுகள் தான்.

எப்படியிருப்பினும் இசைப்பிரியாவின் "அது நானில்லை" என்ற அவல ஒலி உலகம் முழுக்கக் கேட்டு விட்டது. இதற்கான விலையை என்ன தான் மழுப்பல் அறிக்கைகளை விட்டாலும் வெகு விரைவில் கொடுத்தேயாக வேண்டும். பொது நலவாய மாநாட்டில் அந்தக் கதறல் ஒலியின் எதிரொலி கேட்டேயாகும்.

# மாறும் கொள்கைகள்

நீலன்



அரபு நாட்டில் ஐக்கிய அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் மிகுந்த நட்பு நாடாக விளங்கி வருவது சவூதிஅரேபியாவாகும். அத்தகைய நீண்டகால நட்புறவைக் கொண்ட சவூதிஅரேபியாவின் உளவுத் துறையின் அதிபரான இளவரசர் பந்தார் பின் சுல்தான் அமெரிக்காவுடனான சவூதிஅரேபியாவின் உறவில் பெரிய மாற்றம் ஏற்படவிருக்கின்றது எனச் சில ஐரோப்பிய இராஜதந்திரிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் 2013 ஒக்டோபர் 23 ஆம் திகதி தெரிவித்திருப்பது மத்திய கிழக்கின் இராஜதந்திர மட்டத்தில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க ஆதரவுடன் சவூதிஅரேபியாவிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் கிடைத்த ஈராண்டு கால உறுப்புரிமையையும் சவூதி அரேபியா நிராகரித்து விட்டது. சிரியாக் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் சவூதி அரேபியாவிற்கு அமெரிக்கா சிரியக்கிளர்ச்சிக்காரர்களுக்குப் போதிய படைக்கலன்கள் வழங்காததும், சிரியாவில் வேதியியல் படைக்கலன்கள் பாவித்த பின்னரும் கூட சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்காததும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியகிழக்கில் சவூதியின் பிரதான எதிரியான ஈரானுடன் யுரேனியம் பதப்படுத்தல் தொடர்பாகவும் பொருளாதாரத்தடை நீக்கம் தொடர்பாகவும் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அமெரிக்கா தம்மைக் கலந்தாலோசிக்காதது சவூதிஅரேபியாவைக் கடும் விரக்திக்குள்ளாக்கியுள்ளது. இந்த விரக்தி சவூதி அரேபியாவைத் சிரியக் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பெரும் படைக்கல உதவிகளை வழங்கி சிரியாவில் தனக்கு ஆதரவான ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வைக்கலாம். அது இஸ்ரேலுக்குப் பாதகமாக அமைந்தால் அமெரிக்கா பெரும் நெருக்கடிக்குள்ளாகலாம்.

சிரியாப் போர் தொடருமாயின் ஒவ்வொரு நாளும் அங்கு அல்-கெய்தா போராளி களும் ஹிஸ்புல்லா போராளிகளும் ஒன்றுடன் ஒன்று மோதித் தமக்குப் பலத்த உயிரிழப்பை ஏற்படுத்தி விடுவர் என்றே அமெரிக்கா நம்பியிருந்தது. ஆனால், சிரியாவில் அவை இரண்டும் போர்க்கள அனுப வத்தைப் பெருக்கிக் கொள்வதுடன் தமக்கென்று நிலப்பரப்புக்களையும் கைப்பற்றிக் கொண்டு நிலை கொண்டு விடுவதற்காகிய நிலை உருவாகியுள்ளது. சிரியாவில் அல்-கெய்தா தனக்கென ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொள்வது என்பது மத்திய கிழக்கில் பெரும் பாதகமான நிலைமையை உருவாக்கும்.

ஐக்கிய அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படைப் பிரிவு பஹ்ரெய்னிலும் தளம் அமைந்துள்ளது. உலக எரி பொருள் வர்த்தகத்திற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹோம்ஸ் நீரிணையைப் பாதுகாக்க பஹ்ரெய்னில் இருக்கும் கடற்படைத்தளம் முக்கியமானதாகும்.

பஹ்ரெய்னிலும் அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்தபடி இருக்கின்றனர். பஹ்ரெய்னின் சன்னி இஸ்ஸாமிய ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் ஆதரவுடன் பதவியில் இருக்கின்றனர். பஹ்ரெய்ன் ஆட்சியாளர்களுக்கு எதிராக மனித உரிமை அமைப்புக்கள் கருத்துத் தெரிவிக்கும் போது அமெரிக்காவும் அவற்றுடன் இணைந்து கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை எனத் தெரிவிக்கின்றன. பஹ்ரெய்னின் கிளர்ச்சிக்காரர்களுள் பெரும்பான்மையானவர்கள் ஷியாமுஸ்லீம்களே, அவர்களுக்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகின்றது.

தென்கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஆசியா , வட ஆபிரிக்கா ஆகியவற்றின் மத்தியில் துருக்கி தேசம் அமைந்துள்ளது. புவியியல் ரீதியாக மட்டுமன்றி , அரசியல் மற்றும் கலாச்சார ரீதியாகவும் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களை இணைக்கும் ஒரு நாடாகவும் துருக்கி இருந்து வருகின்றது. மேற்கு நாடுகளின் படைத்துறைக் கட்டமைப்பான நேட்டோவில் உறுப்பினராகவும் இருக்கும் இஸ்ஸாமியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரே நாடு துருக்கி. அது ஐரோப்பிய ஒன்றியத்திலும் இணைந்துள்ளது.

மேற்கு நாடுகளுடன் இணைந்துள்ள ஒரு இஸ்ஸாமிய நாடான துருக்கி மக்களாட்சி முறைமையில் இஸ்ஸாமிய மதத்திற்குப் பாதகமில்லாத வகையில் தனது பொருளாதாரத்தை மேம்படுத்தியமை அரபு வசந்தத்திற்குப் பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

முன்பு மத்திய கிழக்கிலுள்ள எல்லா நாடுகளுடனும் நல்ல உறவை துருக்கி வைத்திருந்தது. ஈராக் போரின் போது துருக்கிக்கும் ஈராக்கிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. 1979இல் ஈரானில் நடந்த மதவாதப் புரட்சிக்குப் பின்னரும் துருக்கியும், ஈரானும் நல்லுறவைப் பேணி வந்தன. துருக்கிக்கும் தற்போது ஈரான் எனப்படும் பாரசீகத்துக்கும் இடையில் புரதான காலந் தொட்டே நல்ல உறவு உண்டு. ஈரானின் அணுகுண்டு உற்பத்திக்கு எதிரான பொருளாதார தடையில் துருக்கி மிதமாகவே நடந்து கொண்டு வருகிறது. எனினும் 2013 யூலை மாதம் 3 ஆம் திகதி எகிப்தில் நடந்த புரட்சிக்குப் பின்னர் ஈரானிற்கும் துருக்கிக்கும் இடையில் நல்ல உறவு இருக்கவில்லை.

சிரியாவில் துருக்கி கிளர்ச்சிக்காரர்களுக்கும் , ஈரான் அதிபர் பஷார் அல் அஸாத்திற்கும் ஆதரவாகச் செயற்படுவதால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. துருக்கி, ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுடனான தனது உறவைச் சம நிலையில் வைத்திருக்கப் பெரும்பாடுபடுகிறது. ஈரானியர்கள் விஸா நடைமுறையின்றிப் பயணிக்கக் கூடிய ஒரே ஒரு நாடு துருக்கியாகும். இதைப் பயன்படுத்தி ஐக்கிய அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. யின் உளவாளி ஒருவர் துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்தில் எட்டு ஈரானியப் போலிக் கடவுச் சீட்டுடன் பிடிபட்டதன் பின்னர் அமெரிக்கா துருக்கியை ஈரானுக்கு எதிரான உளவு நடவடிக்கைத் தளமாகப் பயன்படுத்துவது அம்பலமாகியது. இது அமெரிக்கா - துருக்கி உறவில் ஒரு தாக்கத்தை உண்டுபண்ணியது. அத்துடன் சிரியாவின் பஷார் அல் அஸாத்திற்கு எதிராக நேட்டோ கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனத் துருக்கி எதிர்பார்த்தது. ஆனால் அது குறித்து அமெரிக்காவின் போக்கும் துருக்கியை ஏமாற்றமடையச் செய்து விட்டது.

சிரியப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவும் , ரஷ்யாவும் இணைந்து அது தொடர்பான சமரசத்திற்காக ஏற்பாடு செய்த ஜெனீவா-2 பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா சார்பு கிளர்ச்சி அமைப்புக்கள் பத்தொன்பது தாம் வரமாட்டோம் எனப் பிடிவாதமாக மறுத்துவிட்டன. இது ரஷ்யாவையும் கடும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

ஐக்கிய அமெரிக்கா இன்னும் இருபது ஆண்டுகளில் எரிபொருளைப் பொறுத்தவரை தன்னிறைவு கண்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனிடையில் 2014இல் சவூதி அரேபியாவையும், ரஷ்யாவையும் முந்தி அமெரிக்கா உலகின் மிகப்பெரிய எரிபொருள் உற்பத்தி நாடாகும் நிலை காணப் படுகின்றது. இது மத்திய கிழக்கு தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளில் பெரும் மாற் றத்தை ஏற்படுத்தலாம் என்றே எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே அமெரிக்கா இந்த நூற்றாண்டின் தனது கவனம் ஆசியாவின் பக்கம் திரும்பும் என அறிவித்து விட்டது. ஆசியாவில் வாழும் பௌத்தர்களோ, இந்துக்களோ தமது மதங்களுக்கு அமெரிக்காவால் ஆபத்து எனக் கருதவில்லை. ஆசியாவில் உள்ள சில இஸ்ஸாமியர் களிடையிலும் அமெரிக்கா விரோதம் குறைவு.

மத்திய கிழக்கில் ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய கேந்திரோபாய நோக்கங்களாக எரிபொருள் விநியோகம் தங்குதடையின்றி நடத்தல், இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிசெய்தல் ஒரு நாடு மற்ற நாட்டில் ஆதிக்கம் செலுத்தாமல் எல்லா நாடுகளும் அமெரிக்காவுக்கு அடங்கி இருத்தல், இஸ்ஸாமிய தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுதல் ஆகியவை இருந்தன.

இப்போது அமெரிக்கா வின் மத்திய கிழக்கு தொடர்பான கேந்திரோபாய நோக் கங்களாக ஈரானுடன் அணுகுண்டு உற்பத்தி தொடர்பாக ஓர் உடன்பாட்டை எட்டுதல், பாலஸ்தீனத்திற்கும், இஸ் ரேலுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தல் மற்றும் சிரியக் கிளர்ச்சிகளைக் தணித்தல் என்பன காணப்படுகின்றன.

இதில் முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் காலத்தில் இருந்து அமெரிக்கா சொல்லிவந்த இரு முக்கிய அம்சங்களைக் காணவில்லை. ஒன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போர். மற்றது மத்திய கிழக்கில் மக்களாட்சியை ஏற்படுத்துதல் ஆபிரிக்கக் கண்டத்தில் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையை அமெரிக்கா ஆபிரிக்கா ஒன்றியத்திடம் ஒப்படைத்துவிட்டது. அதற்குத் தேவையான நிதி, படைக்கலம் மற்றும் உளவு உதவிகளைப் பின்னால் இருந்து செய்து வருகின்றது. மத்திய கிழக்கில் சவூதிஅரேபியா மற்றும் எகிப்து போன்ற நாடுகள் தாமே தமது பிராந்தியத்தை நிர்வகிக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என பராக் ஒபாமாவின் நிர்வாகம் கருதுகின்றது.

மத்திய கிழக்கில் அரபு வசந்தத்தைத் தொடர்ந்து உருவான நெருக்கடியால் எரிபொருள் விலை உயர்ந்த போது ரஷ்யா தனது எரிபொருள் உற்பத்தியால் பெரும் வருமானம் ஈட்டியது. அமெரிக்கா மத்திய கிழக்கில் விடும் இடைவெளியை நிரப்பப்போவது ரஷ்யாவா அல்லது எரிபொருள் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சீனாவா?

# எதிர்ப்புக்கு மூடுவிழா

ஹரன்

பொதுநலவாய மாநாட்டுக் காய்ச்சல் இலங்கை அரசுக்கு வலுவேகமாகப் பீடித்து வருகின்றது. மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாளும் இலங்கை அரசுக்கு கத்தி மேல் நடப்பதைப் போன்றே அமைந்து வருகின்றது என்பதை அரசே தன் செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றது. ஏற்கனவே நீர் நிறைந்த கடற்கரையோர பகுதியொன்றுக்குள் மேலாடை களையப்பட்டு மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் இசைப்பிரியா எனும் தமிழ் பெண் ஊடகவியலாளர் காமுகக் கும்பலால் வெள்ளைத் துணியால் மூடப்பட்டு இழுத்து வரப்படுவதையும் பின் அதேவெள்ளைத்துணியுடன் சீரழிக்கப்பட்ட நிலையில் அவள் கொலை செய்யப்பட்டு கிடக்கும் காட்சியடங்கலான காணொலியொன்றை . சனல் - 04 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இதன் மூலம் "மனிதாபிமான படை நடவடிக்கை"

என்ற பெயரில் வெளியுலகுக்குத் தெரியாது என்ற மமதையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் அரச படைகள் அரங்கேற்றிய ஊழித்தாண்டவத்தின் இன்னொரு பகுதி அம்பலத்துக்கு வந்துள்ளது. இம் முறை தர்மசங்கடமான சூழ்நிலை ஒன்றுக்குள் இலங்கை அரசு வகையாக மாட்டிக் கொண்டுள்ளது. பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறும் காலப் பகுதியில் காணொலி வெளியானதே இந்த நிலைக்கு காரணம். வழமை போல எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்ற கதையாக சளாப்பல் கதைகளைக் கூறி காணொலிகளை மறுதலித்தாலும், முள்ளிவாய்க்காலில் சடலங்களை மூடியதைப் போல மாநாட்டு வேளையில் அரசுக்கெதிரான எதிர்ப்புக் குரல்களை மண் போட்டு மூடும் செயற்பாடுகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனாலும் எல்லாவற்றுக்கும் சேர்த்து பொதுநல வாய மாநாட்டின் போது ஏதோ ஒரு பொறுப்புக் கூறல் சார்ந்த பதில் ஒன்றை அரசு அளிக்க வேண்டிய இக்கட்டு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான். முன்னரைப் போன்று வெறும் கண்டன அறிக்கையிடல், கவலை தெரிவித்தல், முன்னேற்றம் தேவை என வலியுத்தல் என இந்த பொதுநலவாய மாநாடும் முடிந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டாலும், மாநாடு இலங்கையில் நடைபெறுவதால், ஆர்ப்பாட்டங்கள் போன்ற இலங்கை அரசுக்கு அவப்பெயரை மேலும் ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் ஏதாவது இடம் பெற்று விடுமோ என்ற அச்சமும் மஹிந்தவாதிகளை இறுக்கமாகப் பீடித்திருக்கிறது.

இந்நிலையில் அவற்றை எவ்வாறு தடுக்கலாம் அந்தச் சூழ்நிலைகள் ஏற்படாமல் எவ்வாறு நழுவிக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆட்சியாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். போருக்கு பின்னரான மீள்கட்டுமானம் மனித உரிமை மேம்பாடு. ஜனநாயக உறுதிப்படுத்தல் என எண்ணுக்கணக்கற்ற வாக்குறுதிகளை கடந்த ஜெனிவாத் தொடரில் இலங்கை அரசு கண்மண் தெரியாமல் வீசிச் சமாளித்திருந்தது. யதார்த்த போக்கை அறியாமல் இலங்கை அரசுக்கு பாராட்டுக் குறிப்பு வாசித்தவர்கள் கண்களில் தற்போது மக்களின் அவலக்குரல்கள் விழுந்து விடுமோ என்ற பயமும் இலங்கையிடம் நிறைய இருக்கின்றது.

இதன் ஒரு கட்டமாகவே பல்கலைக்கழக விடுமுறைகள் பற்றிய அறிவிப்புகளை அரசு வெட்கமின்றி வெளியிட்டு வருகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் பற்றிய பயம் அரசிடம் நிறையவே இருக்கிறது. தனியார் பல்கலைக்கழக உருவாக்கம். பல்கலைக்கழக மாணவர்கள் கைது எனப் பல செயற்பாடுகள் மாநாட்டு வேளையில் ஆர்ப்பாட்ட வடிவில் கொழும்பில் எதிரொலித்தால் ஏற்கனவே நாறிப்போயுள்ள இலங்கை அரசின் பெயர் மேலும் கெடுத்துவிடும் என்ற அச்சம் இலங்கை அதிகார பீடத்தின் நித்திரையை தற்போது கலைத்து வருகின்றது. இதைத் தடுக்க மாநாட்டு வேளைகளில் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் தற்காலிக மூடுவிழா நடத்தி விடுதிகளில் இருந்து மாணவர்களை வலுக்கட்டாயமாக அகற்றி விடும் செயற்பாடுகளை வெட்க துக்கமின்றி அரசு உத்தியோக பூர்வமாக முன்னெடுத்துள்ளது.

பொய்யை அகப்படாமல் சொல்லத் தெரியாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை



கைவசம் வைத்துக் கொண்டு அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் தற்காலிக மூடுவிழாவை நடத்தியிருக்கிறது.

பல்கலை மூடுவிழாவுக்கான உள்நோக்கங்களை மறைக்க சில முட்டாள்தனமான நியாயப்படுத்தல்களையும் அது மேற்கொண்டு வருகின்றது.

வீதிகளில் போக்குவரத்து நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ளவே மாநாடு இடம்பெறும் காலப்பகுதியான ஒன்பதாம் திகதி தொடக்கம் பதினாறாம் திகதி தொடர்பான காலப்பகுதிக்குள் அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டு இருக்கும் என்ற விளக்கத்தை மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டிருக்கிறது. கொழும்பிலுள்ள சர்வதேச பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலும், அம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மட்டுமே இந்த மாநாடு இடம்பெறும் என்ற செய்தி தற்போது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்நிலையில் மாநாட்டு போக்குவரத்துடன் தொடர்புபடாத யாழ்.பல்கலைக் கழகம் உள்ளிட்ட ஏனைய பதினாறு பல்கலைக்கழங்களையும் அரசு ஏன் மூடியிருக்கிறது என்பது தான் யாருக்குமே தெரியாத மர்மாக இருக்கின்றது. கொழும்பிலும் மாநாட்டு சுற்றுப்புறங்களிலும் உள்ள வீதிகளில் பாடசாலைகள் தொடங்கும் நேரங்களிலும் முடியும் நேரங்களிலுமே அதிக நெரிசல் ஏற்படும். அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களின் போக்குவரத்து நெருக்கடியைச் சீர் செய்ய சில மணி நேரம் மட்டுமே போக்குவரத்துக்கள் தடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் சேனநாயக்க ஏற்கனவே கூறியிருக்கிறார். இந்த நிலையில் பாடசாலைகளை மூடுவதை விடுத்து அரசு எதற்காக பல்கலைக்கழகங்களை மூடுகிறது என்பதற்கான உண்மை துலாம் பரப்படுத்தப்படுகிறது. மறு புறத்தில் விடுதிகளில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ள இருப்பதால் விடுதிகளிலிருந்து மாணர்களை வெளியேற்றக் கோருகிறோம் என பல்கலைக்கழக மாணவர்கள் வெளியேற்றலை நியாயப்படுத்தும் அரசு. அந்த ஒன்பது நாளுக்குள் விடுதிகளில் என்ன வேலையை வெட்டிக்கிழிக்கப் போகிறது என்பதும் புரியவில்லை.

எனவே மொத்தத்தில் மாநாட்டு வேளை பல்கலைக் கழக மாணவர்களிடத்தே இருந்து எழக்கூடிய எதிர்ப்புகளைச் சமாளிக்கவே சில நொண்டிச் சாட்டுகளை சொல்லி பல்கலைக் கழகங்களுக்கு மூடுவிழாவை அரசு நடத்தியுள்ளது.

போக்குவரத்து நெருக்கடியை காரணம் காட்டி கொழும்பு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களை எதிர்வரும் பதினாறாம் திகதி வரை இழுத்து மூடிய அரசு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மட்டும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை மூடியிருக்கிறது. இதற்குப் பின்னால் உள்ள காரணம் மாவீரர் தினத்தில் மாணவர்கள் தீபமேற்றி அஞ்சலிகள் செய்வதைத் தடுக்கவே என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த உண்மை. தமிழ் மக்களின் நிம்மதியான கௌரவமான வாழ்வுக்காக போராடி தம் உயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவு நாள் எதிர்வரும் இருபத்தேழாம் திகதி தாயகத்திலும் புலம் பெயர் தேசத்திலும் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. வழமையாக புலனாய்வாளர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு கற்பூரச் சட்டிகளையும் தீப விளக்குகளையும் பல்கலைக்கழகத்துக்குள் கொண்டு வந்து, - படைகள் பேய்க்குப் பேன் பார்த்துக் கொண்டிருக்கும் போது - அவற்றைக் கொளுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்துவது வழமை. கடந்த முறை எல்லா அச்சுறுத்தல்களையும் உடைத்தெறிந்து கொண்டு போரில் உயிரிழந்த மறவர்களுக்கு மாணவர்கள் அஞ்சலியைச் செலுத்திய் போது இராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தியதும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அடுத்தநாள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது மிருகத்தனமான முறையில் தாக்குதல் நடத்திய பெருமை (?) யாழ்ப்பாண இராணுவத்தினரையே சாரும். இம்முறை இவ்வாறான ஒரு சூழ்நிலையை ஏற்படுவதைத் தடுக்கவே முன்னேற்பாடாக யாழ். பல்கலைக்கழகத்துகு நீண்ட - வெற்றிகர - மூடுவிழா நடத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் இருபத்தியிரண்டாம் திகதி தொடக்கம் முதலாம் திகதிவரை பல்கலைக் கழகத்திற்குள் மாணவர்கள் யாரும் உள்நுழையக்கூடாது என்ற இறுக்கமான நடைமுறையும் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் விடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மாவீரர் வாரத்துக்குள் இழுத்து மூடிவிட்டால் மாணவர்களின் மனதில் இருந்து மாவீரர்களின் நினைவுகளை, தாயக பற்றை பிடுங்கியெடுத்து விடலாம் எனத் தப்புக்கணக்கு போட்டதன் விளைவே பல்கலைக்கழகம் மூடல் பற்றிய இந்தச் செய்தி. அரசு என்னதான் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடினாலும், அவர்களின் ஒன்று கூடலை தடுத்தாலும் மாணவர்களின் மனதில் மட்டுமல்ல மக்களின் இதயத்திலும் மாவீரர்களுக்கான அஞ்சலியை எந்தச் சக்தியாலும் தடுத்து விட முடியாது.

# கழிப்பறையைக் கழுவும் கண்ணீர்



பூழகன்

**இந்த பத்தி தனிப்பட்ட வகையில் எவரையும் புண்படுத்துவதற்காக எழுதப்படவில்லை. மனித வாழ்வியல் போராட்டத்தில் பணத்தேவை காரணமாக உந்தப்பட்ட பலர் தமது வாழ்வை தொலைத்து நடு வீதிகளில் அவலப்படும் வெளிநாட்டு வாழ்கை பற்றிய ஒரு உண்மைப் பதிவாகவே பிரசுரமாகிறது.**

மூன்றாம் உலகநாடுகள் என்று இன்று எந்த நாடுகளும் இல்லை. அனைத்துமே ஏதோ ஒருவகையில் வளர்ச்சியடைந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே அவற்றை மூன்றாம் உலக நாடுகள் என்று குறிப்பிட முடியாது என்று அபிவிருத்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர். பாவனையிலும் இன்று மூன்றாம் உலகநாடுகள் என்று பாவிக்கப்படுவதும் இல்லை என்று சொல்லலாம்.

அபிவிருத்தி சுட்டிகளின் அடிப்படையில் இந்தக் கணிப்புக்கள் உயர் நிலையில் காட்டப்பட்டாலும் இன்றளவும் மூன்றாம் உலகநாடுகளில் மனிதனின் சுதந்திரமான வாழ்வுக்கு ஒவ்வாத நாடுகளும் இருக்கவே செய்கின்றன.



போதிய வருமானம் இன்மை, போக்குவரத்து, அடிப்படை வசதிகள் இன்மை, பாதுகாப்பு மற்றும் புறக்காரணிகளின் அழுத்தம், சமூக அந்தஸ்து குறைவு போன்றவை இந்த நாடுகளை மூன்றாம் உலகத்திலேயே வைத்திருக்கின்றன.

இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்று பட்டியலிடப்பட்டிருந்தாலும் உள்ளக அசைவுகளை வைத்துப்பார்த்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் உண்மைச்சுட்டிகள் வாயிலாக காட்டப்படுவதில்லை. உலக ஒப்பனைக்காக அறிக்கை இடப்பட்ட சம்பவங்களையே காணலாம்.

போதிய சம்பளம் இல்லை. பொருள்களின் விலைவாசி கட்டுப்பாடு இன்றி அதிகரிக்கப்படுகிறது, சுயதொழிலுக்கு உத்தரவாதம் இல்லை. விவசாயிகளுக்கு சரியான காப்பீட்டு வசதிகள் இல்லை. மீனவர்களுக்கு பாதுகாப்பு, தொழில் ஊக்குவிப்பு முழுமைப்படுத்தப்படவில்லை. மற்றும் இதர தொழில்களையும் உத்தரவாதம் இன்றியே செய்யவேண்டியிருக்கிறது.

இதனூடான வருமானம் போதாமைகாரணமாக வசதிபடைத்தவர்கள் என்று ஐந்து பத்து வருடங்களுக்கு முன் அறியப்பட்டவர்களும் இன்று கஷ்டம் என்று கைவிரிப்பதையே அவதானிக்கமுடிகிறது.

## உழைக்க வெளிநாடு

இந்த காரணிகள் மக்களை வேறு நாடுகளுக்கு விரட்டும் தள்ளுவிசைகளாக இருக்கின்றன. வெளிநாடுகளுக்கு சென்றால் உழைத்துச் சம்பாதிக்கலாம், வீட்டு வறுமையைப் போக்கலாம், சகோதரங்களை ,தாய் தந்தையை கவனிக்கலாம் என்ற எண்ணப்பாட்டை மறுபுறத்தில் வெளிநாட்டு இழுவிசைக் காரணிகள் பார்த்துக்கொள்கின்றன.

பெரும்பாலும் கடந்த பத்து இருபது வருடங்களுக்கு முதல் வெளிநாடு சென்றவர்கள் ஆகக் குறைந்தபட்சம் வெளியில் சொல்லக்கூடிய வேலை செய்கின்றனர். அல்லது அந்த நாட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் அந்த நாட்டின் கல்வித் தகைமைகளைப் பெற்று நல்ல உத்தியோகம் செய்கின்றனர். இவர்கள் சிரமம் பாராது உழைத்து தமது உறவுகளுக்கு காசு அனுப்ப, அதை கண் கடை தெரியாது இங்கிருப்பவர்கள் செலவளிப்பதைப் பார்க்க, வெளிநாட்டு மோகம் தானாகவே வந்துவிடும்.

"வெளிநாட்டுக்கு போனா நாங்களும் இப்படி வாழலாம்" என்ற பதிவு பலரிடம் உருவாக கடன்பட்டு கஸ்டப்பட்டு இருக்கும் காணியை, வீட்டை வித்து வெளிநாடு செல்லும் அளவுக்கு அந்த மோகம் உருவெடுத்திருக்கிறது.

## காசை அள்ளலாமா?

வெளிநாட்டில் காசு மரத்தில் காய்ப்பதில்லை. இலை உதிர்கால மரங்கள் சிந்தும் இலைகளும் இல்லை. வெளியில் சொல்ல முடியாத உழைப்பே அவை. வெளிநாட்டில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளரும் மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அந்த பணத்தை பார்க்க முடியும். ஓய்வில்லை. ஆறுதலுக்கு அயலில் யாரும் இல்லை. நோய் நொடி என்றால் கவனிக்க காக்கா கூட இல்லை. இயந்திரமாய் இயங்கவேண்டும். பெரிய படிப்பு படித்தவனும் பத்தாம் தரம் படித்தவனும் ஒரே வேலை தான் செய்யவேண்டும்.

பெரும்பாலான வெளிநாடுகளில் தற்போது வேலை இல்லை என்றாகி விட்டது. அப்படி இல்லை என்றால் மிகவும் அடிமட்ட வேலையே செய்யவேண்டும்.



## நீங்கள் தயாரா?

வீட்டு வளவில் குலை போட்டிருக்கிறது வாழைமரம். இடைப்பழமும் பழுத்துவிடது. விட்டால் காகம் குருவி கொந்திவிடும். எப்புடியாவது அதை வெட்டிப் பக்கத்துக் கடையில் கொடுத்தால் ஒரு 600 ரூபாவாவது தேறும். ஆனால் வீட்டில் இருக்கும் மகள் அதை கடைக்கு கொண்டுபோக வெட்கப்படுகிறார்.

அருகில் இருக்கம் கடைக்கு கைப்பை கொண்டு சென்று பொருள்வாங்க வெட்கம். கடைக்காரன் போட்டுக்கொடுத்த சொப்பிங் பை வழியில் அறுத்துவிழ வழி நெடுகிலும், வாங்கிவந்த பொருள்களை வீசிவிட்டு செல்கிறான் பையன்.

இப்படி எங்கள் கௌரவம் வெட்கம் எல்லாம் எங்கள் வீட்டுப் படலையுடன் முடிந்துவிட்டது.

## வெளிநாட்டுத் தம்பி

வீட்டுக்குள் ராஜ்ஜியம் செய்த தம்பி வெளிநாட்டுக்கு செல்கிறான். அந்த நாட்டுக்குள் வாழ்வதற்காக அவன் பெறும் அவஸ்தை இங்கே மறைக்கப்படுகிறது. சொல்லவருவது வேறை விடயம் என்பதால்.

"அரசாங்கத்திட்ட பதிஞ்சா கொஞ்ச காசு தருவாங்க. மற்றபடி வேலை ஒண்டு தேடணும்." தெரியாத ஆட்கள். புதிய இடம். எத்தனை இடர்கள். இன்னும் தம்பிக்கு காத்திருக்கிறது அதிர்ச்சி. அறிமுகமாகும் நபர், "தம்பி இங்க ஹோட்டல்களிலதான் வேலை இருக்கு" என்கிறார். தம்பி சொல்கிறார். "பரவாயில்லை எங்க எண்டாலும் என்ன வேலை எண்டாலும் ஒண்டு அரேஞ் பண்ணித்தாங்கோ" என்று.

இதுவரை வீட்டில் 'அதில கிடக்கிற பொருளை இதில தூக்கிப்போடாத தம்பி' இப்போ எது வேலை எண்டாலும் பரவாயில்லை எண்டு மாறிட்டான். ஹோட்டல் உதவியாளராக சேரும் தம்பிக்கு முதலில் சாப்பிட்ட கோப்பை கழுவும் வேலை. அந்த ஹோட்டலில இருக்கிற கழிப்பறையையும் அவ்வப்போது சுத்திகரிக்க வேண்டும். தம்பி தனது ஊர் வாழ்வு பற்றி யோசிக்கிறார். கண்ணீர் கழுவுகிறது கழிப்பறையை.

இப்படித்தான் பலரது வேலை கழிகிறது. வெள்ளைக்காரன் செய்த வேண்டா வேலையால் நாடும் உரிமையும் இழந்த தமிழன் வெள்ளைக்காரனுக்கே சேவகம் செய்கிறான். கிட்டத்தட்ட இது இழிசேவகம் தான். எங்கள் நாடு அந்தளவுக்கு எங்களை ஆக்கிவிட்டிருக்கிறது.

வெளிநாட்டில் இருந்து உங்கள் உறவுகள் அனுப்புவது பணம் அல்ல. அக்கரைப் பச்சைக் கனவுகளில் மிதப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நவ.13, – 19 , நவ., 2013
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-: 021 567 7609

## யாருக்காக வரவில்லை?

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். தமிழகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பலை எதற்கும் வாய்திறக்காத மௌன மோகனான மன்மோகன் சிங்கைக்கூட உதடு பிரிக்கப் பண்ணி "இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு போகமாட்டேன்" என்று சொல்ல வைத்திருக்கிறது. ஆனாலும் சோழியன் குடும்பி சும்மா ஆடவில்லை. உண்மையில் மன்மோகன்சிங் இலங்கைக்கு வராமல் விட்டமைக்குக் காரணம் இசைப்பிரியாவின் காணொலி ஏற்படுத்திய அதிர்வோ அல்லது ஈழத்தமிழர்களின் மீது இறுதிப்போரில் இலங்கைப் படைகள் மேற்கொண்ட அட்டூழியத்துக்கான எதிர்ப்பு நடவடிக்கையோ அல்ல.

அடுத்து வரும் மாதங்கள் இந்தியாவின் ஆட்சி பீடத்தில் யார் அமரப் போகின்றார்கள் என்பதைத் தீர்மானிக்க இருக்கின்றன. ஏற்கனவே பல மாநிலங்களில் மத்திய அரசை இப்போது ஆண்டுகொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி தள்ளாடிக்கொண்டிருக்கிறது. இது போதாதென்று ஆந்திர மாநிலத்தில் இருந்து தெலுங்கானாவைத் தனி மாநிலமாக மாற்ற எடுத்த முடிவால் மத்திய அரசு ஆப்பிழுத்த குரங்காக முழிக்கிறது.

இறுதிநேர இலவச வாக்குறுதிகள் மூலம் இத்தகைய குறைகளை ஈடுசெய்து காங்கிரஸ் கட்சி பற்றிய எதிர்மறையான பதிவுகளை மக்கள் மனதில் இருந்து மறக்கப்பண்ணி விடலாம். ஆனால் இந்த முறை காங்கிரஸ் கட்சி மிகப் பலமான போட்டியாளனோடு மோதவுள்ளது. அதுவும் ஊடகங்களின் வெளிச்சத்தில் ஒரு அதிமானுடனாக மக்கள் மனதில் பதிவாகியுள்ள நரேந்திர மோடியுடன் காங்கிரஸ் மோதி வென்றால் மாத்திரமே ஆட்சிக்கட்டிலை மீண்டும் பிடிக்க முடியும்.

வழமையாகவே காங்கிரஸ் தனது பிரதான வைரியான பா.ஜ.கவுடன்தான் மோதுவதுண்டு. மோடியும் பா.ஜ.க சார்பில் களமிறங்கினாலோ அதையும் தாண்டி தனக்கென ஒரு விம்பத்தைக் கொண்டிருப்பவர். எதற்கும் யோசிக்காமல் அதிரடியான முடிவுகளை எடுப்பவர். எனவே பலமான மோடியோடு மோத தம்முடைய கூட்டணிக் கட்சிகளையே காங்கிரஸ் நம்ப வேண்டி இருக்கிறது. இத்தகைய இக்கட்டான நிலையில் தமிழகத்தின் எதிர்பார்ப்புக்கு மாறாக மாநாட்டில் கலந்து கொண்டால் அது காங்கிரஸின் எதிர்காலத்தையே இருளாக்கி விடும். அதனால்தான் மன்மோகன் சிங் தன்வருகையைக் கைவிட வேண்டி ஏற்பட்டது. மாறாக எங்களுக்காகத்தான் அவர் வரவில்லை என்று ஈழத் தமிழர்கள் நினைப்பார்களேயானால் அதைவிட அடிமுட்டாள்தனம் வேறெதுவும் இருக்கப் போவதில்லை.

# அழிவின் நினைவேந்தி....

பிரமன்



இரண்டாம் உலக மகா யுத்தத்தில் எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு அடிவாங்கிய நாடு ஜப்பான். சினிமாப் படங்களில் நாயகியைக் காக்க கடைசிநேரத்தில் பிரசன்னமாகும் நாயகனைப் போல உலகப் போரில் இறுதி நேரத்தில் நுழைந்து தன்வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த அமெரிக்கா தேர்ந்தெடுத்த நாடுதான் ஜப்பான். தன்னுடைய விஞ்ஞானிகளின் மூளைகளைக் கசக்கிப் பிழிந்து அணுகுண்டு என்னும் அதி பயங்கர ஆயுதத்தை அமெரிக்கா கண்டுபிடித்திருந்த போதும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கு எந்த ஒரு களமும் கிடைக்கவில்லை. என்ன செய்யலாம் என்று வல்லாதிக்க நாடு யோசித்துக் கொண்டிருந்த போதுதான் வகையாய் வந்து ஜப்பான் சிக்கியது.

இதுநாள் வரையும் தேடிக்கொண்டிருந்த பரிசோதனை எலி கிடைத்துவிட்டால் சும்மா இருக்குமா அமெரிக்கா. தன்னுடைய அணுகுண்டுகளை ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இரு நகர்கள் மீதும் பரிசோதித்து திருப்திப் பட்டுக்கொண்டது. அமெரிக்கப் பூனைக்கு விளையாட்டாகிப் போன இந்தப் பரிசோதனை, சுண்டெலி ஜப்பானுக்கு உயிர் போகும் அளவுக்கு வலிக்கச் செய்தது. இலட்சக்கணக்கானோர் கணப்பொழுதில் கருகி மாண்டனர். கட்டடங்கள் யாவும் உருக்குலைந்து போயின. எங்கும் பிணக்காடு. பிணங்களை பிணங்களே சுமக்க வேண்டிய அளவுக்கு மனித வாடையே இல்லாமல் போயிருந்தது. நூற்றாண்டுக் கணக்கில் எந்தவொரு தாவரமும் முளைவிடாத அளவுக்கு ஹிரோசிமா, நாகசாகி மண்ணை அணுகுண்டு மலடாக்கி விட்டிருந்தது.

அதுநாள்வரையும் ஓங்கியிருந்த ஜப்பானின் கரம் இந்த மரண அடியோடு வீழ்ந்து போனது. ஒரே நாளில் சரணடைந்தது. ஆனால் உள்ளே ஜப்பானுக்குள் கோபம் கனன்று கொண்டிருந்தது. அந்தக் கோபத்தை இனிமேல் போரிலே காட்டுவதைவிடுத்து வேறுதிசையில் காட்ட அது முடிவெடுத்தது. எங்கு ஜப்பான் வீழ்த்தப்பட்டதோ அங்கேயே அதன் எழுச்சிக்கான ஆரம்பப் புள்ளி போடப்பட்டது. எங்கு புல்பூண்டுகள் முளைக்காது என்று அமெரிக்கா கணக்குப் போட்டதோ அந்த நகரங்களை மீண்டும் கட்டியெழுப்பும் சவாலோடு ஜப்பானின் மூளைசாலிகள் அனைவரும் களமிறங்கினார்கள்.

எண்ணிப் பத்தே வருடங்களில் ஹிரோசிமாவும் நாகசாகியும் ஜப்பானியர்களின் புராணங்களில் வருகின்ற பீனிக்ஸ் பறவை போல எரித்த சாம்பலில் இருந்து மீண்டும் சிரித்த முகத்தோடு உயிர்த்தன. முன்னர் எங்கெங்கு என்னென்ன கட்டங்கள் மரங்கள் என்பனவெல்லாம் இருந்தனவோ அங்கெல்லாம் அவை மீள் உருவாக்கம் செய்யப்பட்டன. செத்துப் போயிருந்த நகரங்கள் இரண்டும் மீண்டும் மனிதர்களின் காலடிபட்ட பூமியாகிப போயின. எங்கும் புன்னகை மீண்டும் பூத்துக் குலுங்கியது. ஆனாலும் அணுகுண்டு வீச்சின் அழிவின் சின்னமாக இன்னமும் சிதைந்து போன கட்டடங்கள் சிலவற்றை மாற்றி அவற்றை நகரங்களின் மத்தியில் வைத்து ஜப்பானியர்கள் பேணுகிறார்கள். "இவ்வளவு அழகிய நகராக ஹிரோசிமாவும் நாகசாகியும் மாறிய பின்னும் எதற்காக இந்தச் சிதைந்து போன கட்டடங்களைப் பேணி அதன் அழகைக் கெடுக்கிறீர்கள்?" என்று ஜப்பானுக்கு வருகின்ற ஒவ்வொரு வெளிநாட்டவரும் கேட்பார்கள்.

# அழிவின் நினைவேந்தி....

அதற்கு ஜப்பானியர்கள் சொல்கின்ற பதில் இதுவாகத்தான் இருக்கும்.

"நாங்கள் மீண்டும் ஒருமுறை தோற்றுப் போகக் கூடாது என்ற உணர்வு இந்தச் சிதைந்து போன கட்டடங்கள் மூலம்தான் கிடைக்கிறது. அந்த உணர்வுதான் இன்றைக்கு உலகின் மற்றெல்லோரையும் விட எங்களை சுறுசுறுப்போடு நாட்டுக்காக இயங்க வைக்கிறது. உலகின் தொழில் நுட்பத்தில் முன்னணியில் நாங்கள் இருப்பதற்கு அந்தச் சிதைந்த கட்டடங்களின் ஆன்மாக்களே உந்து சக்தி"

தமிழினம் சந்தித்த வரலாற்றுப் பேரழிவு முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்திருந்தது. இன்னமும் பிணவாடை அங்கிருந்து அகலவே இல்லை. கால்வைக்கும் இடமெல்லாம் இன்னமும் கசிகின்றது குருதி. புதைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான உடலங்களின் எச்சங்கள் இன்னமும் தேங்கிக் கிடக்கின்றன.

"எனக்கு இப்ப நடக்கிற ஒன்றும் நினைவில்லை. என்ர நினைவு முழுக்க கடைசி மூன்று மாதத்திலயும் முள்ளிவாய்க்காலில நடந்த கோரங்கள்தான் நிறைஞ்சுபோய்க்கிடக்கு. அந்த நினைவுகள்தான் எப்பவும் சுத்திச் சுழன்று வருகின்றது. அதை மீறி வேற ஒரு நினைவும் மூளைக்குள்ள போகுதில்ல" என்று இன்னமும் ஆயிரக்கணக்கானோர் அங்கலாய்க்கும் அளவுக்கு இறுதிப் போரில் நிகழ்ந்த அக்கிரமங்கள் அவர்களின் மனங்களில் ஆறாவடுவாக வலித்துக் கொண்டே இருக்கிறது.

உலகின் பல நாடுகளையும் படைகொண்டு சென்று, வென்று தலைநிமிர்ந்து நின்ற ஒரு இனம் சதுப்பு நில சகதிக்குள் வீழ்த்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, கதறக்கதறக் கொல்லப்பட்டு, பெண்களின் கற்பு ஆயிரக்கணக்கான சீருடைக் காரர்களின் முன் களவாடப்பட்டு, ஒட்டு மொத்தமாக இனத்தின் ஆன்மாவையே முள்ளிவாய்க்காலுக்குள் தொலைத்துவிட்டு தேம்பி அழக்கூட வக்கற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அல்லது வாழ்வதாக நடித்துக்கொண்டிருக்கிறோம்.

இலங்கையில் சுனாமி ஓங்கி அடித்தபோது பாதிக்கப்பட்ட கடலோரக் குடும்பங்கள் பெரும் மனவடுக்களை சுமக்க வேண்டியேற்பட்டது. அதனை ஆற்றுப்படுத்த உளவளத் துணை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஆயிரம் ஆயிரம் சுனாமிகள் ஒன்றுசேர்ந்து முள்ளிவாய்க்காலில் எங்களை புரட்டிப்போட்டிருந்தன. எங்கே வலியென்று குறிப்பாக சுட்டிக்காட்ட முடியாத அளவுக்கு எங்கும் வலியின் ஆட்சி. மனமெங்கும் வடுக்கள். வாய்விட்டு அழக்கூட வழியில்லை. நூற்றாண்டு பெருமைகள் எல்லாம் நந்திக்கடலோடு கரைபட்டுப் போனபின்னும், இருந்த எச்ச சொச்ச விடுதலையும் பட்டுப்போனபின்னும் நாங்கள் உயிரோடுதான் இருந்தோம். இழப்புகள்தான் ஒவ்வொரு இனத்தினதும் விடிவுக்கான உந்தல் புள்ளிகள்.

அரச அடக்குமுறையின் கீழ் தமிழர் நிலங்கள் வந்தபோது அவர்கள் செய்த முதல் வேலை விடுதலை குறித்து ஞாபகப்படுத்தக் கூடிய எல்லாவற்றையும் அழித்ததுதான். மாவீரர் துயிலும் இல்லங்கள், போராளிகளின் நினைவுத் தூபிகள், புலிகளின் முகாம்கள், பூங்காக்கள் என்று எல்லர்வற்றையும் ஒன்றும்விடாமல் இடித்து அழித்தார்கள். ஏனெனில் அவற்றின் ஞாபகமூட்டல்கள் தமிழர்களின் அடிமனதில் கனன்று கொண்டிருக்கும் விடுதலைத் தீயை என்றோ ஒருநாள் பற்றவைத்துவிடும் என்று அதிகாரம் பயம் கொண்டிருந்தது. எனவேதான் மே 18 இலோ அல்லது நவம்பர் 27 இலோ இறந்தோருக்கான அஞ்சலிப்புகளுக்கு தலையாட்டி மறுத்தது அதிகாரம்.

வாய்விட்டு அழுதாலாவது கொஞ்சவலி போகுமென்று நினைத்தோம். அதற்கும் விழுந்தது பூட்டு. வீட்டில் விளக்கு ஏற்றினால் கூட புனர்வாழ்வுக்குப் போகவேண்டிவருமோ என்ற பயத்தில் தேவைக்குக் கூட தீபமேற்றப் பயந்தவர்கள் பலர். ஆனாலும் இப்படியே விட்டுவிட்டால் வென்றவர்கள் எழுதிக்கொண்டிருக்கும் மகாவம்சத்தில் சொல்லப்படுவதே உண்மையாகிவிடும். எங்கள் மீது நிகழ்ந்த கொடூரங்களின் அடையாளங்களைக் காலம் ஒரு காற்றுப்போல ஊதித்தள்ளிவிடக் கூடும். நாங்கள் எதிர்கால வரலாற்றுப் புத்தகங்களில் எப்படி குவேனி அரக்கியாக்கப்பட்டாளோ அப்படி கடைவாயில் வேட்டைப் பற்களும் தலையில் இரண்டு கொம்புகளும் முளைத்த இராட்சதர்களாகவும், எங்களை அழித்தவர்கள் தேவ மைந்தர்களாகவும் மாறக்கூடிய அபாயம் உண்டு.

எனவே, எங்களின் கூட்டுவலியை எப்படியேனும் ஏதோ ஒரு விதத்தில் காலத்துக்கு சவால் விடக்கூடிய வகையில் பதிவு செய்தாக வேண்டும். முள்ளிவாய்க்கால்

> "எனக்கு இப்ப நடக்கிற ஒன்றும் நினைவில்லை. என்ர நினைவு முழுக்க கடைசி மூன்று மாதத்திலயும முள்ளிவாய்க்காலில் நடந்த கோரங்கள்தான் நிறைஞ்சுபோய்க் கிடக்கு

அவலத்தின் பதிவு ஈழத்தில்தான் முளைக்க வேண்டும் என்று இல்லையே. எங்களின் எல்லாவலிகளும் தொப்புள் கொடிவழியே ஊடுகடத்தப்பட்டு தமிழகத்தின் தஞ்சையில் முளைகொள்ளத் தொடங்கியது. தன்னலம் பாராத தமிழ்த் தொண்டன் பழ.நெடுமாறனின் தலைமையில் ஈழ ஆதரவாளர்கள் இந்தப் பணியில் இறங்கினார்கள். நடராசனின் காணியில் சிற்பி வீரசந்தானம் குழுவினர் ஊணுறக்கம் பாராது உழைத்தார்கள். உளிகளின் ஓசையில் எங்களின் வலி படிமங்களாக எழத்தொடங்கியது.முள்ளிவாய்க்கால் முற்றம் என்ற பெயரோடு எக்காலமும் நிலைத்து நிற்கும் முற்றம் விரிந்தது.

ஈழத்தில் நடந்ததை தமிழகத்தில் காட்சிப்படுத்தி என்ன பயன் என்று சிலர் கேட்கக் கூடும். யூதர்கள் தங்கள் தேசத்தைவிட்டு துரத்தியடிக்கப்பட்ட போது, அவர்களின் இனம் எங்களைவிடவும் அவமானப்படுத் தப்பட்டு குற்றுயிரும் குலையுயிருமாய் உலகின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டபோது அவர்கள் திக்கொன்றாய் சிதறி ஓடு வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஆனால் அவர்கள் தம் மனதில் தாயகத்தைச் சுமந்து சென்றார்கள். எங்கெல்லாம் அவர்கள் குடிகொண்டார்களோ அங்கெல்லாம் தங்கள் தாயகத்து நினைவுகளை நிறுவிக்கொண்டார் கள். இந்த நினைவுகள் ஆயிரக்கணக்கான வருடங்களாக தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டதால்தான் இன்றைக்கு இஸ்ரேல் என்ற தேசத்தை உலகில் தமக் கானதாக அவர்கள் உருவாக்க முடிந்தது. அதேபோன்றே எங்களுக்கான தேசம் பற்றிய கனவுகளையும் முள்ளிவாய்க்கால் முற்றம் போன்ற வலிசுமக்கும் நினைவுச் சின்னங்களே எதிர்காலச் சந்ததியிடம் கொண்டுசெல்லும் வல்லமை மிக்கவை. இன்னும் முள்ளிவாய்க்கால் முற்றங்கள் பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, லண்டன் என்று புலம் பெயர் தேசங்களிலும் வருங்காலங்களில் முளைக்கக் கூடும். அங்கிருந்து எழுகின்ற வேர்களின் ஒன்றிப்பில் என்றைக்கோ ஓர் நாள் எமக்கான தேசம் என்ற விருட்சம் பெருமரமாய் முளைக்கத்தான் போகிறது.


## கொடுங்கனவின் சாட்சியம்

மனுஷ்யபுத்திரன்

**தஞ்சையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்கு போயிருந்தேன். மாநாட்டுப் பந்தலில் மகளிர் அரங்கம் நடந்துகொண்டிருக்கிறது. பெண்கள் கண்ணீரும் கோபமுமாக பேசிக்கொண்டிருந்தார்கள். காசி ஆனந்தனுடன் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்துவிட்டு பழ. நெடுமாறன் அவர்களுக்கும் வீர சந்தானத்திற்கும் ஒரு வணக்கம் வைத்துவிட்டு நினைவு முற்றத்தைப் பார்க்கச் சென்றேன்.**

**தமிழர்களின் தியாக வரலாறு குறித்த மிகச் சிறந்த ஆவணப் பதிவு. ஒரு புறம் சுதந்திரப் போரிலும் மொழிப் போரிலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் உயிர் நீத்த தமிழக தியாகிகளின் படங்களும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இன்னொரு புறம் ஈழ விடுதலைப் போரில் குருதிப் பலியானவர்களின் வரலாறுகள். பார்க்க பார்க்க மனம் கனத்துக் கசந்து போனது. தமிழர்களின் குருதிப் புனலுக்கு இந்த நினைவு முற்றம் ஒரு சாட்சியம்.**

**போர்க் காட்சிகள் சிற்பமாக செதுக்கப்பட்டிருக்கின்றன. சிதைந்த உடல்களின் வெளி ஒரு கொடுங் கனவாக நம்முன் எழுந்து நிற்கிறது.. அந்த கனவின்மீது இருட்டு மெல்ல வந்து கவிழ்வதைப் பார்த்துகொண்டிருந்தேன். தமிழர்களின்மீது படியும் வரலாற்று இருள் அல்லவா அது.....**



சிந்தனையைக் கிளறி சிரிப்பை உண்டாக்கும் கலை வடிவங்களை நகைச்சுவை (comedy) எனலாம். நகைச்சுவையின் இறுதிப் பெறுபேறு மகிழ்ச்சியே நகைச்சுவையின் நிறைவாக உற்சாகம் பிறக்கும்.

மன இறுக்கம், மன உளைச்சல் போன்றவற்றி லிருந்து விடுபட்டு, நல்ல ஆரோக்கியமான மன நிலையைப் பேண நகைச்சுவை உதவும்.

இரவும் பகலும் என்மீதுள்ள பயங்கரமான அழுத்தங்களால், நான் எப்பவோ செத்திருப்பேன், எனக்குச் சிரிக்கத் தெரிந்திருக்காவிட்டால் - என்று ஆபிரகாம் லிங்கனே சொல்லியிருக்கின்றார்

என்னிடம் நேரடியாகச் சொல்லவில்லை. அவர் சொல்லியதை யாரோ எழுதி வைத்தனர். நான் வாசிச்சனான்.

ஆக்குவதற்கோ, அல்லது அதனை அனுபவிப்பதற்கோ நிறைந்த புத்திசாலித்தனம், புத்திக் கூர்மை, மூளை விரைந்து செயற்படும் தன்மை, என பல திறன்களும், பல்வகைமை ஆற்றலும், சில வேளைகளில் ஓரளவு இரக்கமற்ற தன்மை, முரட்டுத்தனம், சட்ட மீறல் எனப் பல குணாதிசயங்கள் இருக்க வேண்டும். எது எவ்வாறா யினும் முரணிலிருந்து முகிழ்த்தெழும் மகிழ்ச்சியே இக் கலை வடிவத்தின் இறுதிப் பெறுபேறு என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை.

மேற் கூறப்பட்டவற்றைக் கருத்திற்கொண்டு, நகைச் சுவை என்பதனை முசுப்பாத்தி என்பதே இதற்கான பயன்பாட்டிலுள்ள நல்ல ஒரு நாட்டுப்புறச் சொல் என்று சொல்லலாம். முசுப்பாத்தி என்பது பொழுது போக்கு என்று அகராதி கூறினாலும், அது அதனை விட ஆழ்ந்த பொருளில் நம்மவர்களால் பயன்படுத்தப்படுகின்றது.



# சிந்தனை + சிரிப்பு = நகைச்சுவை



என்னைச் சிரிக்க வைப்பவர்களை நான் விரும்புகின்றேன், உண்மையாக நான் நினைக்கிறேன், நான் அதிகமாக விரும்புவது சிரிப்பைத்தான். அநேக நோய்களை அது குணப் படுத்துகின்றது. ஒருவரில் இருக்க வேண்டிய மிக முக்கிய விடயம் சிரிப்புத்தான் என்று அடறிகெப் பேரண் என்பவர் சொல்லியிருக்கின் றர்.

பார்த்தால் உயிரினங்களிலை மனிசர் மட்டும்தான் இப்படிச் சொல்லியிருப்பதனைப் பார்த்திருக்கிறன். கேட்டிருக்கிறன். வேறொரு உயிரினமும் சொன்னதாகத் தெரியவில்லை. அதுகள் சொல்லியிருக்காது. ஏனெண்டால் சிரிக்கத் தெரிந்த உயிரினம் மனிதன் மட்டும்தான் என்றும் யாரோவோ சொல்லியிருக்கீனம்..

நகைச்சுவை எனும் இக்கலை வடிவத்தை காரண காரியமின்றிய அபத்தமான செயற்பாடுகளும் இதனுள் அடங்கும்.

முசுப்பாற்றல் என்றால் இளைப்பாற்றல். ஒரு முசுப்பாத்திக்குப் பின்னர் ஒரு வகை முசுப்பாற்றல் பிறப்பதனை அனுபவத்தில் காணலாம்.

(சிலரை முசுறு என்போம். முசுறு என்றால் முன்கோபி. எங்கள் வீட்டிற்கு முன்னும் ஒரு கோபி இருக்கின்றார். அவர் முன் கோபியா, பின் கோபியா தெரியவில்லை. ஆனால் நகைச்சுவையாளர்கள் பொதுவாக எதனையும் சீரியஸாக எடுத்து கோபப்பட மாட்டார்கள்)

வாழ்க்கையின் ஓர் அம்சம் அல்லது ஒரு சம்பவம் நகைச் சுவையாக அமையலாம்.

ஒரு சில சம்பவங்களின் தொடர் பின் விளைவு நகைச்சுவையாக அமையலாம்.

நகைச்சுவையாளனை மகிழ்ச்சி ஏற்படுத்துபவன் என்று சொல்லலாம். இவர்களைக் கொமடியன் (Comedian) என்பர். (கவனத்திற் கொள்ளவும் - கொமடியன் - கொடியவன் அல்ல).

நகைச்சுவை பல இடங்களில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

நமது பழந் தமிழ் இலக்கியங்களில் இதனை பரந்து பட்டுக் காணலாம்.

**இரவும் பகலும் என்மீதுள்ள பயங்கரமான அழுத்தங்களால், நான் எப்பவோ செத்திருப்பேன், எனக்குச் சிரிக்கத் தெரிந்திருக்காவிட்டால் - என்று ஆபிரகாம் லிங்கனே சொல்லியிருக்கின்றார்**

தற்கால ஊடகங்கள் பல இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இத்தகைய நகைச்சுவை இருந்தாற்றான் தமது ஊடகங்கள் பலராலும் விரும்பி நுகர்வு செய்யப்படுமென பலரும் கருதுகின்றனர். அதனாற்றான் அரசியல் மட்டும் உள்ள பத்திரிகை அல்லது ஊடகங்களில் கேலிச்சித்திரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

நகைச்சுவைக் கென்றே தனி இதழ் வெளியிட்ட பெருமை யாழ்ப்பாணத் தவருக்கு உண்டு.

தொடர்ச்சியாகப் பல வருடங்கள் வெளி வந்த சிரித்திரன் சஞ்சிகை போல இதுவரை வெளி வந்ததுமில்லை. இனி வெளிவரப்போவதுமில்லை. அத்தகைய ஆற்றல் மிக்கவர் அமரர் சிவஞான சுந்தரம் என்கின்ற சுந் தர். அவர் ஒரு காட்டூனிஸ்ட். ஒரு எழுத்தாளர். அவருடைய சவாரித்தம்பர், மைனர் மைச்சான், மிஸ்டர் அன்ட் மிஸ்ஸிஸ் டாமோடிரன் இப்பவும் வாழுகின்ற பாத்திரங்கள். அதாவது இப்ப வாழுகிற மனிசரிலை அவையளைக் காணலாம். அப் பேற்பட்ட வாழும் பாத்திரங்களைப் படைத்த படைப் பாளி. புதுமையான , முற்போக்குச் சிந்தனையா ளராக இருந்தவர் சிவஞானசுந்தரம் - சுந்தர ஐயா அவர்கள்.

## கார்த்தியின் அடுத்த படம்

கார்த்தி நடிப்பில் தீபாவளிக்கு வெளிவந்த அழகு ராஜா படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

இருப்பினும் வெங்கட்பிரபு இயக்கத்தில் அடுத்து வெளிவர இருக்கும் பிரியாணி படத்தை ரொம்பவே நம்பியிருக்கிறார் கார்த்தி.

இப்படத்தைத் தொடர்ந்து தற்போது அட்டகத்தி ரஞ்சித் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் 2011ம் ஆண்டு வெளிவந்த மௌனகுரு படத்தை இயக்கிய சாந்தகுமார் இயக்கும் புதிய படத்தில் நடிக்க கார்த்தி ஒப்பந்த மாகியிருக்கிறார்.

மௌனகுரு படம் வித்தியாசமான கதை யமைப் பால் மிகவும் பேசப்பட்ட படம். இப்படத்தில் அருள்நிதி, இனியா, ஜான் விஜய் உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

இந்நிலையில் கார்த்தி நடிப்பில் முழுக்க முழுக்க மாறுபட்ட கதைக் களத்துடன் இந்தப் படத்தை இயக்க விருக்கிறார் சாந்தகுமார்.

# ராணிகளின் மோதல்



மலையாள வரவுகளான நயன்தாரா- நஸ்ரியாவுக்கு இடையேயான மோதலுக்கு யார் காரணம் என்ற தகவல் வெளியே கசிந்துள்ளது.

நையாண்டி படத்தில் ஏற்பட்ட தொப்புள் விவகாரத்தை நஸ்ரியா பெரிதுபடுத்திவிட்டதாக நயன்தாரா கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்த நஸ்ரியா, என் விஷயத்தில் அவர் தலையிடுவதை விரும்பவில்லை, நயன்தாராவின் அறிவுரையும் எனக்கு தேவையில்லை என தெரிவித்தார்.

இந்நிலையில் இவர்களின் மோதலுக்கு பின்னணியில் இருப்பது ஆர்யா தான் என கோடம்பாக்கத்தில் பேசப்படுகிறது.

ஆர்யா, நயன்தாரா, நஸ்ரியா என மூவரும் சேர்ந்து ராஜா ராணி படத்தில் நடித்தனர். இதில் நடித்தபோது ஆர்யா- நயன்தாரா இடையே நெருக்கம் ஏற்பட்டது.

பாதி படப்பிடிப்புமுடிந்த நிலையில், ஒரு முக்கிய கேரக்டருக்காக சேர்க்கப்பட்டவர் நஸ்ரியா. அவர் நடிக்க வரும்போதெல்லாம் ஆர்யா அவரை ஜாலியாக கலாய்ப்பாராம். இதனால் ஏற்பட்ட கடுப்பைத்தான் இப்போது கொட்டியிருக்கிறார் நயன்தாரா.

அன்பான மனைவி, அழகான குழந்தை ஆத்மார்த்தமான பணி என வேந்தனது வாழ்க்கை அமைந்திருந்தது.

சிறுகதை

# நிறம்

பொலிகையூர்
சு.க.சிந்துதாசன்



மகனின் பிறந்தநாள் ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள் கயல்விழி. அவளுக்கு ஒரேயொரு மகன். எட்டு வயதாகும் அவன் தாயின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்தவனாயும் விவேகமுடையவனாகவும் காணப்பட்டான். இந்தியாவுக்கு வந்து நான்கு வருடங்கள் உருண்டோடிய நிலையில் ஐந்து வருடங்களின் பின் நாளை தான் அவனது பிறந்தநாள் கொண்டாடப் படவிருக்கிறது. கயல்விழியின் பெற்றோரின் விருப்புக்கமையவே மகனின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு கயல்விழி சம்மதித்திருந்தாள்.

புதிய இடம். புதிய மனிதர்கள். என் தாய், தந்தை, மகன் உறவுகளை விட மற்றவையெல்லாம் புதியவை தான். பழக்கப்படாத இடத்தில் வாழ்க்கையை வாழ்தலென்பது கடினம் தான். விரும்பியோ விரும்பாமலோ அதைப் பழக்கப்படுத்த முயற்சித்தபடி வாழ்ந்து கொண்டிருந்தாள்.

கயல்விழி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். ஆனாலும் பாடசாலைக் காலம் முடிந்த பின்பு பதினைந்து வருடங்களாக வன்னியிலேயே வாழ்ந்திருக்கிறாள். அவள் பட்ட துன்ப துயரங்களுக்கும் அனுபவங்களுக்கும் அளவேயில்லை. எதையும் எதிர்கொள்ளும் திராணி அவளுள் இயல்பாயே இருந்து வந்தது. அதனால் தான் இன்னும் அவள் இயங்கிக் கொண்டிருக்கிறாள்.

கயல்விழி தன் பள்ளிப்பருவத்திலிருந்தே தன் மைத்துனனைக் காதலித்தாள். ஆனால் அவன் வாழ்க்கை திசைமாறியிருந்த போது தானும் அவன் வழியிலேயே சென்று காலவோட்டத்தில் மைத்துனன் அருள் வேந்தனையே கைபிடித்துக் கொண்டவள். எது சரியென்றுபடுகிறதோ அதைச் செய்ய அவள் என்றும் பின்நின்றதில்லை.

திருமணத்தின் பின்னர் அவள் தனது முன்னைய பணியிலிருந்து சற்று ஒதுங்கிக் கொண்டாள் என்றே கூறலாம். வேந்தனுக்கும் கயல்விழியை ஒரு குடும்பப் பெண்ணாய்ப் பார்ப்பதிலேயே ஆர்வம் அதிகமாயிருந்தது. வேந்தனது பணியும் பொறுப்பும் அதிகமென்பதால் குடும்பம் சார்ந்த அத்தனை விடயங்களையும் கயல் விழியே கவனித்து வந்தாள்.

அன்பான மனைவி, அழகான குழந்தை ஆத்மார்த்தமான பணி என வேந்தனது வாழ்க்கை அமைந்திருந்தது. ஆளுமை மிக்க ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய அத்தனை இயல்புகளும் அவனிடமிருந்தன.

மகனின் முதலாவது பிறந்தநாளை தன் விருப்பத்துக்கு ஏற்ப நல்ல சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்த வேந்தன் மகனுக்கு எந்தக் குறையும் விடக்கூடாது என்பதில் தெளிவாய் இருந்தான். மகனை இப்படித்தான் வளர்க்க வேண்டும் அவன் எதிர்காலத்தில் இப்படித்தான் வரவேண்டும் அதற்கு அவனை இப்படித்தான் நடத்த வேண்டும் என்றெல்லாம் கயல்விழிக்கு விரிவுரை நிகழ்த்தும் வேந்தன் மகனின் குறும்புகளிலும் செயல்களிலும் நெகிழ்ந்தும் போவான்.

விடுப்பில் வரும் போது வீட்டுக்கு வந்தவுடன் அவன் முதலில் அழைப்பது தன் மகனைத்தான். "நான் ஒருத்தி இருக்கிறேன். அது உங்களுக்கு ஞாபகம் இருந்தாத்தானே. முந்தி வந்த செவிய பிந்தி வந்த கொம்பு மறைச்சிச்சாம்" இவ்வாறாக கோபமுறும் கயல்விழியை சமாதானப்படுத்த "சரி இனிவரும் போது நான் கயல்குட்டியெண்டே கூப்பிட்டுக்கொண்டுவாறன். சரியா? எனச் சொல்லிச் சிரிப்பான். "நாடும் வீடும் நமக்கிரு கண்கள்'' இது வேந்தனின் தாரக மந்திரமாகவிருந்தது. சொல்லில் மட்டுமல்ல செயலிலும் அவன் அதை நிரூபித்துக் கொண்டிருந்தான். பயம் என்பதை அவன் என்றுமே அறியாதவனாய் இயங்கிக் கொண்டிருந்தான். வன்னிப் பெருநிலப் பரப்பின் இறுதிப் போர்த் தருணங்கள் அனைவரையும் அலைவுறச் செய்த போது தன் மனைவி மகனுக்காக அவன் சில அறிவுரைகள் வழங்கியிருந்தான்.

''நான் வீரச்.....'' வேந்தனின் வாயைத் தன் கைகளால் பொத்திய கயல்விழி "அப்படி ஒண்டும் நடக்காது. இந்தச் சண்டையில நாங்கள் எல்லாரும் உயிர் பிழைப்பம். நீங்கள் அநாவசியமாக கணக்க யோசிக்கிறியள். இனி உப்பிடிச் சொல்லாதையுங்கோ"

'அதுக்கில்லை கயல்விழி' எனக்கு ஓரளவுக்குத் தெரியும். நாங்கள் தோற்றுப் போனா நான் உயிருடன் வரமாட்டேன். அப்பிடி எனக்கென்னவும் ஆச்சுதெண்டாலும் மகனுக்காக நீ இஞ்சையிருந்து தப்பிப் போகணும். நீயும் பிள்ளையும் மாமா, மாமியைக் கூட்டிக் கொண்டு இந்தியா போறதுக்குரிய ஒழுங்கை நான் செய்து தருவன். அதன் படி நீ மறுக்காமப் போக வேணும்" இது அவன் கட்டளையாகவும் அமைந்தது.

அது போல போரின் உச்ச நிலையில் கயல்விழி வேந்தனை விட்டுப் புறப்பட்டு இந்தியா வந்து விட்டாள். அதன் பின் ஒரு சில மாதங்கள் கழித்து அருள்வேந்தன் குறித்த தகவல் ஒன்று கயல் விழிக்குத் தெரிய வந்தது. அது "படையினரிடம் சரணடைய விருப்பமின்றி அவன் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு வீரச் சாவடைந்தான்" என்பதாகும்.

கயல்விழி அழவில்லை. வேந்தனின் தீர்க்க தரிசனத்தை எண்ணி வியந்தாள். தன் கணவனின் துணிவையும் தளரா மனதையும் நினைத்து பெருமிதங் கொண்டாள். ஆனால் இனி வேந்தனைச் சந்திக்கவே முடியாது. என்ற எண்ணம் மேலேழ கயல்விழியின் கன்னங்களை ஒரிரு கண்ணீர் துளிகள் நனைக்கத்தான் செய்தது.

பெற்றோரின் தயவில் மகனைச் சீராக வளர்த்து வந்த கயல்விழி கடந்த சில ஆண்டுகள் மகனின் பிறந்த நாளைக் கொண்டாடாமல் தவிர்த்திருந்தாள். ஆனால் இப்போது மகனின் முன்னைய பிறந்த நாட்களின் ஞாபகமும் அதன் போது அவள் கண்ட இன்பமும் பெற்றோரின் விருப்பமுமாய் சேர்ந்து மகனின் பிறந்த நாளுக்கான ஏற்பாட்டு வேலையில் அவளை இறக்கியிருந்தது.

"அம்மா! இந்த உடுப்பு எனக்குப் பிடிக்கலை. இதை மாத்தி எடுப்பம் அம்மா"

''எடுக்கைக்க பிடிச்சிருக்கு எண்டு தானே சொன்னனீ. இப்ப பிடிக்கலை எண்டா?" "அப்ப நல்லது மாதிரி இருந்திச்சு" "சரி இப்ப என்ன? மாத்த வேணும். அப்பிடித்தானே'' ஆம் எனத் தலையசைத்த மகன் "பச்சை நிறச் சட்டைதான் எனக்கு வேணும்" என்றான்.

மகனின் வார்த்தைகளைக் கேட்ட தாய் சற்று நேரம் பதிலேதும் கூறாமல் அப்படியே நின்றுவிட்டாள். ''பச்சை'' இது வேந்தனுக்குப் பிடித்த நிறம். அதனால் கயல்விழிக்கும் அந்த நிறம் பிடித்திருந்தது. இப்போ மகனுக்கும் அது பிடித்திருந்த போது அவளுக்கு ஏற்பட்டது மகிழ்வா? அதிர்ச்சியா? எதுவென்று உணரமுடியாத வளாய் நின்றாள்.

மீண்டும் "அம்மா! அப்பா போடுற மாதிரி உடுப்பு. அது தான் வடிவாய் இருக்கும்"

"இல்லைத்தம்பி. அது..." அது தான் வேணும். வேற உடுப்பு நான் போடமாட்டேன்" அடம்பிடித்த மகனைச் சமாளிக்க முடியாதவளாய் மொட்டை மாடியிலிருந்து தூரவாய் தன் பார்வையைச் செலுத்தினாள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை பச்சை வயல் பரந்து விரிந்திருந்தது.

▪ சர்வானந்தன்

1972ம் ஆண்டு அப்போது நான் ஒன்பது வயதுச் சிறுவன். அந்தக்காலத்தில் எங்கள் ஊரான சுன்னாகத்தில் உள்ள எமது குலதெய்வமான அம்மன்கோவிலில் இருந்து தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில் பத்தாம் திருவிழா அன்று பஜனை பாடிக்கொண்டு சுமார் இருபது கிலோமீற்றர் பாதயாத்திரையாகப் 1983 ம் ஆண்டு வரை போவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் வீட்டில் அப்பா, அண்ணாமார் போகும்போது "நானும் வருவேன்" என்று அழுது அடம்பிடிப்பது வழக்கம். "நீண்ட தூரம் நீ நடக்கமாட்டாய், அடுத்தவருடம் போகலாம்" என்று சாக்குப்போக்குச் சொல்லிவிடுவார்கள். "அடுத்தவருடம்... அடுத்தவருடம்... என்று தவணை சொல்லி ஏமாற்றியது போதும் என்று இந்தத் தடவை எப்படியும் என்னைக்




கூட்டிக்கொண்டுபோகவேண்டும்" என்று விடாப்பிடியாக நின்றதால் அவர்களும் இறங்கிவந்து சம்மதித்தனர். ஆனால் ஒரு நிபந்தனை வேட்டிகட்டிக்கொண்டு வரவேண்டும். வேட்டி என்றதும் சிறிது தயக்கம், பயம் வந்துவிட்டது என்றாலும் ஒரு அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தலையாட்டி விட்டேன்.

அப்பாவின் சால்வை வேட்டியாக மாறி என் இடுப்பில் வந்து ஒட்டிக் கொண்டது. பெரும் குதூகலத்தில் வீட்டிலிருந்து புறப்பட்டேன். அந்தக் குதூகலம் சிலநிமிடங்களே நீடித்தது. காரணம் சில மீற்றர் தூரம் சென்றதும் ஒருகையை வேட்டியில் பிடித்துக்கொண்டு முதுகை கூனியபடி நடக்கவேண்டிய நிலைமை எனக்கு. சேர்ந்து வந்தவர்கள் சரிசெய்து கட்டிவிட்டனர். துன்பம் எதற்கு என்று நினைத்து எங்கள் கோயிலில் போய் ஒரு ஓரத்தில் உட்கார்ந்துவிட்டேன். இரண்டு மணியளவில் செல்வச் சந்நிதிக்கு பாதயாத்திரை புறப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் சில நூறு பேர்களுடன் ஆரம்பித்து முடியும்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடி விடுவார்கள். சுன்னாகத்திலிருந்து ஆரம்பித்து ஏழாலை தெற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை வடக்கு, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், அச்சுவேலி, தம்பாலை இன்னும் சிறிய ஊர்கள் வழியாக செல்வச்சந்நிதி கோவிலை இரவு பத்து மணியளவில் சென்றடையும் இந்தப் பஜனைக் குழு. இடையில் பல வீடுகளில் பல கோவில்களில் சிறிதுநேரம் தங்கி உணவு, குடிவகைகளை உட்கொண்டபடியே மிகவும் குதூகலத்துடனும், பக்திப்பரவசத்துடனும் அடியார்கள் நடந்து செல்வார்கள். பார்ப்பதற்கு மிகவும் கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். ஆனால் அந்த எட்டு மணிநேரமும் இந்த வேட்டியுடன் நான் பட்ட பாடுகளை வார்த்தையில் சொல்லமுடியாது. சிலவேளைகளில் என்னை அறியாமலே அவிழ்ந்து விழுந்ததும் உண்டு. அப்பா பஜனைக் குழுவினருடன் சேர்ந்து பாடிக்கொண்டே வந்தார். அண்ணாமார் அவர்களின் நண்பர்களுடன் சேர்ந்து போய்விட்டனர். எனக்கு உதவிசெய்யவென பெரிதாக யாரும் இல்லை. அச்சுவேலியில் எனது பரிதாப நிலையை பார்த்த ஒரு பாட்டி "தம்பி! இந்த வேட்டியை கழற்றி தலையில் போட்டுக்கொண்டு நட" என்றார். ஒருவாறு செல்வசந்நிதி கோவிலை நெருங்கிவிட்டோம்.

அப்போது இப்போது உள்ளது போல் பாலத்தைக் கடந்து சுற்றி வரவேண்டியதில்லை. காற்றாடி இருந்த இடத்திற்கு அருகே பேருந்துத் தரிப்பிடம் இருந்தது. அதற்கு குறுக்காக திருவிழாக் காலங்களில் மட்டும் மிகவும் குறுகிய பாலம் கட்டியிருக்கும் அதனூடாக கோயிலைச் சென்றடையலாம். நன்றாக இருண்டுவிட்டது காற்றும் பலமாக வீசியது அலைகளும் பலமாக வந்து மோதி நனைத்து விட்டது. சும்மாவே கழன்று விழுகிற வேட்டிக்கு காற்று வேறு.....கோயில் நெருங்குவதால் பஜனையும் சூடு பிடித்துவிட்டது. நான் உடனே ஓடிப்போய் அப்பாவின் கையைப் பிடித்து விட்டேன். அவரின் ஒருகையில் பஜனைப் புத்தகம், ஒருகையில் நான், எனது ஒருகை அப்பாவின் கையோடு, மறுகை கிட்டத்தட்ட முழுவதும் கழன்றுவிட்ட எனது வேட்டியைப் பிடித்தபடி. எல்லோரின் பார்வையும் சந்நிதியான் மேல் இல்லை. எங்கள்மேல் தான் இருந்தது. நாம் நடந்து போனவிதம் அப்படியொரு கண்கொள்ளாக்காட்சி என்று பார்த்தவர்கள் சொன்னார்கள். அதேநேரம் அங்கேயிருந்த கடையில் இருந்து ஒருபாடல் மீண்டும் மீண்டும் ஒலித்தது. அப்போது அது மிகவும் பிரபல்யமான பாடல். நாம் பாலத்தைக் கடந்ததும் எனக்குஅறிமுகமே இல்லாத ஒருவர் சொன்னார் அண்மையில் நான் தமிழகம் போனபோது இப்பாடல் இடம்பெற்ற படத்தினைப் பார்த்தேன், இப்பாடலில் எம்ஜிஆர், ஹெலன் ஆடுவது போலவே உங்கள் இருவரின் நடையும் பாலத்தைக் கடக்கும்போது இருந்ததாக சொன்னார். நடித்தும் காட்டினார். அங்கிருந்தவர்கள் எல்லோருமே விழுந்து.... விழுந்து.... சிரித்தார்கள். எனவே அழுது, அடம்பிடித்து ஒரு காரியத்தை சாதிக்க முடியாது. மாறாக அவமானத்தையே சந்திக்க நேரிடும்







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அனுபவசாலிகளின் ஆலோசனையை ஏற்று செயல்படும், மேஷ ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், சந்திரன் தவிர, மற்ற கிரகங்கள் சாதகமற்ற இடங்களில் உள்ளனர். இதனால், உங்களின் சமூக அந்தஸ்துக்கு, சிலர் சிரமம் உருவாக்குகிற வகையில் செயல்படுவர். நீதி, நேர்மை குணம் தொடர்ந்து பின்பற்றுவதால், இடையூறுகளை தவிர்க்கலாம். அளவான பணவரவில் குடும்பச் செலவுகளில் சிக்கனம் மேற்கொள்வீர்கள். குடும்ப நலனில் கூடுதல் அக்கறை கொள்வர். மாணவர்கள், பயிற்சியினால் மட்டுமே, சீரான தேர்ச்சி விகிதம் பெற இயலும்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

செயல் நிறைவேற பொறுமையுடன் பணி புரியும், ரிஷப ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். புதிய வாய்ப்பு வந்து உதவும். எவரிடமும் இனிய வார்த்தை பேசி அன்பு, நட்பை வளர்ப்பீர்கள். இல்லறத்துணையின் கருத்து, குடும்பத்திற்கு நலமும், வளமும் சேர்ப்பதாக அமையும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பு, சன்மானம் பெறுவர். குடும்ப பெண்கள், பணவசதிக்கேற்ப தங்கநகை வாங்குவர்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

எதிர்கால வாழ்வு சிறக்க உரிய திட்டமிடும், மிதுன ராசிக்காரர்களே!

இந்தவாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், கேது, சந்திரன் நற்பலன் வழங்குகின்றனர். மற்ற கிரகங்கள், எதிர்மறை பலன் தரும் வகையில் உள்ளனர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், குடும்பத்தின் அத்தியவசிய தேவைகளுக்கு மட்டும் பணம் செலவு செய்வது நல்லது. மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது.




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உடல் நலம் பேணுவதில் உரிய கவனமுள்ள, கடக ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் உள்ள புதன், தினகதி சுழற்சி கிரகமான சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். தொழிலில் வளர்ச்சியும், கூடுதல் பணவரவும் பெற, புதிய வாய்ப்பு உருவாகும். இல்லறத்துணை சுய கவுரவ எண்ணங்களுடன் நடந்து கொள்வார். பணியாளர்கள் லட்சிய மனதுடன் பணிபுரிவதால் மட்டுமே, எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய இயலும். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பதால் தேர்ச்சி விகிதம் சீராகும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

வெற்றிப் பாதையை சமயோசிதமாக நிர்ணயம் செய்கின்ற, சிம்ம ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு புதன், கேது, செவ்வாய் தவிர மற்ற கிரகங்கள் அளப்பரிய வகையில் நற்பலன் வழங்குகின்றனர். இதனால், பணிகள் எளிதாக நிறைவேறி, அதிக நன்மை பெற்றுத் தரும். செல்வ வளம் அதிகரித்து, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை உருவாக்கும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணையின் உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். மாணவர் நன்றாக படித்து, கூடுதல் தேர்ச்சி விகிதம் பெறுவர்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

குடும்ப நலன் காப்பதில் அக்கறைஉள்ள, கன்னி ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் உள்ள சுக்கிரன், தினகதி சுழற்சி கிரகமான சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். இல்லறத்துணை குடும்ப பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வர். தொழிலில், சில நடைமுறை மாற்றம் பின்பற்றுவதால் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். பெண்கள், உறவினர்களை மனமுவந்து உபசரிப்பர். மாணவர்கள், படிப்பில் முன்னேற கூடுதல் பயிற்சி மேற்கொள்வர்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பேச்சு, செயலில் ரசனை மனப்பாங்கு உள்ள, துலாம் ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு மூன்றில் சுக்கிரன், ஒன்பதில் குரு, ஆதாய ஸ்தானத்தில் செவ்வாய் அனுகூல அமர்வாக உள்ளனர். எந்த செயலையும் நிதானம், நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். நற்பலன் அதிகரித்து, உபரி பண வரவை பெற்றுத் தரும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணை அதிக அன்பு பாராட்டுவர். தொழிலில் வளர்ச்சி பெற, சில மாற்றம் உருவாக்குவீர்கள்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

இயன்ற அளவில் சமூக சேவைப்பணி புரியும், விருச்சிக ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், கேது நற்பலன் வழங்குகின்றனர். புத்திரர் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழியில் செயல்பட உதவுவீர்கள். உணவு பழக்கத்தில், உரிய கட்டுப்பாடு பின்பற்ற வேண்டும். அரசியல்வாதிகள் அதிகாரிகளின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கப் பெறுவர். பெண்கள், குடும்ப பெருமை பாதுகாப்பதில் அக்கறை கொள்வர். மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர, பிற விஷயம் குறித்து விவாதம் பேச வேண்டாம்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

வாழ்வின் அனுபவங்களை பாடமாக பின்பற்றுகிற, தனுசு ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், கேது தவிர அத்தனை கிரகங்களும், அளப்பரிய நற்பலன்களை வழங்குகிற இடங்களில் உள்ளனர். இதனால், உங்கள் நடை, உடை, செயலில் புதிய வசீகரம் உருவாகும். எதிர்கால வாழ்வு சிறக்க நண்பர், உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து, குடும்பத்தில் மகிழ்ச்சிகர சூழ்நிலை உருவாக்குவீர்கள். தொழிலில் அபிவிருத்திப் பணி புரிவீர்கள். உற்பத்தி, விற்பனை செழிக்கும்.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

தன் இன்ப, துன்பம் பற்றி பிறரிடம் கூறத் தயங்கும், மகர ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன் நற்பலன் தருகின்றனர். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பை அதிகரிக்கும் வகையில் செயல்படுவீர்கள். நெருப்பு, மின்சார உபகரணங்களை பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் வேண்டும். இல்லறத்துணை சிறந்த ஆலோசனை கூறுவர். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய வாடிக்கையாளர் காரணமாக இருப்பர். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற்றுவர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து படிப்பில் முன்னேற்றம் அடைவர்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

சுபநிகழ்ச்சிகளில் தன் செயலால் வரவேற்பு பெறும், கும்ப ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு நற்பலன் வழங்குகிற வகையில், கேது, குரு, சுக்கிரனின் அமர்வு உள்ளது. உடல்நல ஆரோக்கியம் தகுந்த முறையில் பாதுகாத்து, பணிகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொள்வீர்கள். . நிர்பந்த பணக்கடனில், ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய மதிப்பு தருவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு, தாமதமின்றி சரி செய்வீர்கள். மாணவர்கள், படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை திருப்திகரமாக அமையும்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மனதில் ஆன்மிக எண்ணங்களை நாளும் வளர்த்திடும், மீன ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், புதன், சந்திரன் மட்டுமே நற்பலன் வழங்குகின்றனர். புத்திரரின் செயல் குறைகளை சரிசெய்து நல்வழி நடத்துவீர்கள். உடல்நலம் ஆரோக்கிய பலத்துடன் இருக்கும். இல்லறத்துணை மனதில், உங்கள் மீதான நம்பிக்கை குறையாத அளவில் நடந்து கொள்ள வேண்டும். அதிக உழைப்பினால் தொழிலில் உற்பத்தி, விற்பனையை சராசரி அளவில் கொண்டு வரலாம். பணியாளர்களுக்கு, பணி இலக்கு நிறைவேற்றுவதில் தாமதம் உருவாகும். பெண்கள், தங்கநகை இரவல் கொடுக்க, வாங்க கூடாது. மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

இதற்காகத் தமது அறுபது வயதில் ஓய்வு பெறும் வரை எனது தந்தை நாள் தோறும் கடுமையாக உழைத்தார். ஒருபுறம் அப்பா உழைத்து, வருவாயைக் கிரமமாகக் கொண்டு வர, மறுபுறம் அம்மா வீட்டு நிர்வாகத்தைச் கவனித்துக் கொண்டார். சிக்கனமாகச் செலவு செய்து, கடன் இல்லாமலும் உணவுத் தட்டுப்பாடு இல்லாமலும் பார்த்துக் கொண்டார். பின்னர், பிள்ளைகள் வளர்ந்து பள்ளி செல்லத் தொடங்கிய பின்னர்தான், அம்மா நகரத்துக் கடைஒன்றில் உதவியாளராகச் சேர்ந்து, குடும்ப வருமானத்தை அதிகரித்தார்.

தாம்பத்திய வாழ்க்கையிலும் சரி, பிள்ளைகளுக்கு நற்பண்புகளை ஊட்டுவதிலும் சரி, எனது பெற்றோரிடையே பொது இணக்கம் நிலவியது. அதேசமயம், இரண்டு பேருக்கும் தனித்தனிப் பண்புகளும் இலட்சியங்களும் கூட இருந்தன. அப்பா ரெயில்வே ஊழியராகவும் உறுதியான தொழிற்சங்கவாதியாகவும் இருந்ததால், அம்மாவை அரசியல் ஈடுபாடு உடையவராக இருந்தார். ஒடுக்கப்பட்டவர் மட்டில் அப்பாவுக்கு ஆழ்ந்த அனுதாபம் இருந்தது. தொழிலாளர் உரிமைகள் தொடர்பாக அவர் கொண்டிருந்த உறுதியான ஈடுபாடு அவருடைய தொழிற்கட்சி அரசியலில் பிரதிபலித்தது. அப்பா அரசியலின் பக்க சாய, அம்மாவின் ஈடுபாடு சமூகம் மற்றும் வாழ்வின் தத்துவாம்சங்கள் பற்றி இருந்தது. வாழ்வின் அர்த்தத்தையும் மானுட உலகையும் அறிந்து கொள்வதிலும் அம்மா ஆழ்ந்த அக்கறை காட்டினார். தொழிலாளர் நலன்களிலும் அவர்களுடைய அரசியல் எதிர்காலத்திலும் அப்பா தம்மை அர்ப்பணிக்க,தனிமனித நற்பண்புகள் ,



சீலங்கள், வாழ்க்கையின் முழுமை ஆகியவற்றில் அம்மாஆழ்ந்தார். இந்த இரண்டு வெவ்வேறு ஆளுமைகளின் சங்கமமே என் மனதில் பதிந்து, நான் இன்று ஈடுபட்டிருக்கும் சூழலுக்கும் திசைக்கும் என்னை ஒழுக்காற்றுப் படுத்தியிருக்க வேண்டும். ஆனால்-குடும்பத்தில் ஒரு பிள்ளைமட்டும் ஏனைய பிள்ளைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை நெறியைக் கடைப்பிடிப்பது என்பதை விளங்குவது கூடக்கடினமானதே. அநேகமாக, எனது பெற்றாரின் வெவ்வேறு திசையிலான ஈடுபாடுகளின் புணர்ச்சியே எனது இன்றைய ஆளுமையின் உருவாக்கம், வளர்ச்சி ஆகியவற்றின் தளமாக அமைந்திருக்க வேண்டும். ஏனைய எனது குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கையை விட, எனது வாழ்க்கைப்பாதை, முற்றிலும் மாறுபட்டதாகவும் பிரச்சினைக்கு உரியதாகவும் அமைந்தபோதிலும், அதை ஆதரிப்பதற்கு எனது பெற்றோர் என்றுமே தயங்கியதில்லை. அத்துடன் தமிழ்மக்களின் போராட்டத்தில் எனது ஈடுபாட்டை அனு தாபத்தோடு அவர்கள் புரிந்து கொண்டதை வியத்தகு வகையில் உணர்த்தினார்கள்.

எனது தொடக்கப்பள்ளி, உள்ளூரிலேயே. பிரமிப்புத் தரும் எதையும் நான் அங்கு சாதிக்கவில்லை. அதன் பின் நகரத்து இரண்டாம் நிலைப்பள்ளி. இங்கு ஓ லெவல்- சாதாரணதரம் வரை படிப்பு. மூன்றாம் நிலைக்கல்வி வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அவுஸ்ரேலியாவில் 60களிலே சாமானியர்களுக்குப் பல்கலைக்கழகங்களில் வாய்ப்புக்கிடைப்பதில்லை. பல்கலைக்கழகக் கல்வி பெறுவதனால் ,ஒன்றில் பணக்காரராக இருக்க வேண்டும் அல்லது புலமைப்பரிசில் பெறத்தக்க திறமைசாலிகளாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் எதிலும் நான் சேர்த்தியில்லை. ஆனால் சிறுவயதில் இருந்தே நான் இலட்சியக் கனவு கண்டு கொண்டிருந்த துறை ஒன்றுக்குள் சென்று, தாகம் தணிக்கத்தீர்மானித்தேன். மருத்துவத் தாதித் தொழிலில் சேர்ந்து கொண்டேன். பின் நோக்கிப் பார்க்கும் போது, அதுவும் என்னை நானே நன்றாகப் புரிந்து கொள்ளக் கிடைத்த பல ஆண்டுகால அனுபவத்தோடு - ஒன்றென்பதை இப்போது உணர்கின்றேன். மருத்துவத்தாதித் தொழில், என் வாழ்வு முழுவதும் என்னில் உருவாகிக் கொண்டிருந்த என் ஆளுமையின் இரண்டு கூறுகளைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. எந்த வடிவிலே துயரத்தைக் கண்டாலும் அதன் மட்டில் அனுதாபம் கொள்வதும் ஓடிச்சென்று என்னை அதனோடு இணைத்துக் கொள்வதும், ஒரு கூறு. மனிதாபிமான உணர்வுகள் மாறாமலேயே தொடர்ந்தும் வாழ வேண்டும் என்ற அவாவுடன் இருப்பது இரண்டாவது கூறு. மருத்துவத் தாதித் தொழிலில் ஈடுபட்ட போது



ஒரு கரிசனையான தொழில் பார்க்க வேண்டும் என்ற எனது வேணாவாவும் நிறைவேறியது. அதைவிட முக்கியம், சிறிய நகர வாழ்க்கையிலிருந்து ஒரு பெரிய நகரத்துக்குள், ஒரு புதிய உல கத்துக்குள் சென்றேன். தாதியர் கல்வி என்பது, ஏதோ பெரியது என்று இல்லாவிட்டாலும் , இரண்டாம் நிலைக் கல்வியால் பெற்ற அறிவோடு, இது மேலதிக அறிவாகச் சேர்ந்தது. எப்படியாயினும், எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்தால், எனது இரண்டுவேணா வாக்களையும் அடைய,

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 9**

தாதியர் தொழிலைமீள நாடமாட்டேன். அவ்வளவு தூரம் ஏவலுக்கு பணியும் தொழில் அல்லாத வேறு தொழிலையே நாடுவேன். ஒன்றில் சட்டம் படிப்பேன் அல்லது புவி, மற்றும் அதன் உயிரினம் தொடர்பான இயற்கை அறிவியல் கற்பேன்.

மருத்துவத் தாதியருக்கான மூன்று ஆண்டுக் கடும்பயிற்சி பெற்ற பின், ஒரு தொழில் தகைமை கிடைத்தது. எனது சாதனையில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஓராண்டு மருத்துவிச்சி பயிற்சியும் பெற்றேன். இதுஎனக்கு இரண்டாவது மருத்துவத் தொண்டுத் தகைமையத் தந்தது. அதாவது, தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் ஏற்றம் தந்தது. அதாவது, தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் ஏற்றம் தந்தது. அதாவது, தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் ஏற்றம் தந்தது. இருபத்தியொரு வயதில் எனக்கு இரண்டு தொழில் தகைமைகள்.திருமணம் புரியும் நோக்கம் அந்த வேளையில் கிடையாது. இனி, அவுஸ்திரேலியாவில் தங்கி வேறு எதுவும் செய்வதற்கு இல்லை. ஆகவே வெளிநாட்டுப் பயணம் ஒன்றுதான் தவிர்க்க முடியாததும் அன்றைய நாட்டு நடப்பும் ஆகும். எனது நண்பி ஒருவருடன் சிறிது கலந்தாலோசித்த பின், அவுஸ்தி ரேலியாவை விட்டு வெளியேறத் திட்டமிட்டோம். கையில் எடுத்த பையோடு நாட்டுக்குத் திரும்பாத ஒரு வழிப்பயண சீட்டோடு புறப்படுகின்றேன் என்று எனக்கு அன்று தெரியாது.

(பதிவுதொடரும்)

# புறம்போக்கு ஜனநாதனுக்கு



''இயற்கை'', ''ஈ'', ''பேராண்மை'' படங்களைத் தொடர்ந்து எஸ்.ப. ஜனநாதன் அடுத்து ஆர்யா, விஜய் சேதுபதியை இயக்குகிறார்.

படத்துக்கு ''புறம்போக்கு'' எனத் தலைப்பும் வைத்தார் ஜனநாதன்.

ஆனால், அது தன்னுடைய தலைப்பு என பிரபல ஒளிப்பதிவாளரும், நடிகருமான நட்ராஜ் தெரிவித்தார். இதனால், அந்தத் தலைப்பை வைக்கமாட்டோம். வேறு தலைப்பைத் தேர்வு செய்ய உள்ளோம் என ஜனா தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்போது ''புறம்போக்கு'' தலைப்பு தங்களுக்கே கிடைத்து விட்டதாக ஜனநாதன் தெரிவித்துள்ளார்.

அந்தத் தலைப்பை முதலில் பதிவு செய்தவர்கள் என்ற விதத்தில் எங்களுக்கே கிடைத்து விட்டது. அதோடு, நட்ராஜிடமும் இது பற்றி பேசியாகிவிட்டது. இனி ''புறம்போக்கு'' தலைப்பு எங்களுக்கே சொந்தம் என்கிறார் ஜனநாதன்.

இப்படத்தினை யூடிவி நிறுவனத்துடன் இணைந்து ஜனநாதனின் சொந்தப் படநிறுவனம் தயாரிக்க உள்ளது.

''புறம்போக்கு'' படத்துக்காக காஷ்மீரில் படப்படிப்பை நடத்த இடம் பார்க்கிறார் ஜனநாதன்.முந்தைய படங்களைப் போல இதுவும் அரசியல் சார்ந்த படமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

''என்றென்றும் புன்னகை'' படத்தின் இசை வெளியீட்டு விழாவுக்கு த்ரிஷா, ஆண்ட்ரியா இருவரும் குட்டைப் பாவாடையில் வந் திருந்தார்கள். கால் மேல் கால் போட்டு உட் காருவதா, இல்லை, அணிந்திருந்த குட்டைப் பாவாடையால் தங்கள் தொடைப் பகுதியை மறைப்பதா? எனத் தடுமாறிப் போனார்கள். ஒரு வழியாகத் தங்களுக்குத் தரப்பட்ட பூங்கொத்தை வைத்து மறைத்தபடி அமர்ந்திருந்தார்கள். த்ரிஷா பேசும்போது இரசிகர்கள் ''ஐ லவ் யூ'' எனக் கத்த திரிஷாவும், ''ஐ லவ் டு யூ'' என்று சொல்ல அரங்கமே அதிர்ந்தது.

# நானா? ராணா?

பார்த்தீபன் பேசும்போது, ''த்ரிஷாவுக்கு நானா? ராணா? என்ற போட்டி. ஸாரி நீயா? நானா? என்ற போட்டி'' என்று சொல்ல, த்ரிஷாவுக்கு சிரிப்பு தாங்கலை. த்ரிஷாவும் தெலுங்கு நடிகர் ராணாவும் காதலிப்பதையே பார்த்தீபன் அப்படி கிண்டலடித்துள்ளார்.

# கண்டாங்கி விஜய்



# அடுத்தது ''டாணா''



தொடர்ந்து வெற்றிப் படங்கள் கொடுத்த உற்சாகத்தில் இருக்கிறார் சிவகார்த்திகேயன்.

தனுஷ் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடித்த எதிர்நீச்சல் படத்தை இயக்கியவர் துரை செந்தில்குமார்.

தற்போது ''எதிர்நீச்சல்'' படக்குழு மீண்டும் இணைகிறது.

இந்தப் படத்திற்கு ''டாணா'' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

இதில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடி யார் என்பதும், படத்திற்கு இசையமைப்பது யார் என்பதும் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

துரை செந்தில்குமாரும் பட்டுக்கோட்டை பிரபாகரும் இணைந்து ''டாணா'' படத்துக்கு திரைக்கதை வசனம் எழுதுகிறார்கள்.

''டாணா'' என்பது தமிழ் வார்த்தைதான். இந்த வார்த்தைக்கு காவல் என்று அர்த்தமாம்.

''ஐ'' பட...
ஒப்பந்தமா...
பின்பற்றி...
கேட்பதற்...
படமாக்கப்...
தயாரிப்பா...
கை மேல்...
ஒப்பந்தம...

# காதல் கச்சேரியைக் குறையுங்களேன்



ஹன்சிகா ''மான் கராத்தே'' படப்பிடிப்பில் ஈடுபாடு இல்லாமலேயே நேரத்தை இழுத்தடித்து வருகிறார். இதனால் பஞ்சாயத்தைக் கூட்டலாமா அல்லது சிம்புவுடன் பேச்சு வார்த்தை நடத்தலாமா எனக் குழம்பி வருகின்றனர் படக் குழுவினர். படப்படிப்புக்கு வந்தால் சிம்புவுடன் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கிறாரே தவிர காட்சிகளில் நடிக்க ஈடுபாடு காட்டுகிறாரில்லையாம். எனவேதான் சிம்புவின் காலில் விழுந்தாவது படப்படிப்பு முடியும் வரை உங்கள் காதல் கச்சேரியை தொலைபேசியில் குறைத்துக் கொள்ள முடியாதா? என்று தயாரிப்பாளர் தரப்பு கேட்டிருக்கிறதாம்.



# விருது ... ''நான் ஈ''

தென்னிந்திய பட உலகின் பிர...
இயக்கத்தில் வெளியாகி இரசிகர்கள்...
வெற்றியீட்டிய படம் ''நான் ஈ''
இந்தப்படம் தேசிய விருதை...
படவிழாக்களில் பாராட்டையும் பெ...



விஜய் நடித்த "தமிழன்" படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் டி.இமான்.

அதற்குப் பிறகு விஜய் படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்பு இமானுக்குக் கிடைக்கவில்லை.

கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது "ஜில்லா" படத்தில் அந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

"மைனா", "கும்கி", "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" என்று தற்போது பல படங்களில் அசத்தலான பாடல்களை இமான் கொடுத்தார்.

விஜய் படத்தின் அத்தனை பாடல்களையும் இன்னும் அற்புதமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று படத்திற்கு "ஜில்லா" பட பூஜை போட்ட நாள் முதலே மெட்டுப் போடத் தொடங்கி விட்டாராம் இமான்.

அதோடு, தான் உருவாக்கிய மெட்டுக் களை விஜய்யிடம் போட்டுக் காட்டி அவர் தெரிவு செய்த மெட்டுக்களையே பாடல் களுக்குப் பயன்படுத்தி இருக்கிறார்.

"கண்டாங்கி கண்டாங்கி" என்று தொடங்கும் பாடலை ஸ்ரேயா கோஷலு டன் இணைந்து விஜய்யை பாட வைத்து விட்டார் இமான்.

எனது வெற்றிப் பாடல் வரிசையில் "கண்டாங்கி" பாடல் கண்டிப்பாக இடம் பெறும் என்று விஜய் சொன்னதோடு, இமானின் இசைத்திறமையையும் மனம் திறந்து பாராட்டினாராம்.

# தமன்னா வலையில் விராட்



தமிழில் பல முன்னணி நடிகர்களுடன் நடித் துள்ள தமன்னா கார்த்தியுடன் காதல் என்ற கிசு கிசுவில் சிக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மீண்டும் காதல் வலையில் விழுந்துள்ளாராம். இப்போது சிக்கியிருப்பது பிரபல விளையாட்டு வீரர் விராட் கோஹ்லியுடன்.

தமிழில் பட வாய்ப்புகள் கிடைக்காததால் தெலுங்கில் நடித்து வந்த தமன்னா பின்னர் அப்படியே ஹிந்திப் படங் களிலும் நடிக்கச் சென்றார்.

முதல் படம் "ஹிம்மத்வாலா" சமீபத்தில் வெளியாகிவிட்டது. ஆனாலும் தமன்னாவின் தாராளக் கவர்ச்சி அவருக்கு இன்னும் சில பட வாய்ப்புகளை ஹிந்தியில் பெற்றுத் தந்துள்ளது.

தற்போது தமிழில் "வீரம்" படத்தில் அஜித் ஜோடியாக நடிக்கிறார்.

மேலும் "இட்ஸ் என்டர்டெய்ன்மென்ட்" என்ற ஹிந்திப் படத்திலும் "ஏகடு" என்ற தெலுங்கு படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் விராட் கோஹ்லியுடன் விளம்பர படமொன்றில் சேர்ந்து நடித்தார்.

அப்போது தமன்னாவிடம் சிக்கிய விராட் கோஹ்லி அவரின் காதல் வலையில் விழுந்துள்ளாராம்.

இருவரும் இப்போது இணைபிரியாத காதலர்களாக வலம் வருகிறார்களாம்.

இந்த மாதிரி கிசுகிசுக்களில் சிக்குவது கோஹ்லிக்கு புதிதல்ல. ஏற்கனவே பல ஹிந்தி நடிகைகளை தன் வலையில் விழ வைத்த கோஹ்லி இவரிடம் இப்போது வசமாக சிக்கியுள்ளாராம் தமன்னா.

# எமி தயார்

"ஐ" படத்தின் படப்படிப்பு முடிவடையும் வரை வேறு எந்தப் படங்களிலும் ஒப்பந்தமாகக் கூடாது என இயக்குநர் ஷங்கர் போட்ட நிபந்தனையைப் பின்பற்றிவந்த எமி ஜாக்ஸன், இப்போது அடுத்த படத்திற்குக் கதை கேட்பதற்குத் தயாராகிவிட்டார். "ஐ" படத்தில் அவரது காட்சிகள் படமாக்கப்பட்டு முடிந்துள்ள நிலையில், தனது சமீபத்திய புகைப்படங்களை தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.அதற்கு கை மேல் பலனும் கிடைத்துள்ளது. புதிதாக நான்கு படங்களில் எமி ஒப்பந்தமாகியிருக்கிறார்.



# ...நது மழையில் ...ன் ஈ"

...பட உலகின் பிரபல இயக்குநர் ராஜமௌலி ...வெளியாகி இரசிகர்களின் அமோக ஆதரவை பெற்று ...படம் "நான் ஈ" ...தேசிய விருதை அள்ளியதோடு சர்வதேச ...ல் பாராட்டையும் பெற்றுள்ளது.

எட்டாவது டொரோண்டோ பட விழாவில் 9 விருது களை "நான் ஈ" படம் குவித்துள்ளது.

இதுகுறித்து ராஜமௌலி கூறுகையில்,

இத்தருணத்தில் படக்குழு வினர் அனை வருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள் ளேன்.

படத்தில் "ஈ"யின் பழி வாங்கும் படலத்தை பதிவு செய்துள்ளோம்.

இப்படம் சிறந்த சண் டைக்காட்சி, கலகல நகைச் சுவை, யதார்த்த மான கதை சொல்லல், ஸ்பெஷல் எபெக்ட்ஸ், சிறந்த படம், சிறந்த வில் லன் நடிகர், சி றந்த ஹீரோ பாத்திரம், எடிட்டிங் என பல பிரிவுகளில் விருதுகளை குவித்திருப்பதை எண்ணி உற்சாகம் அடைகிறோம் என்று கூறியுள்ளார்.

# ப்ரியாமணி ஏன் போகவில்லை?



தமிழ்ப் படங்கள் எதுவும் கைவசம் ஒன்றும் இல்லாத நிலையில் தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வருகிறார் ப்ரியாமணி.

இவருக்கு ஷாருக்கான் தயாரித்து, நடித்த "சென்னை எக்ஸ்பிரஸ்" படத்தில் குத்து பாடலில் ஆட அழைப்பு வந்தது.

அதை ஏற்றுக்கொண்டார் குத்துப்பாடலில் கலக்கினார்.

இந்தநிலையில் சில நாட்களுக்கு முன் ஷாருக்கான் தனது 48ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். தென்னிந்திய நடிகை களில் ப்ரியாமணிக்கு மட்டும் பிறந்த நாள் விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்திருந் தார் ஷாருக்.

ஆனால் அந்த விழாவுக்கு போகாமல் ப்ரியா மணி புறக்கணித்துவிட்டார்.

இதுகுறித்து ப்ரியாமணி தரப்பில் கேட்டால் தெலுங்கு, கன்னடத்தில் தலா 2 படங்களில் நடித்து வருவதால்நேரமே கிடைக்கவில்லை.

அதனால்தான் ஷாருக்கான் பிறந்த நாள் நிகழ்ச்சியில் பங்கேற்க முடியவில்லை.ஆனாலும் "சென்னை எக்ஸ்பிரஸ்" படத்தில் ஷாருக்கானுடன் இணைந்து நடனம் ஆடிய புகைப்படத்தை இணையதளத்தில் வெளி யிட்டு அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறி உள்ளேன் என்று தெரிவித்துள்ளனர்.

# புக்கர் பரிசு பெற்ற முதல் இந்திய பெண் எழுத்தாளர் அருந்ததிராய்



மேகாலயாவின் தலைநகரான சில்லாங்கில் 24 நவம்பர் 1961இல் கேரளத்தைச் சேர்ந்த ரோஸ்மேரிக்கும் வங்காளத்தின் தேயிலைத் தோட்டப் பணியாளரான தந்தைக்கும் பிறந்தவர். இவருக்கு ஒரு வயது இருக்கும் போதே பெற்றோர் விவாகரத்து செய்து பிரிந்து போயினர். கலப்பு மணம் புரிந்து கணவனைப் பிரிந்து வாழ்ந்த தாய்க்கு மகளாகப் பிறந்ததனால் இவருக்கும் ஊரின், உறவின் எதிர்ப்பு அதிகமாகவே இருந்தது.

அருந்ததி ராய்க்கு சமூகம் எதிர் உலகமாகத்தான் முதலில் அறிமுகமாகியது. பின்னர் எல்லாவற்றையும் மீறி நீலகிரியில் பள்ளிப் படிப்பை முடித்து டில்லி பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை படிப்பில் சேர்ந்தார். உடன் படித்த ஒருவரைக் காதலித்து மணந்ததால் படிப்பு பாதியில் நின்றது. அந்த வாழ்க்கையும் நான்கு ஆண்டுகள்தான் நிலைத்தது. அவரிடமிருந்து பிரிந்த பின்னர் "பிரதீப் கிரிஷன்" என்ற திரைப்பட இயக்குநரை மணந்தார். இருவரும் சேர்ந்து திரைப் படம் எடுத்தனர். இவ்வாழ்க்கையும் இவருக்கு நிலைக்கவில்லை. இவரின் கட்டற்ற சிந்தனை அடக்குமுறைக்கு அடங்காதவராக இவரை வடிவமைத்திருந்தது.

மேலும் புரட்சிச் சிந்தனை மிக்கவராகவும் இவர் இருந்தார். இவரின் முதல் ஆசிரியரே இவரின் தாய்தான். உன்னைப் பாதுகாக்க யாரும் இருக்க மாட்டார்கள். நீதான் மற்றவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற பாடம் அவருக்கு நிழலே கற்றுக் கொடுத்தது. அதனால் எல்லாவற்றின் மீதும் கவனம் செலுத்த ஆரம்பித்தார். சமுதாயத்திலுள்ள பெண் அடிமைத்தனம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகள் என எல்லாவற்றையும் விமர்சனத்திற்கு உட்படுத்தி படைப்புகளின் மூலம் பலரின் கவனம் பெற ஆரம்பித்தார். இந்நிலையில் தான் 1997இல் அவர் எழுதிய "த காட் ஆப் ஸ்மால் திங்ஸ்" (The God of Small things) என்னும் நாவல் புக்கர் பரிசினைப் பெற்றது. புக்கர் பரிசு வென்ற முதல் இந்தியப் பெண் எழுத்தாளர் இவர்தான்

# நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று ஒரு பாடலடி காணப்படுகின்றது. குடும்பம் ஒன்று நல்ல முறையில் இயங்குமாக இருந்தால் உலகினைக் கற்றுக்கொள்வதற்கான ஆரம்ப நிறுவனம் அதுவாகவே காணப்படும். மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவதில் குடும்பத்தின் பங்கு பெரியது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களின் எண்ணமும் எங்கள் குடும்பம் அமைதியான ஒற்றுமை மிக்கது என்று அனைவரும் உணர்ந்திருந்தாலே ஒரு பெரிய மகிழ்ச்சி. நாங்கள் எல்லோரும் என்றும் பிரியாமல் இணைந்து வாழ்வோம்- என்று உறுதி கொள்ள வேண்டும் இதனை எப்படி உருவாக்குவது?



1. குடும்பத்தில் ஒரு வேளையாவது, அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து உணவு உண்ண வேண்டும்.
2. குடும்பத்துடன் வாரம் ஒரு முறையாவது வெளியில் சென்று வர வேண்டும்.
3. விடுமுறைகளில் வெளியூர் பயணம் சென்று குடும்பத்துடன் தங்கி மனம் விட்டுப்பேசி மகிழ்ந்து சிரித்துக் கொண்டாடி வர வேண்டும்.
4. ஒவ்வொரு நாளும் குடும்பத்துடன் எல்லோரும் சிறிது நேரமாவது இணைந்திருத்தல் வேண்டும்.
5. ஒருவர் வெற்றியை எல்லோரும் கொண்டாட வேண்டும். வாழ்த்துக்களைப் பரிமாற வேண்டும்.
6. நிறையப் புகைப்படங்கள் எடுத்து ஆல்பம் தயாரிக்க வேண்டும்.
7. ஒருவருக்கு சங்கடமோ, தோல்வியோ வந்தால் அனுதாபத்துடன் தனித்தனியாகச் சென்று பேசி ஆதரவு கொடுக்க வேண்டும். பேசச்சொல்லி, மன உணர்வுகளைக் கேட்டு அவர்கள் சுமையை இறக்கி வைக்கத் துணை புரிய வேண்டும்.
8. விழா நேரங்களில் எங்கிருந்தாலும் வந்து கூடிக் கொண்டாட வேண்டும்.
9. மனதளவில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரையும் நினைத்துத் தினமும் வாழ்த்த வேண்டும்.
10. உறவில் தான் என்ற எண்ணம் வேண்டாம். போலிக் கௌரவம், மானம், ரோசம் குடும்பத்தில் வேண்டாம்.
11. எவர் என்னைத் திட்டினாலும், கோபித்தாலும், என்னை அவமதித்தாலும், எனக்கு உதவி செய்ய மறுத்தாலும், நான் அன்பு செய்வேன். உங்கள் மேல் நான் கொண்டுள்ள அன்பே பேரானந்தம் என்று கூற வேண்டும்.
12. தினசரி ஐந்து நிமிடமாவது அனைவரும் இணைந்து மன அமைதிக்கான தியானம் செய்ய வேண்டும்.

## புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி



# சவூதி அரேபியாவின் முதல் பெண் வழக்கறிஞர்

சவூதி அரேபிய வரலாற்றில் முதல் முறையாக, பெண் வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது கட்சிக்காரருக்கு ஆதரவாக வாதாடியுள்ளார்.

பயான் ஸஹ்ரான் என்னும் பெயருடைய அப்பெண்மணி ஜெத்தாவிலுள்ள பொதுநீதிமன்றம் ஒன்றில் தன் கட்சிக்காரர் சார்பில் வழக்குரைத்துப் பேசியுள்ளார். தனது இந்த அனுபவம் மிகுந்த பரவசம் அளித்துள்ளதாக பயான் ஸஹ்ரான் தெரிவித்தார்.

சட்டம் படித்து வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ள பயான், சட்ட ஆலோசகராகப் பணியாற்றி பல்வேறு குற்றவியல், குடிமையியல் மற்றும் குடும்ப விவகாரங்களில் பங்களிப்பைச் செய்திருந்த போதிலும் வழக்கறிஞர் பயான் ஸஹ்ரான் கட்சிக்காரருக்குப் பகரமாக நீதிமன்றத்தில் தோன்றி வாதிட்டது இதுவே முதல் முறையாகும்.

தன்னுடைய சட்ட நிறுவனத்தை விரைவில் தொடங்க உள்ளதாகவும், ஊழியர் விவகாரங்கள், வணிகச் சிக்கல்கள் ஆகிய வற்றைத் தீர்த்து வைக்க தான் ஆர்வங்காட்டுவதாகவும் பயான் ஸஹ்ரான் கூறினார். குறிப்பாக, பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்காக என்னை அர்ப்பணித்துக் கொள்வேன் என்றும் பயான் கூறினார். பெண் வழக்கறிஞர்களால் இந்த நாட்டின் நீதித்துறைக்குச் சிறந்த பங்களிப்பை நல்க முடியும் என்று உறுதிபட கூறுகிறார் வழக்கறிஞர் பயான் ஸஹ்ரான்.

# கவிதைப் புனல்

## தமிழா!

வீரம் நிறைந்த வாழ்வில்
மரணங்கள் சொந்தமாய்
அகதி வாழ்வதனில்
அல்லாடிக் கொண்டிருக்கின்றோம்

வளர்பிறையும் தேய்பிறையும்
வந்து போகும் வாழ்வில்
தேய்பிறையே சொந்தமாகி
பாய்கிறது தமிழினம்

நடக்கும் சீர்கேடுகள்
நம்மைக் கலங்க வைத்தாலும்
தமிழினத்தை நிமிர்த்தி விட
தலைவனொருவன் இல்லையே

ஒட்டுமொத்த தமிழினமும்
ஒன்று பட்டு சிந்தியுங்கள்
தங்கத் தமிழினத்தை
பங்கம் இன்றிக் காப்பாற்றுங்கள்.

வேல்மகள். புளியம்பொக்கணை

## தியாகிகள் தினம்

நண்பனே
இன்று உனக்கு விழா நாள்
சிகரத்தில் நிற்கின்றவனே
தியாகிகளைப் பற்றி நீ
உரையாற்றும் முன்
திரும்பிப் பார் ஒரு முறை
உன் சுவடுகளை!

தம் குருதியை சிந்தி
உன்னை சித்திரமாய்
அலங்கரித்த பேனாக்களை
மறந்து விடாதே!

நீ ஞானியாவதற்காய்
தங்களையே உருக்கி உருக்கி
ஒளி கொடுத்த
மெழுகுவர்த்திகளையோ
அல்லது
அதற்காக தீக்குளித்துக் கொண்ட
தீக்குச்சிகளையோ
ஞாபகம் இருக்கிறதா உனக்கு!

உன் பாதங்களைக் காக்க
தம்மையே வருத்திக் கொண்டு
முட்களின் வலி சுமந்த
செருப்பையாவது
சற்று நினைக்கிறாயா?

உன்னை மேலே ஏற்றிவிட்ட ஏணி
இன்னும் அதே இடத்தில் தான்
மீண்டும் ஏற்றிவிட
காத்துக் கிடக்கின்றது

சரி அவற்றையெல்லாம்
விட்டு விடு
நீ சந்தோசத்தில்
சிரித்துக் கொண்டிருக்கிறாய்
மலையாக உன்
கழுத்திலிருக்கும் மலர்கள்
மரணத்திலும் சிரித்துக்
கொண்டிருக்கின்றன
உனக்காக.
அவற்றையாவது
மறந்து விடாதே!



## அவன் அக்காவிற்கு எழுதிய பழைய கடிதம்



01.09.2009
அன்புள்ள
ஆசை அக்காவே!
நீ எறிகணையில்
மரணித்த அம்மா
அப்பாவை நினைத்து
அழக்கூடும்

என்னைப் பற்றி அறிய
ஆவல் கொள்வாய்
என் எழுத்துக்களை
படித்திருப்பாய்
உள்ளக் கிடக்கையை
புரிந்து கொள்வாய்
சின்ன வயதில்
நீ என்னை
தூக்கி வைத்திருந்ததை
மறக்கவில்லை

நீ அங்கும்
நான் இங்கும்
நீண்ட தூரம்
பயணிக்க வேண்டி
இருக்கிறது.

ஒரு வேளை
என் விழிமடல்
மூடிப் போனால்
நான் ஓடி விளையாடிய
வளவு முற்றத்தில்
தென்னை மரக்கன்றை
நாட்டி வை

என்றும் பாசத்துடன்
உன் அன்புத் தம்பி
கானகன்

- ஆ.முல்லைத்திவ்யன்

## அகால மரணம்



உலகம் முழுவதும்
வகைதொகையின்றி
அகால மரணங்கள்!

வீதி விபத்தால்
பாதையால் சென்றவர்
பரிதாப மரணம்!

காதலில் தோல்வி
அடைந்ததால் தூக்கிலிட்டு
காதலர் மரணம்!

துப்பாக்கிதாரியின்
சூட்டில் அப்பாவி
பொதுமகன்மரணம்!

மாடியில் இருந்து
வழுக்கி விழுந்ததால்
குடும்பத்தலைவன்
கொடூரமானமரணம்!

பரீட்சைத் தோல்வியால்
பள்ளி மாணவி
கடலில் குதித்து
கவலை மரணம்!

பாம்பு
சீண்டியதால்
விவசாயி ஒருவன்
கண்ணீர் மரணம்!

யானை
அடித்துவிட்டதால்
அக்கிரம மரணம்!

எல்லாஉள்ளங்களிலும் மரணம்
காரணம் இருப்பதால்
எந்தவொரு மரணமும்
இயற்கை மரணம் இல்லை!

இறைவன் மனிதனுக்கு
வழங்கி இருக்கும்
அகால மரணம்!

உறுதிப்படுத்தி ஒலிக்கின்றன
மரண வீட்டு ஒப்பாரிகள்!

- மிகிந்தலை ஏ.பாரிஸ் கட்டுக்கெலியாவ.

## செதுக்குங்கள் புதுக்கவிதை



சிந்தனைச் சிற்பிகளே
செதுக்குங்கள் புதுக்கவிதை
பேரின வாதக் களைகளைப்
பிடுங்கி எறிய ஓரணியில்

நின்று உங்கள் எழுதுகோல்கள்
உழுது கொண்டிருக்கட்டும்
பழுதற்ற பண்பெனும்
விதைகளைப் பயிரிட உதவட்டும்

தொழுதுண்டு வாழும்
மனங்களில் சுயத்தை
உணரச் செய்யட்டும்
அழுகிய மணம் வீசும்
அஞ்ஞான நம்பிக்கை
அகற்றிட உதவட்டும்
முழு உலகும் சமாதானமடைய
முழு மூச்சாய் உழைக்கட்டும்

சிங்களமும் செந்தமிழும்
சங்கமித்து உறவாட
சிக்கலாய் இருப்போர்
எண்ணங்களை சுக்கல்
சுக்கலாகக் காட்டும்
அவரவர் உரிமைகள்
அனைத்தும் அவரவர்க்கு
கிடைக்குமென்றால்இரு நாடு
என்ற எண்ணத்துக்கிடமேது
ஒரு தாய் மக்கள் போல் நம்
திருநாடு வளம் பெற
உலகம் வியக்க வாழ்ந்திடலாம்

சர்வதிகார எண்ணம் தடையாய்
இருக்குமென உறைக்க
உரக்கச் சொல்லுங்கள்
வெடிக்கும் மறப்போரென்று

- மாயவதாசன்



## மனம்

ஒருத்தி
ஒழுங்காகத்தான்
போகிறாள்
அவளை
துகில் உரித்துப்
பார்க்கிறது
ஒழுக்கமற்ற மனசு
கற்பனையில்!

தவசீலன் தர்மக்கேணி.

# மர்மக் கொலைகள்

## இன்னும் அவிழாத முடிச்சுக்கள்

ஹரீஸ்

யாழ்.குடாநாட்டின் யதார்த்தப் போக்கு மீண்டும் போர்க்கால நினைவுகளை மீட்டிப்பார்க்கும் சூழ் நிலையை தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தியிருக்கின்றது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெண்கள் சடலங்களாக மீட்கப்பட்டுவரும் சம்பவங்கள் பதற்றமான



சூழ்நிலை ஒன்றுக்குள் குடாநாடு பயணித்துவருவதை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. "வடமாகாணத்தின் சட்டம், ஒழுங்கு முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரனின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது" எனப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் நிலையில் குடாநாட்டின் கிணறுகளுக்குள் இருந்தும் பொது இடங்களில் இருந்தும் பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டு வருவது பல்வேறு சந்தேகங்களை குடாநாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. தமிழர் பிரதேசத்தை போர் மூடியிருந்த பொழுதுகளில் இத்தகைய பெண்களின் சடலமீட்புகள் தமிழர் பிரதேசமெங்கும் தாராளமாக இடம்பெற்றன. போரைக் காரணம் காட்டி பல அப்பாவிப் பெண்கள் வேட்டையாடப்பட்டு கொத்திக் குதறப்பட்டு பதுங்கு குழிகளுக்குள்ளும் மனிதப் புதைகுழிகளுக்குள்ளும் இருந்து எலும்புக்கூடுகளாகவும் சிதைக்கப்பட்ட நிலையில் சடலங்களாகவும் மீட்கப்பட்ட சம்பவங்கள் நிறையவே இடம்பெற்றன.

பாடசாலை செல்லும் சிறுமிகளே மண் திட்டுகளுக்குள் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவங்கள் ஏராளமாக இடம்பெற்றன. சுற்றிவளைப்புக்கள் தேடுதல்கள் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்ட பெண்கள் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவங்களும் தாராளம். போர் தமிழர் பிரதேசத்தை ஆழமாக மூடியிருந்தாலும் எல்லாவற்றுக்கும் போரென்ற நொண்டிச்சாட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டதாலும் தமிழர் பிரதேசத்தில் இத்தகைய சம்பவங்கள் வகை தொகையின்றி இடம்பெற்றன. கிருஷாந்தி தொடங்கி சாரதாம்பாள் வரை அப்பாவிப் பெண்கள் மீதான வன்கொடுமை அடையாளங்கள் வரலாற்றுப் பதிவுகளில் நிறைய இடம்பிடித்திருக்கின்றன. போர் ஓய்ந்த பின்னரும் மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல தொடர்ந்து பெண் களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இன்றும் தொடர்கின்றன. அதனையே கிணறுகளுக்குள்ளும், ஆலயம் போன்ற பொது இடங்களில் இருந்தும் பெண்கள் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவங்கள் சொல்லி நிற்கின்றன. தமிழர் பிரதேசத்தில் இராணுவத்தின் செறிவை அதிகரிக்கவெனக் கூறிக் கொண்டு வரப்பட்ட கிறிஸ்பூதம் தொடர்பான சில சம்பவங்கள் பின்னர் காலப்போக்கில் அவற்றின் பின்னணியில் செயற்படுவது யார் என்பதைத் தெளிவாகவே காட்டிவிட்டது. இரவு நேரங்களில் கிறிஸ்பூதங்கள் என்ற பெயரில் வீடுகளுக்குள் நுழையும் கும்பல்கள் பெண்கள் மீது தம் வன்முறைகளைத் திணித்துவிட்டு இராணுவக் காப்பரண்களுக்குள் புகுந்து கொண்டதால் அவற்றின் பொய் முகமூடி கிழித்தெறியப்பட அவை அடங்கிப் போயின. இவ்வாறு தொடர்ந்த வன் முறைகளின் உச்சங்களே தற்போதும் நடந்தேறி வருகின்றன. கடந்த ஒரு மாதத்திற்குள் நான்குக்கும் மேற்பட்ட பெண்களின் சடலங்கள் இவ்வாறு மீட்கப்பட்டு இருக்கின்றன.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியில் உள்ள நாச்சிமார் கோயில் தேர்முட்டியில் இருந்து அண்மையில் மீட்கப்பட்டது ஒரு பெண்ணின் சடலம். அவரின் மரணத்திற்கான காரணம் இதுவரை வெளிச்சத்துக்கு வராத மர்மமாக இருக்கின்றது. குறித்த பெண் மனநலம் குன்றியவர். கொழும்புத் துறையில் உள்ள இல்லம் ஒன்றிலிருந்து காணாமல் போன நிலையில் சில நாள்களுக்குப் பின் தேரடியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்குப் பின் அவர் எங்கு சென்றார்? கடத்தப்பட்டாரா? காணாமல் போனாரா? மரணத்தின் பின்னாலுள்ள மர்மம் என்ன? எப்படி ஆலய தேரடிக்குக் கொண்டு வரப்பட்டார்? கொலை செய்யப்பட்டு கொண்டுவந்து போடப்பட்டாரா? என்பது குறித்து இதுவரை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் இதுபற்றிய கேள்விகள் இருள்மண்டிக் கிடக்கின்றன. இச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளும் பகிரங்கப்படுத்தப்படாமல் இருப்பதால் சடல மீட்புக்கள் பற்றிய செய்திகளும் அச்சங்களும் மக்களிடம் அதிகமாகியே வருகின்றன.



புத்தூரில் கிணறு ஒன்றுக்குள் இருந்து இளம்யுவதி ஒருவரும் சடலமாக மீட்கப்பட்டமை அச்சத்தை இன்னும் உச்ச புள்ளிக்குக் கொண்டு சென்றிருக்கிறது. மைதிலி என்ற 25 வயதுடைய குறித்த யுவதியின் கைத்தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது. அதன் பின் வீட்டைவிட்டுக் கிளம்பிய பெண் அடுத்த நாள் வீட்டுக்கு அருகில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றுக்குள் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். ஆனால் இச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதாகக் கூறிப் பொலிஸார் முதலில் தற்கொலை என்றும் பிறகு கொலை என்றும் ஒற்றை, இரட்டை பிடித்து வருவது பொலிஸ் தரப்பு மீதான தகுதியீனத்தை தொடர்ந்து காட்டி வருகின்றது. குறித்த யுவதிக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புத் தொடர்பாக விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதி பெறப்பட்டிருப்பதாகவும் அதன் மூலமாக இறுதியில் குறித்த யுவதிக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புப் பதிவுகளைப் பெற்றிருப்பதாகவும் இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த வகையில் பொலிஸாரின் இந்த ஆமைவேக விசாரணை நடவடிக்கைகள் குற்றவாளி களைப் பிடிக்க உதவுமா என்பது இன்னும் சந்தேகப் புள்ளியாகவே இருக்கின்றது. அனுராதபுரத்தில் ஐந்து பேரைக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபரை 24 மணி நேரத்திற்குள் மடக்க முடிந்த பொலிஸார், தமிழர் பிரதேசக் கொலைகளை மட்டும் ஏன் ஆற அமரப்போட்டுப் பிடிக்கிறார்கள் என்பதுதான் சந்தேகத்திற்குரிய வினா. இது தொடர்பான பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் ஒன்றும் கடந்த வாரம் குறித்த பெண் சடலமாக கிடந்த கிணற்றடியில் இடம்பெற்றிருக்கின்றது. அதாவது பொது மக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தி அழுத்தத்தைக் கொடுத்தால் தானே பொலிஸார் நீதியான விசாரணைகளை நடத்துவார்கள் என்ற எண்ணம் மேலெழுகின்றது.

இந்தப் பதற்றம் தணிவதற்கிடையில் இணுவில் தோட்டக் கிணறு ஒன்றுக்குள் இருந்து குடும்பப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் மேலும் பதற்றத்தைக் கிளறியிருக்கிறது. அதிகாலை வேளை குறித்த பெண் காணாமல் போய் பின்னர் தோட்டக் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்ட இச்சம்பவம் தொடர்பிலான விசாரணை முன்னேற்றங்களும் எப்படி அமையும் என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.



எனவே தமிழர் பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட்டதாக பொதுநலவாய மாநாடு தொடங்கி ஏனைய மனித உரிமைகள் மாநாடு வரை நீட்டி முழக்கும் அதிகார பீடம் இத்தகை சம்பவங்களின் பின்னணிகளை இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முன்வரவேண்டும். இல்லாவிட்டால் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டல் என்பது பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடையே என்ற கதையாகிவிடும்.

ஒளண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன்




இன்று ஊடகங்கள் பலவற்றுக்கும் யூலியன் அசாஞ்சேயைப் பற்றித் தினமும் ஒரு செய்தியை வெளியிடாவிட்டால் பத்தியப்படாது' என்றாகிவிட்டது. ஆனால் அவை திட்டமிட்டே இன்னொரு நபரின் பெயரையும், அந்த மனிதன் சந்திக்கின்ற அவலத்தையும் மறைக்கின்ற கைங்கரியத்தையும் செய்துவருகின்றன.

ஊடக சுதந்திரத்தை நேசிக்கின்ற பலரும் யூலியனைத் தம் முதன்மையாளனாக எண்ணி மனசுக்குள் கோயில் கட்டாத குறையாக பூஜைகள் செய்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால் யூலியனை விடவும் மக்களுக்காக - அவர்கள் எதிர்கொள்ளும் ஏகாதிபத்தியத்தின் கண்ணுக்குத் தெரியாத சுரண்டல்களுக்கெதிராக- போராடக் கூடிய ஆளுமையாக உருவெடுத்திருக்கக் கூடிய ஒரு புயலின் சோகம் பலருக்கும் தெரியவில்லை.

எழுந்த வேகத்திலேயே அடக்கப்பட்ட அந்தப் புயலின் பெயர்தான் பிராட்லே மென்னிங்'!

வெறும் 22 வயதே நிரம்பிய துடிப்புள்ள அமெரிக்க இராணுவ உளவுத் துறை அதிகாரிதான் பிராட்லே மென்னிங். ஊடகங்களில் மிகைப்படுத்தப்படுகின்ற அமெரிக்காவின் விம்பத்தை உண்மையென நம்பி வாழும் அமெரிக்கப்பிரஜைகளில் அவனும் ஒருவன். பாடசாலையில் படிக்கும்போதே தன் தாய் நாட்டின் மதிப்பை அதிகரிப்பதற்காக வீரதீரங்கள் புரிய வேண்டும் என்னும் கனவில் மிதந்தான். அந்த அதீத கனவுகள் மீது கொண்ட காதலால் சட்டத்துறையைப் பயிலத் தெரிவுசெய்யப்பட்டும் கூட அதனை உதறித் தள்ளிவிட்டு இராணுவத்தில் இணைந்து கொண்டான் பிராட்லே. பயிற்சிகளின் போது காட்டிய ஈடுபாடும், அவனிடமிருந்த அசாத்திய நுண்ணறிவும் மேலதிகாரிகளை அவன் பக்கம் திரும்ப வைத்தன. அவன் சாதாரண சிப்பாயாக இருப்பதைவிடவும் உளவுத்துறையில் இருந்தால் நிறையவே சாதிப்பான் என அவர்கள் எண்ணினர். இராணுவ உளவுத்துறையில் இணைந்து கொண்ட பிராட்லே தன்னுடைய துணிச்சலான செயற்பாடுகள் மூலம் எல்லோரும் மூக்கின் மீது விரல் வைக்குமளவுக்கு பதவி நிலைகளில் சடுதியாக உயர்ந்து கொண்டே சென்றான்.

ஈராக்குக்கு பிராட்லேயை அனுப்பி வைத்தால் நிறையப் பலன் கிடைக்கும் என அமெரிக்கா நம்பியது. ஈராக்கில் உள்ள அமெரிக்காவுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களை வேட்டையாடும் பொறுப்பு பிராட்லேக்கு கொடுக்கப்பட்டது. அதன் முதற் கட்டத்திலேயே அவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ஈராக்கின் அமைதியைக் குழப்பி மக்களை அமெரிக்காவுக்கு எதிராகத் திசைதிருப்புவதாகக் குற்றம் சாட்டப்பட்ட பலரை அமெரிக்க இராணுவம் தடுத்து வைத்திருந்தது. அவர்களிடம் ஏதாவது விடயங்களை- அவர்களது தலைமை யார்?பண உதவி செய்வது யார்? போன்றவற்றை - கறக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு பிராட்லே அந்தத் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டான். ஆனால் பிராட்லேயின் விசாரணைகளின் போது கிடைத்த உண்மைகள் அமெரிக்கா இட்டுக் கட்டியவற்றை விடவும் வேறுவிதமானதாகவே இருந்தன. அமெரிக்காவின் அனுசரணையோடு ஆட்சிகட்டில் ஏறிய ஈராக் பிரதமர் நெரி அல்-மலிக் தன் சுயநலத்துக்காக மக்கள் நலனை ஏறி மிதித்து பல தில்லாலங்கடி வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். எனவே அவரது ஊழல்களை அம்பலப்படுத்தி, மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டு ஈராக்கிய அரசு செயற்படவேண்டும் எனக் கோரும் துண் டுப்பிரசுரங்களை மாத்திரமே அவர்கள் விநியோகித்திருந்தனர். அவர்களின் முக்கிய நோக்கம் கலகம் செய்வதில் இருக்கவில்லை.

மாறாக அரசாங்கம் தன் அதிகாரத்தின் மூலம் மக்கள் நலனை எவ்விதம் நசுக்குகின்றது என்பதை மக்களுக்கு புரியவைப்பதாகவே இருந்தது. அத்துடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்க இராணுவம் கூறியது போன்று பயங்கரவாதிகளோ கிளர்ச்சிக்காரர்களோ அல்ல.

பல்கலைக்கழகங்களில் பயில்கின்ற மாணவர்களே அவர்களில் பலர் அந்த மாணவர்களிடம் மேலோங்கியிருந்த ,மக்கள் நலன் என்கிற சிந்தனையே பிராட்லேயிடமும் இருந்ததால் அவனது சிந்தனைகள் மாறுபடத் தொடங்கின. அந்தக் கைதிகளை அமெரிக்க இராணுவம் தவறான தகவல்களின் அடிப்படையிலேயே கைது செய்து வைத்திருக்கிறது என்ற உண்மையைத் தன் மேலதிகாரிகளுக்கு பிராட்லே மென்னிங் தெரியப்படுத்தினான். ஆனால் அதற்குக் கிடைத்த பதில் அவனை இன்னும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது

இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் இன்னும் எவ்வளவு பேரைப் பிடிக்க முடியும் என்று பார். இதுவே அவனுக்கு கிடைத்த பதிலும், கட்டளையும். பிராட்லே இதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவு அவனு டைய எதிர்காலத்தை மீள முடியாத நரகத்துக்குள் தள்ளப்போகின்றது என்பதும் , நீண்ட காலத்துக்கு அமெரிக்காவையே ஆட்டம் காண வைக்கப்போகின்றது என்பதும் எவருக்குமே- ஏன் பிராட்லேக்குக் கூட - அப்போது தெரிந்திருக்கவில்லை.

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்!

## செல்லப்பா!! எழுதுவது.....



அந்தக் கலியாணம் நடக்கிறது அவருக்குப் பிடிக்கவே இல்லை. தான் காதலிச்ச பொம்பிளைய இன்னொருத்தன் கட்டுறது யாருக்குத் தான் பிடிக்கும். என்ன செய்து கலியாணத்தை நிற்பாட்டுறது எண்டு அவருக்கு கடைசிவரை பிடிபடவே இல்ல. இப்பிடியே யோசிச்சுக் கொண்டு போனவருக்கு கண்ணில பட்டது பொம்பிளையின்ட சீப்பு. ஏற்கனவே அவாவுக்கு பெரிய தலைமுடி. சீப்பில்லாட்டி எப்பிடி தலைசீவி, வெளிக்கிட்டு மணவறைக்கு வருவா? என்ற கேள்வி அவருக்கு எழுந்தது. நைசாக சீப்பை பொக்கற்றுக்குள் வைத்துக்கொண்டு வந்து நிம்மதியாக அமர்ந்தார். அப்பாடா! ஒரு மாதிரி என்னுடைய கெட்டித்தனத்தால் கலியாணத்தை நிப்பாட்டியாச்சு என்ற நிம்மதி அவர் மனமெங்கும் குடிகொண்டிருந்தது. ஆனால் கொஞ்ச நேரத்திலேயே அது இருந்த இடம் தெரியாமல் பறந்து போனது. பொம்பிளை வடிவா தலைசீவி சிங்காரிச்சு மணவறையில வந்து இருந்ததைக் கண்டவுடன இவருக்கு 'ஹார்ட் அற்றாக்' வந்துவிட்டது. பொக்கற்றுக்குள் இருந்த சீப்பை எடுத்து ஆத்திரத்தோடு பார்த்தார். இன்னமும் சீப்பில்லாமல் பொம்பிளை எப்பிடி தலைசீவின்வா எண்ட மர்மம் அவருக்குப் பிடிபடேல.


கலியாண வீட்டை நிற்பாட்டுறதுக்காக சீப்பை ஒழிச்ச கணக்காக மனதில சில ஞாபகங்கள் வருவதனைத் தடைசெய்ய கார்த்திகை மாதம் 'புள்'ளாக பல்கலைக் கழகத்தை மூடுகிற சங்கதி நடக்குதுபோல இருக்குது.

# பதவிஉயர்வு பெறுவது எப்படி?

தமது யோசனைகள் பரிபூரணமாக, குறைகளே இல்லாமல் இருக்க வேண்டும் என்று எடிசன் எண்ணியதே இல்லை. பயனுள்ள யோசனைகளை - வடிவங்களை உருவாக்குவதில் தான் அவர்அக்கறை கொண்டார். தமது யோசனைகளை எல்லோரும் அறியுமாறு செய்தார். தமது யோசனைகளை செம்மைப் படுத்த எல்லாருக்கும் வாய்ப்புக் கொடுத்தார்.

உண்மையில் தோமஸ் அல்வா எடிசனுடைய எல்லா யோசனைகளும் செம்மைப் படுத்தப்பட்டன. எடிசனுடைய பேசும் இயந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது தான் பிறகு கிராமபோன் ஆக அபிவிருத்தி செய்யப்பட்டது. பின்னர் அதுவே "ஸ்டிரியோபோனிக் சவுண்ட்சிஸ்ரம்" என்று வளர்ச்சி அடைந்தது.

எடிசன் கம்பிச் சுருள்கள் கொண்ட ஒரு சாதாரண பல்பைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து இன்று ஒளி அமைப்பு எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைப் பாருங்கள். செயல்படுத்த முடியாத யோசனையாக இருந்தாலும் கூட அந்த யோசனை எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்? எப்படியாவது -யாராவது அந்த யோசனையைச் சீர் திருத்தலாம். எடுத்துக் கொள்ளலாம். சேர்த்துக் கொள்ளலாம். செம்மைப் படுத்தலாம். நீங்கள் சொல்கின்ற யோசனை அதற்கெல்லாம் இடமளிப்பதாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.



ஏன் என்றால் சங்கிலித் தொடர் போன்ற யோசனைகளை நீங்கள் உருவாக்கத் தொடங்கி விட்டீர்கள். இதனால் நீங்கள் பெருமை அடைவீர்கள். பதவிஉயர்வு பெறுவீர்கள். இந்த யோசனையைப் பெற்று எடுத்தவர் என்ற முறை யில் பணக்காரர் ஆவீர்கள். உங்களுடைய யோசனையைக் கொடுத்தவர்களுக்கு என்ன லாபம் என்ன வெகுமதிகள் கிடைக்குமோ, அவற்றில் உங்களுக்கும் பங்கு கிடைக்கும். நீங்கள் ஒரு யோசனையை உருவாக்கிய காரணத்தால் தான்- அதை மேம்படுத்த வாய்ப்புக் கிட்டியது. யோசனையே இல்லாவிடில் மேம்பாட்டுக்கு இடம் ஏது?

ஆக இதை நினைவில் கொள்ளுங்கள்! ஒவ்வொரு யோசனையும் (அதுநடைமுறை சாத்தியமாக இருந்தாலும் அல்லது குறைகளுடன் இருந்தாலும்) ஒரு ஆரம்பம். ஏன்என்றால் எல்லா எண்ணங்களும் குறைபாடுகள் உடையவைதான். மனிதன் உருவாக்கிய எல்லாமே குறைபாடு களுடன் கூடியவைதான்.

மனிதனுடைய அறிவு அனுபவம் தொழினுட்பம் இவை காலத்தோடு வளருகின்றன. அவற்றுக்கு ஏற்ப எல்லா கருத்துக்களும் எண்ணங்களும் யோசனைகளும் செம்மையாக்கப் படுகின்றன. யோசனைகள் மதிப்பிடப்படுகின்றன. மதிப்பீடு செய்வது என்பது மற்ற எல்லாவற்றையும் விட யோசனைகளுக்கு மெத்தப் பொருத்தமானது. வாழ்வதற்காக மாறிக்கொள்வது. நிலைமைகளுக்கு ஏற்ப வாழ்ந்துவிடுவது என்பது யோசனைகளும் எண்ணங்களும் மாறக்கூடிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப சீர்திருத்தப் பட வேண்டும்.

ஆக உங்களுடைய யோசனைகளை சமர்ப்பிக்கும் போது, அறிமுகப்படுத்தும் போது, நீங்கள் தயங்க வேண்டியதில்லை. அஞ்ச வேண்டியதில்லை. நீங்கள்சமர்ப்பிக்கும் யோசனைகள் குறைகளே அற்றதாக இருக்கவேண்டும் என்பதில்லை. மாறாக எந்த ஒரு யோசனையும் பரிபூரணமாக இருந்தது இல்லை. எடிசன் தெரிவித்த யோசனைகள் உட்பட தொடக்கத்தில் உங்கள் உங்கள் யோசனைகள் செயல்படத் தகுந்தவையாக இருக்கவில்லை என்றாலும் யோசனையை வெளியிட்டதே ஒருஆரம்பம் தான். தொடக்கம் இல்லாவிடில் வெற்றிகரமான நிறைவேது?

வெற்றிபெறத்தவறுவதற்கும், தோல்விக்கும் வேறுபாடு உண்டு. இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். வெற்றி பெறத் தவறுவது முன்னேறுவதற்காக. இதுவே யோசனைகளை உருவாக்கிற அடிப்படைத் தன்மை. வெற்றி எய்தவில்லை என்பதனால் நீங்கள் தளர்ந்து விட வேண்டாம். அதில்நட்டம் இல்லை! ஒவ்வொரு முறையும் வெற்றியைத் தவறவிடும் போது நீங்கள் புதிதாக ஒன்றைப் பெறுவீர்கள்.

உண்மையில் பார்க்கப்போனால் உங்களுடைய யோசனை எதுவுமே வெற்றிபெறத் தவறிவிடாது. அது இழப்பு அல்ல. ஒவ்வொரு யோசனையும் அது வெற்றியோ அல்லவோ எப்படி இருந்தாலும் புதிதாக ஒன்றை உருவாக்கும் முதல்படி பெறப்படுவதுபோல, வெற்றிபெறத்தவறவிட்ட சம்பவங்களில் இருந்து நீங்கள் அதிகப்பாடங்களை கற்றுக் கொள்வீர்கள். (வெற்றிகளைவிட தொடக்க காலத்தில் வெற்றி வாய்ப்பை கற்றுக் கொண்டதன் காரணமாக இறுதியில் நான் பெருமளவு லாபம் அடைந்தேன்) ஆக வெற்றி வாய்ப்பை இழப்பது என்பது வெற்றியை எட்டுவதற்கு ஆனபடிகள், வெற்றிவாய்ப்பை பலமுறை இழந்த ஆபிரகாம் லிங்கன் தான் பிறகு உயர்ந்த இடத்தை அடைந்தார். தோல்வியோ அறியாத- வெற்றிகளையே சந்தித்து வந்த நெப்போலியன் தான்இறுதியில் 'வாட்டர்லூ' என்கின்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் தோல்வியைத் தழுவினான்.

தொடர்ந்து வெற்றி கிடைக்காத நிலையில் பத்து ஆண்டுகள் கழிந்த பிறகு தான் 'பேட்டரி' களில் மின்சக்தியை சேமிக்கும்நிலை ஏற்பட்டது. 'லேடக்ஸ்' எனும் ரப்பர் பொருள் கண்டுபிடிக்கும் முன் 17 ஆயிரம் யோசனைகள் பயனின்றிப் போய்விட நேர்ந்தது.

உங்கள் யோசனை வெற்றி பெறத் தவறிடும் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களா? உங்களுடைய யோசனை பரிசோதனை செய்யப்படுகிறது என்றால் அதற்கு என்ன பொருள்? எந்தஅளவு சீர்திருத்தலாம்? எடுத்துக் கொள்ளலாம்? சேர்க்கலாம்? மேம்படுத்தலாம்? என்று சோதனை செய்ய ஒரு வாய்ப்பு; அவ்வளவு தான்! வெற்றி கிட்டுமா கிட்டாதா என்பதற்கான இறுதி சவால் அல்ல. ஒரு பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கிற ஒரு ஏற்பாடு. இதற்கு இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள முறைகளைக் கையாண்டால் அதன்மூலம் நீங்கள் முடிவில் வெற்றி பெறுவீர்கள். பயனுள்ள யோசனைகளை தெரிவித்தமைக்கான வெகுமதிகள் உங்களுக்கு கிடைக்கும்.

ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனியின் மாபெரும் கண்டுபிடிப்பாளர், பெரும்நிபுணர் சார்லஸ் கெட்டரிங்க் எப்படி டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்தோம் என்பது பற்றிச் சொன்னார். "வெற்றி பெறாத யோசனைகளையெல்லாம் கூட ஒன்றன்பின் ஒன்றாக ஆறு ஆண்டுகள் பரிசோதனை செய்தோம். கடைசியில் வெற்றிதரக் கூடிய ஒரு யோசனையைச் செயல்முறையைக் கண்டுபிடித்தோம்" என்றார்அவர்.

முதன் முதலில் எடுத்த எடுப்பிலேயே வெற்றி பெறத் தவறிய யோசனைகளைத் உருவாக்கியவர் என்பதால், சார்லஸ் கெட்டரிங்க் என்பவர் வெற்றி பெற முடியாதவர் என்றுசொல்லிவிட முடியுமா? டீசல் என்ஜினை உருவாக்க அவர் தெரிவித்த யோசனைகள் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு வெற்றியைத் தரவில்லை. அதனால் அவர் வெற்றி பெற முடியாதவர் ஆகிவிட்டாரா? நிச்சயமாக அல்ல. அவர் தனது யோசனைகளைச் சீர்திருத்தினார். பிறவற்றை எடுத்துக் கொண்டார். இணைத்தார். மேம்படுத்தினார். டீசல் என்ஜினை உருவாக்கும் வரை விடவில்லை. எத்தனையோ விதகண்டுபிடிப்புகளுக்கு அவர் பயன்படுத்திய வழிமுறை இதுதான்.

இதற்கு விஞ்ஞான பூர்வமாக வேறு ஒரு வழி இருக்கும் என்று சிலர் கருதக்கூடும். ஆனால் உலகிலேயே மிகப்பெரிய - மிகவும் செழிப்பான, மிகவும்அதிகமாக உற்பத்தி செய்கிற ஒருகார்ப்பரேஷனாக விளங்கியது ஜெனரல் மோட்டார்ஸ். அந்த கம்பெனியின் ஆராய்ச்சிப் பிரிவிற்கு தலைமை வகித்தவர் சார்லஸ் கெட்டரிங்க்.

(வளரும்)

சுடர் ஒளி வாசகர்களே
குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.
படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:
சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.







மணிமொழியின் அலறலைக் கேட்டதும் இளவரசர்கள் இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைப்படைந்தனர். "வெறுமனே யோசித்துக் கொண்டிருப்பதால் பயனேதும் இல்லை. மந்திரக்கிழவி நம்மைக் கண்டுவிட்டால் அதேகதிதான். எனவே அவள் கண்ணிலிருந்து மறைவதற்கான உபாயத்தை நாம் கண்டறிய வேண்டும்'' என்று பதைபதைப்போடு கூறினாள் மணிமொழி.

அவளது வார்த்தையைக் கேட்டதும் ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல தன் இடுப்பில் கட்டியிருந்த பையொன்றை வெளியே எடுத்தான் இந்திரவர்மன் அந்தப் பையில் மாயக் கிழவி வைத்திருக்கும் மந்திரக் கண்ணாடியில் இவர்களது உருவத்தை புலப்படாமல் செய்யும் சக்திகொண்ட மண் இருந்தது. குகையில் இருந்து வெளியே வரும்போது அதனை கொண்டுவந்திருந்தான் இந்திரவர்மன். அந்த மண்ணை இளவரசி மீது அவசர அவசரமாகத் தூவினான். பின்னர் சந்திரவர்மனையும், மணிமொழியையும் இழுத்துக் கொண்டு மாளிகையில் இருண்டு கிடந்த ஓர் அறையை நோக்கி ஓடினான். மூவரும் அறையினுள் சென்று கதவை இறுகத் தாள் இட்டுக் கொண்டனர்.

அப்போது 'படார்' என மாளிகையின் பிரதான வாசல் திறந்துகொள்ள, மாயக்கிழவி மாளிகையினுள் நுழைந்தாள். உள்ளே நுழைந்த கிழவி, அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தாள். "நாளை இந்நேரம் இளவரசர்கள் பலியிடப்பட்டு நான் என்றுமே அழியாத இளமையைப் பெற்றவளாக மாறியிருப்பேன்" என்று உரக்கக் கூறி சிரித்தாள் மந்திரக்கிழவி,

அந்தச் சிரிப்பொலியைக் கேட்ட மாத்திரத்தில் அறையில் இருந்த மூவருக்கும் வியர்வை ஆறாகப் பெருகத் தொடங்கியது.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 28.11.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).

**கேள்வி:-** பிலிப்பைன்ஸில் கடந்தவாரம் பல்லாயிரக்கணக்கானோரை பலியெடுத்த சூறாவளியின் பெயர் என்ன?

பதில்:- ..........................................................................

பெயர் :- ..........................................................................

தரம் :- ..........................................................................

பாடசாலை :- ..........................................................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.**
சுடர் ஒளி
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**11**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 10**

சரியான விடை - **பைலின் புயல்**

இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றி யிருந்தார்கள். அவர்களில் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -

## ரா.உஷாந்தினி

யாழ்/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி புத்தூர்.

01. க.மிதுன்ராஜ். தரம் - 3. சென்.பெனடிக் றோமன் வித்தியாலயம்.
02. மோ.பிரதீபா. தரம் -9. கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை.
03. பா.உஷாந்திகா . தரம் - 9. யா/ ஊர்.புனித மரியாள் வித்தியாலயம்.
04. உ.யனோஜா. தரம் -5. யா/புனித திரேசா மகளிர் கல்லூரி.
05. ப. அன்புழகன் தரம் - 11.மட்டு./ விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயம். கல்லடி

# அறிந்து கொள்வோம்

★ உலகப் புகழ்பெற்ற சாய்ந்த கோபுரம் எங்கு அமைந்துள்ளது?
**இத்தாலி**

★ அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் யார்?
**கொலம்பஸ்**

★ உலகப் புகழ் பெற்ற ஓவியர் யார்?
**பிக்காசோ**

★ இந்து மதத்தின் மறுபெயர் என்ன?
**சனாதன தர்மம்**

★ நனோ தொழில்நுட்ப வியலின் தந்தை யார்?
**ரிச்சார்ட் பேர்மன்**

★ எத்தியோப்பியாவின் பழைய பெயர் என்ன?
**அபிசீனியா**

★ பர்மா நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
**மியன்மார்**

★ உலகின் கூரை எனப்படுவது எது?
**திபெத்**

★ உலகின் பெரிய எரிமலை எது?
**லஸ்கார்**

★ உலகிலேயே மிகப் பெரிய நகரம் எது?
**லண்டன்**

**மோகனதாஸ் பிரதீபா**
தரம் - 9.
கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை.

# தீனாவின் தீபாவளி

தீனா. சமீப காலமாக வீட்டில் தங்குவதே இல்லை. இதனால். அம்மாவுக்கு ரொம்பக் கவலை. தீனாவின் அப்பாவுக்கு. ஊர் ஊராகச் செல்லும் விற்பனைப் பிரதிநிதி வேலை. விடிந்தால் தீபாவளி. அவர் எப்போது வேண்டுமானாலும் வீட்டுக்கு வந்துவிடுவார். அவர் வரும் நேரம் வீட்டில் தீனா இல்லை என்றால்... நினைத்தாலே பதறியது அம்மாவுக்கு.

ஞாயிற்றுக்கிழமைகளில் காணாமல் போவான். பிறகு. வெகுநேரம் கழித்து வருவான். 'எங்கே போனாய்?' என்று கேட்டால். ஏதாவது சொல்லிச் சமாளிப்பான்.

அம்மாவுக்கு ஆத்திரமும் அழுகையும் அதிகமானபோது. வாசல் பக்கம் சத்தம். தீனாவின் அப்பா வந்துவிட்டார். விஷயம் அறிந்து அதிர்ச்சியடைந்தார். 'வேலைப் பளுவில் மகனைக் கோட்டைவிட்டோமே...' என்று வேதனைப்பட்டார். இருவரும் மகனைத் தேடிப் புறப்பட்டனர்.

எவ்வளவு நேரம் தேடியும் தீனா தென்படவில்லை. மற்ற பையன்கள் விளையாடும் இடங்களில் தீனா இல்லை. அப்படியென்றால், எங்கேதான் போகிறான்? அவன் படிக்கும் பள்ளிக்கூடத்துக்குச் சென்று விசாரிப்பது என முடிவுசெய்தார்கள்.

அங்கே, மாணவர்கள் யாரும் இல்லை. விளையாட்டு ஆசிரியர் வீட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார். "இப்பெல்லாம் பசங்க முன்ன மாதிரி இல்லை. வீட்டுக்குத் தெரியாம சினிமாவுக்குப் போயிருக்கலாம்" என்று சொல்லி. அவர்களை மேலும் கலவரப்படுத்தினார்.

பிறகு அவரும் தேட வந்தது. அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஒரு தெருவில் தீனாவைப் பார்த்துவிட்டார்கள். தீனா பார்க்க முடியாத தொலைவில் மறைந்துகொண்டு கவனித்தனர். தீனாவின் கையில் ஒரு மூங்கில் கூடை இருந்தது. அவன் வீடு வீடாகச் சென்றான். ஏதோ சொல்கிறான்... சில வீடுகளில் பலகாரங்களைக் கொடுக்கிறார்கள். சில வீடுகளில் திட்டுவது தெரிந்தது. சிலர் அவனைக் கண்டுகொள்ளவே இல்லை. ஒரு வீட்டில் நாய் குரைத்து விரட்டியது. அம்மா. தாங்க முடியாமல் அவனிடம் செல்ல எத்தனித்தார்.

"நோ... வெயிட்" என்றார். விளையாட்டு ஆசிரியர். "உங்களுக்கு இந்தக் காலப் பசங்களைத் தெரியாது. இந்தப் பண்டங்களை டாஸ்மாக் வாசலில் விற்று. அந்தப் பணத்தில் சினிமாவுக்குப் போவாங்க.

தீனாவைப் பின்தொடர்ந்தார்கள். அவன்




ஒரு கட்டடத்தினுள் நுழைந்தான். அது. பார்வையற்றோர் இல்லம். அம்மா. அப்பா மற்றும் ஆசிரியர் மூவருமாக வாசல் அருகே சென்றனர். "தீனா அண்ணன் வந்துட்டார்" என்று உள்ளிருந்து சத்தம் கேட்டது.

"ரகு. இந்தா பலகாரம். ரஃபீக்... இது உனக்கு. புவனா. இதோ இது உனக்கு" உள்ளிருந்து கேட்ட தீனாவின் குதூகலக் குரல் ஆச்சரியப்படுத்தியது.

இவர்கள் உள்ளே நுழைந்தார்கள். தீனா நின்றிருந்த இடத்துக்கு அருகே. கட்டிலில் ஒரு பாதிரியார் படுத்திருந்தார். காலில் மாவுக்கட்டு. தன் பெற்றோரையும் ஆசிரியரையும் அங்கே பார்த்த தீனாவுக்கு பேச்சே வரவில்லை.

"வாங்க, நீங்கதான் தீனாவோட பெற்றோரா?" பாதிரியார் நிமிர்ந்து படுக்க. தீனா உதவினான்.

"பக்கத்தில் இருக்கும் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாட வருவோம். ஒருநாள் பந்து இங்கே விழுந்திட்டுது. எடுக்க வந்தேன். அதிலிருந்து பழக்கம்" - தீனா விளக்க முயன்றான்.

"ஞாயிற்றுக்கிழமைகளில் தீனா இங்கே வருவான். பார்வையற்ற இந்தக் குழந்தைகளுக்கு உதவி செய்வான். பேப்பர் படிச்சுக்காட்டுவான்" என்ற பாதிரியார் தொடர்ந்தார்.

"பத்து நாள் முன்னாடி. தடுக்கி விழுந்ததில் எனக்கு கால் எலும்பு முறிஞ்சுபோச்சு. இந்தக் குழந்தைகளுக்கு என்னைத் தவிர யாருமே இல்லை. தீனாதான் பள்ளி முடிஞ்சு இங்கே வந்து. எனக்கும் குழந்தைகளுக்கும் உதவியா இருக்கான். பண்டிகைக்கு எதுவும் செய்ய முடியலை. தீனா வீடு வீடாகப் போய்... இனிப்பு. பலகாரம் வாங்கி வந்திருக்கான்" என்றவரின் குரல். நன்றியால் தழுதழுத்தது.

'பசங்க எதைச் செய்தாலும் அது தப்பாகத்தான் இருக்கும்'னு நினைச்சது என்னோட பெரிய தப்பு" என்ற ஆசிரியர். தீனாவைத் தட்டிக்கொடுத்தார்.

அப்பா. தீனாவின் தலையைப் பெருமையோடு கோதிவிட்டார். "உங்ககிட்டச் சொல்லாதது தப்புதான்.. மன்னித்துக்கொள்ளுங்கள் என்ற மகனை. அம்மா தழுவிக்கொண்டார். அடுத்த நாள் தீபாவளியை. அவர்கள் அங்கேதான் கொண்டாடி னார்கள்.

## என் அறையில்...

ஆங்கிலமூலம்:- துர்க்கா பிரசாந்பண்டா
தமிழில்:- ந.சத்தியபாலன்.

இங்கே தான்
எனது நசுக்கப்பட்டுவிட்ட நானை
சீராக்கி மடித்து அலுமாரியில்
வைத்திருக்கின்றேன்

இங்கே தான்
என்னுள்ளே பேயாய்க்குடி கொண்ட
அடக்கவியலா ஆசைகளைப்
பூட்டி வைத்திருக்கின்றேன்.

இங்கே தான்
காயப்பட்ட என் அகங்காரத்துக்கு
பச்சாதாபத்தைலம்
தடவிக்கொள்கிறேன்

இங்கே தான் நிலைக் கண்ணாடி முன்
நிர்வணமாகி அழுகிப்போன என்
ஆணவத்தை
காயம் நக்கும் அடிபட்ட நாய் போல
நக்கிக் கொள்கின்றேன்.

இங்கே தான்
வயிறு முட்டக் குடித்துவிட்டு
என் பரம எதிரிகளை
மோசமான தூஷ்ணைகளால்
சபித்துக் கொட்டுகிறேன்.

இங்கே தான்
உலகத்துக்கெதிரான
என் போரினைப் பிரகடனப்படுத்துகிறேன்
விடிந்ததும்
ஓசையின்றித் தலைகுனிந்து
என் பேடித்தனத்தால்
உதடுகளை இறுகமூடி
வெளியேறுகிறேன்.

# உறையும் பனிப் பெண்கள்

### புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளி சுமத்ரூபனின் சிறுகதைகள் சில மனப் பதிவுகள்

மிகுந்த சமூகப் பிரக்ஞையோடும் எமது சமூகப் பெண்கள் குறித்த அக்கறையான பார்வையோடும் தீவிரமான அணுகுமுறையோடும் அமைந்துள்ள சுமதிரூபனின் சிறுகதைகள் பல காரணங்களால் தமது முக்கியத்துவத்தைத் தமிழ் இலக்கியப் பரப்பில் நிறுவுகின்றன.

பெண்களின் வாழ்க்கையை, ஆணாதிக்க நெருக்கடிக்குள் காலம்காலமாய்த் திணறிக் கொண்டிருக்கும் நிர்க்கதியான பெண்களது உண்மை நிலையை இவரது தொகுப்பின் பல சிறுகதைகள் எடுத்துக் கூறுகின்றன.

எதுவித தயக்கமுமில்லாமல் உண்மையை உள்ளபடி எடுத்துக் கூறும் துணிச்சல் மிக்க படைப்பாளியாகிய சுமதிரூபன் தனது சிறுகதைகளினூடாகக் குடும்பக் கட்டமைப்புக்குள் குறுகியதும் அற்பமானதுமான ஆண் தனத்தினால் (ஆண்மையினால் அல்ல) மோசமான சுரண்டலுக்குள்ளாக்கப்படும் பெண்களின் நிலைமையைத் தெளிவான மொழியில் சித்தரிக்கிறார் - பாலியல் சுரண்டல் மிக மோசமாக வெளியுலகில் நிகழ்ந்து கொண்டிருக்கிற அதேபொழுதில் பல பவித்திரமான குடும்பப் பண்பாட்டுச் கட்டிறுக்கத்துள் சுரண்டலுக்கு உள்ளாகும் பெண் உண்மையின் பரந்த வெளிக்கு வந்து குரலெழுப்புகிறாள். எவ்வளவு தூரம் அறிவில் மனிதன் முன்னேறியிருக்கிற போதும், எவ்வளவு சிறப்புடன் மனித மேன்மைகள் பேசப்படுகிற போதும் பாலியல் என்னும் தளத்தில் ஒரு ஆணின் பார்வையில் ஒரு பண்டமாகவே பெண் தெரிகிறாள் என்பதை சுமதிரூபன் தனது அழுத்தமான மொழி மூலம் சித்திரிக்கிறார்.

தனது அக்காவின் கணவனாலேயே பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட முனைவதும் அது பற்றிய அவளது முறையீடுகள் அந்தக் குடும்பத்துப் பெண்களாலேயே கண்டு கொள்ளப்படாது விடப்படுவதுமான சூழல் எமது பண்பாட்டுச் சூழலில் பெண்ணே தனது சுயகௌரவம் பற்றிய விழிப்புணர்வைப் பெறா திருப்பதும் வெட்கத்துக்கும் வேதனைக்குமுரிய விடயம் என்பதைப் படைப்பாளி தனது கதைகளினூடாக மிகத் தெளிவாக முன்வைக்கிறார்.

சிறந்த சிறுகதைக்கான கட்டமைப்போடு எழுதப்பட்டுள்ள அனைத்துக் கதைகளும் சுமதிரூபனின் மொழி ஆளுமை, பாத்திர வார்ப்புச் செம்மை, மென்னுணர்வுகள் குறித்த புரிதல் என்பவற்றை வெளிக்காட்டுகின்றன.

கோஷமாகவோ முறையீடாகவோ அமையாமல் வெளிப்படையான முன்வைப்புகளாக எழுதப்பட்டிருப்பதால் கதைகளின் கனதி குறையாமற் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

தொகுதி முழுவதிலும் விரவித் தெரிகின்ற இன்னுமொரு அழகு சுமதிரூபன் மேற்கொள்கின்ற யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்களின் கையாளுகை என்பதையும் சொல்லியாக வேண்டும்.

தொலைக்காட்சியாலும், சினிமாவாலும் சிதைக்கப்பட்டு செயலிழந்து போகும் தமிழுக்காகக் கவலை கொள்ளும் மொழிப் பற்றாளர்கள் சுமதிரூபன் கையாளும் யாழ்.மண்ணின் தமிழைக் கண்டு மகிழ முடியும்.

பல தொகுப்புக்கள் வந்து கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலேயே அறிமுக விழாவையும் மேற்கொள்ள முடிந்ததும் அதே விழாவில் சுமதிரூபனும் கலந்து கொண்டு கருத்துக் கூற முடிந்தமையும் குறிப்பிடக்கூடிய விடயம்.

தொடர்ந்தும் இவரது படைப்புக்கள் வெளிவர வேண்டும் என எதிர்பார்ப்போம்.

# நெஞ்சக்கிளர்வு

வசியன்

எல்லோருக்குமே சந்தோஷம் தருகின்ற நிறைவளிக்கின்ற ஒருணர்வு தான் அன்பு. எனினும், நம்மிற் பலருக்கு நம்மிடம் இருக்கின்ற அன்பை வெளிக்காட்டும் விதம் அல்லது அன்பு செய்கின்ற விதம் தெரியாதிருக்கின்றது.

குறிப்பிட்ட ஒருவர் மீது அவர் எமது தந்தையாக, தாயாக, கணவனாக , பிள்ளையாக , மனைவியாக எவராயிருப்பினும் எமக்கு நிறைய அன்பு இருப்பதாக நாம் சொல்லிக் கொள்கின்றோம். "அன்பு" இல்லாமலா இதையெல்லாம் நாம் செய்கிறோம் என்று நாம் செய்கின்ற பல காரியங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றோம். நாம் ஆற்றுகின்ற அந்த எண்ணற்ற காரியங்களைப் பட்டியலிட முடிகின்ற எம்மால் நாம் செய்திருக்கக்கூடிய, செய்திருக்க வேண்டிய காரியங்களை நினைவிற் கொள்ள முடிவதில்லை.

இன்னும் சில வேளைகளில் பல செய்யக்கூடாத காரியங்களை அந்த 'அன்புக்குரிய' வருக்கு செய்தும் இருப்போம். அவற்றை ( எமது வசதிக்காக)மறந்து போயுமிருப்போம்.

இந்த இடத்தில் தான் புரிந்து கொள்ளல் என்கின்ற மிக முக்கியமான, பொறுப்பான காரியத்தை நாம் நினைவு கொள்ள வேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட ஒருவர் இத்தகைய இயல்பு உடையவர் என்று விளங்கிக் கொள்வது மட்டும் 'புரிந்து கொள்ளல்' ஆகிவிடாது. பரஸ்பரம் அன்பு காட்டுகின்ற இருவர் ஒருவரையொருவர் புரிந்துகொள்கின்றோம் என்றால் புரிந்து கொள்ளப்படுகின்ற இயல்பு அல்லது குறைபாடு கண்டு கொள்ளப்பட்ட பின்னரும் கூட அதனைப் புறம் தள்ளி அன்பினைக் காப்பாற்றிக் கொள்ளத் தயாராய் இருக்கும் போது தான் 'புரிந்து கொள்ளல்' அர்த்தமுடையாதாகின்றது.

நமக்குப் பிடித்த இயல்பு களை மாத்திரம் கொண்ட வர்களையே நேசிப்பது என்று முடிவெடுத்தால் - இறுதியில் யாரும் எமக்கு உறவென மிஞ்சமாட்டார் கள். குறை நிறைகளோடு ஒரு உறவை அங்கீகரிப்பது தான் அடிப்படையில் உறவின் ஸ்திரத் தன்மையைத் தீர்மானிக்கிறது.

இவை அனைத்துக்கும் அப்பால் "எனக்கு அவர்கள் மீது அன்பும் அக்கறையும் உண்டு." என்று சொல்லிக் கொள்ளத்தக்க அன்புதான் இன்று நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற பல நல்லன்பு உறவுகள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



# செய்க தவம் நெஞ்சே

தன்யன்

தவிர்க்க முடியாத ஒரு பிரிவு அல்லது இழப்பு என்ற ஒன்று சம்பவிக்கும் போது நாம் தவித்துப் போகின் றோம் துடித்துப் போகின்றோம். அதிலும், எதிர்பாராத ஒரு மரணம் எம்மை உலுப்பிப் போடுகிறது.

யாருடைய இழப்பில் அல்லது பிரிவில் நாம் துயரடைகின்றோமோ அவர்கள் கூடவே இருக்கும் போது அவர்களின் அருமையைப் புரிந்து கொண்டது போல் காட்டிக்கொண்டிருக்கிறோமோ அவர்கள் மீது எமது முழு அன்பையும் காட்டியிருக்கிறோமோ என்று சிந்தித்துப் பார்த்தால் சிலசமயம், நாம் அவ்வாறு செய்யத் தவறி விட்டது புரியும்.

எல்லாமே முடிந்து போய்விட்டபிறகு வெறுமே துயர் தின்னக் கிடந்து உழல்வது தவிர வேறேதும் செய்ய முடியாது.

யாரெல்லாம் எமது அன்புக்குரியவர்களோ அவர்கள் கூட இருக்கிற போது எமது அன்பினால் நிறைவு கொள்ள வைக்கிற நல்ல காரியத்தை உரிய காலத்தில் செய்தாலென்ன?

# முப்பரிமாண மாயச் சுழல்

'3டி'எனப்படும் முப்பரிமாணப் படங்களுக்கு ஹொலிவூட்டில் தனித்த வரலாறு உண்டென்றாலும் நம் கற்பனையை பாதித்தவை மைடியர் குட்டிச் -சாத்தானும் அவதாரும். மேற்கில் '3டி'டி.வி தொடர்கள் பல ஒளிபரப்பப்பட்டுள்ளன. அத்தகைய தொடர்களின் போது டி.வி திரையின் ஓரமாய் குறிப்பு அளிக்கப்படும். உடனே பிரத்தியேக கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும். இப்போது 24 மணிநேர முப்பரிமாண டி.வி சேனலை ஸ்கை நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. கண்ணாடி தேவைப்படாத '3டி'தொழில் நுட்பமும் அண்மையில் உள்ளது. பொதுவாக முப்பரிமாண படைப்புகளுக்கு கிடைத்து வரும் அமோக வரவேற்பு பானசோனிக், சோனி, பிலிப்ஸ் உள்ளிட்ட நிறுவனங் களுக்கு '3டி'தொலைக்காட்சிகளை அறிமுகப்படுத்த பெரும் உற்சாகம் அளித்துள்ளது. இவ்வருடம் வெளி வரப் போகும் முப்பரிமாண தொலைக்காட்சி பலருக்கும் வெறும் செய்தி சுவாரஸ்யமாக மட்டுமே இருக்கும். அதிக விலை, '3டி'புளுரே டிஸ்க் என்பன எங்களின் சந் தையை எளிதில் அடையாமை, '3டி'தொழில்நுட்பத்தை காட்சி ஊடகங்கள் வரிப்பதற்கான சாவகாசம் மற்றும் வணிக சாத்தியம் ஆகியன காரணங்கள். தோற்ற அளவிலேனும் முப்பரிமாண கணினி மற்றும் கைப் பேசிகள் நம் எதிர்கால தொடர்புலகை அணுக்கமாக்க போகின்றன் என்பதில் சந்தேகமில்லை. எளிதில் நமது அன்றாட உலகில் '2டி'மெல்ல மெல்ல மறைந்து '3டி'ஆக்கிரமிக்கும். பள்ளிகளில் குழந்தைகளுக்கு அறிவியலை முப்பரி மாண திரைகளில் கற்பித்தால்



அபாரமான ஈடுபாட்டை உருவாக்கலாம். அதே போன்று '3ஜீ' கைப்பேசி காட்சி அரட்டையில் விடப்படும் '3டி'முத்தங்களோ அறைகளோ நம் பிரக்ஞையில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படுத்தும்? நம் மொழிப் படிமங்கள் எப்படி மாறும்? இப்படி கற்பனை செய்து கொண்டே போவதற்கு ஒரு வேகத்தடை தேவையுள் ளது. இப்போதைக்கு முப்பரிமாண காட்சிகளின் பக்கவிளைவுகள்.

உலகம் முழுக்க அவதார் திரைப்படம் மனதை பிரமிக்க வைத்த அளவு உடலையும் பாதித்துள்ளது. இப்படத்தை முப்பரிமாணத்தில் பார்த்தவர்களில் பலருக்கு தலைவலி, தலைசுற்றல், வாந்தி உணர்வு, பார்வை மங்கல் போன்ற பல உபாதைகள் ஏற்பட் டுள்ளன. ஏன்?

'3டி'என்பது ஒரு செயற்கையான காட்சி அனுபவம். விளக்குகிறேன். இயல்பு வாழ்வில் மேலிருந்து கீழாக அல்லது தூரத்திலிருந்து பக்கத்திற்கு வரும் பொருளை தெளிவாக காண நம் கண்ணின் லென்ஸ் தன்னை தகவமைக்கும். மேலும் விளங்க உங்கள் சுட்டு விரலை தலைக்கு மேலிருந்து மூக்கு நோக்கி இறக்குங்கள். கண்கள் சுழல்கின்றன. இப்படி சுழன்று உள்நகரும் போது நம் லென்ஸ் உருமாறுகிறது. ஆனால் முப் பரிமாணக் காட்சியின் போது ஒரு பக்கம் லென்ஸ் தகவமைந்தாலும் மற்றொரு பக்கம் நிலையான திரையிலும் கண்ணை நிலைக்க வைக்க வேண் டியுள்ளது. அன்றாட வாழ்க்கையிலும் இருவேறு திசையிலுள்ள பொருட்களில் பார்வையை நிலைக்க வைப்பது கண்ணுக்கு களைப்பானது என்பதை கவனியுங்கள். '3டி'யின் போது இவ்வாறு செயற்கையான விழியசைவுகள் தேவைப்படு வதால் கண்கள் களைப்பாகி வெவ்வேறு உபாதைகள் ஏற்படுகின்றன.

எதிர்கால '3டி'யுகத்தில் அறிவியலுக்கு இது ஒரு சவால் தான். ஒவ்வொரு சவாலை வெல்லவும் ஒரு மார்க்கம் நிச்சயம் உண்டு.



## சொற்சிலம்பம் போட்டி இல. 595

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| ■ | 9 | | 10 | | | ■ | |
| 11 | | ■ | 12 | | ■ | 13 | |
| | ■ | 14 | | | 15 | | |
| 16 | 17 | | | ■ | 18 | | ■ |
| 19 | | | ■ | 20 | | ■ | 21 |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 595

சொற்சிலம்பம் போட்டி 595ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு நவம்பர்27ம் ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 04ஆம் மற்றும் டிசெம்பர் 11ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361. கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

**மேலிருந்து கீழ்**

1. பணம்.
2. புடைவையின் தலைப்பு.
3. தடி.
4. காமன்.
5. செல்வம். (கடைசி எழுத்தை இழந்துள்ளது.)
6. கை கூப்புதல்.
8. ஒரு சரக்கு வகை.
10. செம்பு.
11. பாண்டவரின் தாய்.
13. அம்பு, வில்.வாள் போன்ற ஓர் பழங்கால ஆயுதம்.
14. துக்கம்.
15. உபதேசம் செய்பவன்.
17. இரத்தல்.
20. பெருக்கற் குறி.
21. புத்தகம், கொப்பி பழுதடையாமல் இருக்கப் போடப்படுவது .

**இடமிருந்து வலம்**

1. மோக ஆசை மிக்கவன்.
4. ஏரி நீர் வெளியேறும் வழி.
7. நலம்.
8. திருமணத்தின் போது பெண்வீட்டார் தரப்பு மாப்பிள்ளைக்கு வழங்குவது.
9. மனைவியை இழந்தவன்.
11. காய்களின் கொத்து .
12. அதிகம்.
13. தாண்டு.
14. கெட்டுப் போதல்.
16. ஈகம்.
18. தமது.
19. நாடு.
20. இணங்க.
22. செய்த செயல்.
23. எல்லைப்படுத்தும் விதிகள்

### சொற்சிலம்பம் போட்டி இல. 593க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சேவல், 2.துரை,3.சதகம், 4.முல்லை, 5.திராணி,6.ரசி, 10. வாரம், 11.அகம்பாவம், 12.ஓணான்,13.சய, 14. அவமதி,15.அம்மா,16.புகை, 18.மசகு,20.திதி,21.நட,

**இடமிருந்து வலம்**

1.சேது சமுத்திரம், 7.வரைதல், 8. ராசி, 9.கலைவாணி, 12.ஓம், 13.சக, 14.அணா, 15.அம்புயம், 17.வன்மம், 19.சமாதி, 21. நவ, 22. திக்கு, 23.திட்டம்

### போட்டி இல. 592இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | பிரவீனா அரிகரசர்மா, மனோன்மணி அம்மன் கோவில், 5ஆம் வட்டாரம், அனலைதீவு. |
| 2ஆம் பரிசு | எஸ். இராஜாராம், இல6/3, பாம் காடின், இரத்தினபுரி. |
| 3ஆம் பரிசு | மோ. பிருந்தா, சிவன் வீதி, சிவநகர், உருத்திரபுரம், கிளிநொச்சி. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி.விஷ்ணுஜன்,
சிவகுரு வீதி,கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

(2) செ.சின்னத்துரை,
இல:131-D-10, உருத்திரபுரம்.

(3) உ.யனோஜா,
ஆண்டு 5(C), புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

(4) ச.பாலசூரியன்,
இல18/5, குடியிருப்பு, வவுனியா.

(5) ம.சிந்துஜா,
விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

(6) திருமதி மஞ்சுளா இராஜமுத்து,
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.

(7) ப.சிவதரன்,
பிரதான வீதி, தம்பிலுவில்-01.

(8) இ. ரேணுகா ,
இல: 85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(9) ஏ.பிரதீபன் ,
தர்மக்கேணி,பளை, கிளிநொச்சி.

(10) வி.நாராயணன்,
இல:16/11, சண்கில் கார்டின், பாகொட றோட், நுகேகொட.

உண்மைச்சம்பவம்

# கண்முன் மறைந்த நகரம்

ஜெகன்



நிலம் வெடிக்கத் தொடங்கிவிட்டது. பிரவுணின் காணியில் குன்று இருந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் வேகமாக மறைந்தன. நிலம் கிட்டத்தட்ட 30மீற்றர்கள் உள்ளே இறங்கிவிட்டது. பள்ளத்திலிருந்து தண்ணீர் வேகமாக மேலே வந்து களிமண்ணைக் கரைத்துக் கொண்டு மணிக்கு 40 மைல் வேகத்தில் 25 கிலோமீற்றர் தொலைவிலிருந்த நதியை நோக்கிச் சென்றது. 800 மீற்றர் அகலம் 1500 மீற்றர் நீளத்திற்குத் தண்ணீர் தேங்கி நின்றது.

பவுலின் வீட்டின் அருகில் ஏற்பட்டநில வெடிப்பில் வீடு, கார், தளபாடங்கள் அனைத்தும் வேகமாகப் பாய்ந்து செல்லும் களிமண் கரைசலில் மூழ்கின. பவுல், அவளது கணவர், மூன்று குழந்தைகள் ஒரு பெரிய களிமண் பிட்டியின் மீது ஏறி நின்றார்கள். களிமண் கரைந்து குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக சேற்றினுள் மறைந்தார்கள். பவுல் பள்ளத்தில் வீழ்ந்து விட்டாள். அவள் கணவர் நிலத்தின் வெடிப்புக்குள் வீழ்ந்து விட்டார். அவள் கணவர் நிலத்தின் வெடிப்புக்குள் விழுந்தவர் ஒரு மரத்தின் வேரில் சிக்கிக் கொண்டார். நிலம் புதையத் தொடங்கியதும் அவர் வேரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அவருடைய மேலாடை களிமண் கரைசலால் அடித்துச் செல்லப்பட்டது. அவர் பள்ளத்திலிருந்து ஒருவாறு தப்பி வெளியேறி மேலே வந்த போது காவல்துறையினர் கண்டு அவரை உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

பவுலின் சிநேகிதி அலனின் வீடு நிலத்துள் புதையத் தொடங்கிய சமயம் அவளது கணவர் றொபேர்ட் வெளியில் என்ன நடக்கிறது என்று பார்க்கச் சென்றிருந்தார். அலெனின் ஐந்து குழந்தைகளும் ஓர் அறையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

சிறிது. தூரத்தில் சிலர் கூடி நின்று உணர்ச்சி வசமாகப் பேசிக் கொண்டிருந்தனர். றொபேட்டும் அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்க அவ்விடத்திற்குச் சென்றார். அவரைக் கண்டதும் அங்கு நின்றவர்கள் " அதோ பார்" என்று பயந்த குரலில் அவரது வீட்டைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள்.

றொபேட் தன் வீட்டை நோக்கி விரைந்தார். வீடு நிலத்தின் பிளவில் புதைந்து கொண்டிருந்தது. றொபேட் அதை நோக்கி ஓடிச் செல்ல முற்பட்ட போது மனைவி அலன் அவரைத் தடுத்து நிறுத்தினாள். "ஒன்றுமே புரியவில்லை" என்று பீதியுடன் கத்தினாள் றொபேட், அலனின் பக்கத்து வீட்டுக்கார் ஜீனத். இரவு பதினொரு மணிக்கு அவளது வீடு பிளவுபடும் சத்தம் கேட்டது. வீடு ஆட்டம் கொடுத்தது. மூன்று குழந்தைகளுடன் அவள் தனியாகவே வீட்டில் இருந்தாள். அவள் பயந்து விட்டாள். சமையலறையின் யன்னல் வழியாகப் பார்த்தாள். அருகாமையிலுள்ள வீட்டின் விளக்குகள் தெரிந்தன. ஆனால் அவை மறையத் தொடங்கின. ஜீனத் மூன்று வயதுக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு, மற்றக் குழந்தைகளைப் பார்த்து "வாருங்கள் ஓடிப் போகலாம் உலகம் அழிந்து கொண்டிருக்கிறது" என்று கத்தினாள்.

வாசல் கதவைத் திறக்கும் போது எங்கும் இருட்டாகக் காணப்பட்டது. கொங்கீரிட் படிக்கட்டுக்கள் மறைந்தன. ஜன்னல் கதவைத் திறந்தாள். அவ்ளது மூத்த மகனான பதின்மூன்று வயதையுடைய மாட்டீன் யன்னல் மேல் ஏறி வெளியே குதித்தான். பதினொரு வயதான மகள் கத்தரீனைத் தூக்கி வெளியே விட்டாள். யன்னலுக்கு அருகாமையில் ஒரு மீற்றர் அகலத்திற்குப் பள்ளம் விழுந்திருந்தது. அதனுள் கத்தரின் விழுந்தாள். அதே சமயத்தில் வீடும் சரிந்து அவளைக் கீழே தள்ளிப் புதைத்தது. வீடு புதையத் தொடங்கிற்று. பள்ளமும் பெரிதாகிக் கொண்டே வந்தது. ஜீனத் கைகளில் இருந்த பையனை மார்புடன் அணைத்துக் கொண்டாள். யன்னலின் மீது உட்கார்ந்தவள் பள்ளத்தில் சாய்ந்தாள். ஒரு கையில் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு உதவிக்காகக் கத்தினாள். பாவம் மகன் மாட்டீன், தன் வயதுக்கு மீறிய வலிமையுடன் பள்ளத்தில் விழுந்த தாயாரைப் பிடித்து மேலே இழுத்தான். தம்பியையும் மேலே எடுத்தான். அவர்கள் தெருவை நோக்கி ஓடினர். ஒரு குழந்தை திரும்பிப் பார்த்து "அம்மா நம் வீடு மறைந்துவிட்டது" என்றது.

அலுமினியத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களின் வசதிக்காக பஸ் போக்குவரத்தை நடத்துபவன் யூலியஸ். அன்றைய தினம் அவன் பஸ்ஸை பள்ளத்தை நோக்கிச் செலுத்திக் கொண்டு வந்தான். பஸ் வந்த வேகத்தில் பள்ளத்தினுள் கவிழ்ந்தது. அவன் முன்பக்க கண்ணாடி மூலம் தெருவைப் பார்த்தான். உடனடியாக பஸ்ஸில் இருந்தவர்களிடம் "பின்பக்கத்து வழியாக வெளியில் குதியுங்கள்" என்று பீதியில் கத்தினான். பஸ்ஸிலிருந்து கடைசித் தொழிலாளி வெளியில் குதித்த சமயம் யூலியஸ் பள்ளத்தில் விழுந்து விட்டான். அவன் மேலே வரத் தவியாய்த் தவித்தான்.

தொழிலாளர்கள் அக்கம் பக்கத்திலிருந்த வீடுகளை நோக்கி ஓடிக் கற்களை விசியெறிந்து வீட்டிலிருப்பவர்களுக்கு வந்து கொண்டிருக்கும் அபாயத்தை உணர்த்தினார்கள். நள்ளிரவாகியது. நிலப்பிளவு, களிமண்ணைத் தண்ணீர் கரைத்து அடித்துச் செல்வது ஆகியன நின்றன. ஆண், பெண், குழந்தைகளுமாக நற்பத்தைந்து பேர் நிலத்துள் புதைந்து மாண்டனர். முப்பத்தெட்டு வீடுகள் மண்ணின் அடியில் மறைந்தன. நகரமே சோக மயமாகக் காட்சியளித்தது. படு நாசமான நகரத்தை நோக்கி அரசாங்க வாகனங்கள் உதவிப் படையின் வாகனங்கள் விரைந்தோடின. அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டு உடனடியாக மீட்பு மற்றும் நிவாரண வேலைகள் தொடங்கின.

அழிவு ஏற்பட்டு ஆறு நாட்களின் பின் யேக்கப் குடும்பத்தினர் ஏற்பட்டிருந்த பிளவில் இறங்கி கீழே புதைந்த நிலையிலிருந்த தங்கள் வீட்டைப் பார்த்தார்கள். அந்த வீடுதான் அனர்த்தம் நிகழ்ந்த அன்றைய . தினத்தில் கடைசியாகத் தரையில் புதையத் தொடங்கிய வீடு.

அடித்தளத்தைத் தவிர வீடு நல்ல நிலையிலிருந்தது. யன்னல் கண்ணாடிகளும், கண்ணாடிப் பொருட்களும் நொறுங்கி விட்டன. சுமார் இரண்டு மணி நேரம் யேக்கப்பின் குடும்பத்தினர் அங்கு தங்கினர். யேக்கப்பின் மனைவி வீட்டின் தரையில் விழுந்து புரண்டு, புரண்டு அழுதாள். அந்த வீட்டை அரசாங்கம் அடித்து அழித்துவிடும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் அந்த வீட்டை அவ்வளவு தூரம் நேசித்தனர். அதனை அழகுபடுத்திப் பேணி வந்தனர்.

இருபத்தைந்து நாட்களுக்குப் பின்னர், அரசாங்கம் செயின்ற் ஜீன்வியன்னி நகரம் மக்கள் வசிப்பதற்கு லாயக்கற்றது என்று பகிரங்கமாக அறிவித்தது. அத்துடன் அதே ஆண்டு இறுதிக்குள் எஞ்சியுள்ள சகலரும் தங்கள் இருப்பிடங்களைக் காலி செய்து விட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கட்டளையிட்டது.

உயிர் தப்பியவர்கள் புதிய குடியேற்றத்தை உருவாக்கப் பல இடங்களுக்கும் சென்று பார்த்தார்கள். சிறிது சேதமடைந்தோ அல்லது முழுமையாக அழிந்தோ போய்விட்ட வீடுகளை அரசாங்கம் அழித்துத் தரைமட்டமாக்கிவிட்டது. அதற்குப் பதிலாக வீடிழந்தவர்களுக்குப் புதிய குடியேற்றத்திட்டத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் தயாராகியது.

கனடாவைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் பல கோடிக்கணக்கில் உதவித் தொகையாகப் பணத்தை அனுப்பியிருந்தனர். வீடிழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அத் தொகையினை பயன்படுத்தும் படி கோரியிருந்தனர். பிறிதொரு இடத்தில் மீண்டும் புதுவீடுகள் நிர்மாணிக்கப்பட்டுச் சகலரும் அங்கு குடி புகுந்தனர்.

விரைவிலேயே செயின்ற் ஜீன்வியன்னி நகரம் அமைந்திருந்த இடம் ஓர் பொட்டல் காடாக மாறி விட்டது. அங்கு புல், பூண்டுகள் முளைத்து வெடிப்புக்களையும் பள்ளங்களையும் மறைக்கலாம். வேடிக்கை பார்க்க வருபவர்கள் இடிபாடுகளையும் , பள்ளங்களையும் பார்க்கலாம். பள்ளங்களிலும், வெடிப்புக்களிலும் மழையும் கரைசல் மண்ணும் நிரம்பி சம தரையாக ஆகப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். நகரத்தின் பெயரைத் தேசப்படம் மற்றும் சாலைப் போக்குவரத்துப் படம் ஆகியவற்றிலிருந்து நீக்கி விடுவார்கள். ஆனால் அந்த நகரத்தில் வசித்து உயிர் தப்பிய மக்களின் நினைவில் மாத்திரம் அந்த இடத்தின் நினைவுகள் வாழ்நாள் முழுவதும் நெஞ்சை விட்டகலாது நிலைத்து நிற்கும்.

முற்றும்

இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

# காதலர் மட்டும்...

## ஒரு நாள்: 2000 காதல் திருமணங்கள்

மாதம், திகதி, ஆண்டு மூன்றும் வரிசைப்படி ஒரே நாளில் வந்தால் அதை அபூர்வ தினமாக மேற்கத்தவர்கள் கருதுகின்றனர். எனவே இத்தகைய அபூர்வ தினங்களில் தங்கள் வாழ்க்கையில் மிகமுக்கியமான நிகழ்வுகளை கொண்டாட ஆசைப்படுகின்றனர்.

இந்த நாட்களில் திருமணம் செய்யவும், குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்தவருடம் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி அவ்வாறு மாதம், திகதி, ஆண்டு என்ற வரிசையைக் கொண்டுள்ள அபூர்வநாளாகும். 11.12.13 என்று வரும்.

100 ஆண்டுக்கு ஒருமுறை வரும் இந்த அபூர்வ நாளை, அதிர்ஷ்ட நாளாக இளைஞர்களும், இளம்பெண்களும் கருதுகின்றனர். அதை தங்களின் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாக விரும்புகின்றனர்.

இந்த அபூர்வ நாளில் தங்கள் திருமணத்தை நடத்த அமெரிக்காவிலுள்ள காதலர்கள் முடிவு செய்துள்ளனர். அதற்கான ஏற்பாடுகளில் 2,265 காதலர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தத் தகவலை அமெரிக்காவை சேர்ந்த தனியார் திருமண ஏற்பாட்டாளர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் நடத்திய ஆய்வில் வரும் டிசெம்பர் 11 ஆம் திகதி திருமணம் செய்ய பெரும்பாலான காதலர்கள் ஆர்வமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து தனியார் திருமண ஏற்பாட்டாளர் நிறுவனத்தை சேர்ந்த பிரைன் பெய்ட்லர் கூறியதாவது:

கடந்த ஆண்டு டிசெம்பர் 12 இல் (12.12.12) ஏராளமான காதல் திருமணங்கள் நடந்தன.

தற்போது நடைபெற உள்ள திருமணம் அதை விட 72.2 சதவீதம் அதிகம். 11.12.13 அல்லது 12.13.14 போன்ற அபூர்வ தினங்களை தங்கள் வாழ்வில் மறக்க முடியாத தினமாக்க 40 சதவீதமான காதலர்கள் விரும்புகின்றனர்.

அதற்காக அந்த நாளில் திருமணம் செய்து கொள்கின்றனர். கடந்த 7.7.07 இல் மட்டும் ஒரே நாளில் 66 ஆயிரம் திருமணங்கள் நடந்துள்ளன - என்றுள்ளார்.

எப்போதுமே மறக்க முடியாத சின்ன சின்ன விடயங்களைக் கூட தேடித்திரியும் காதலர்கள் இந்த அபூர்வதினத்தை விட்டுவிடுவார்களா என்ன?

## நிழல் காதல் ஜோடிகள்

ஒத்திசைவு (கெமிஸ்ட்ரி) இந்த வார்த்தை தற்போது சின்னத்திரை நடன நிகழ்ச்சிகளில் அதிகம் உச்சரிக்கப்படுகிறது. ஒரு படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைக்கு இடையே சரியான கெமிஸ்ட்ரி இருந்தால் மட்டுமே அவர்களுக்குள் ஒரு புரிதல் இருக்கும். அந்யதப்படம் வெற்றிப் படமாக அமையும். எம்.ஜி.ஆர்-சரோஜா தேவி, சிவாஜி - பத்மினி ஜோடி தொடங்கி இன்றைக்கு கார்த்தி - காஜல் அகர்வால் ஜோடி வரை ஒத்திசைவான ரசிகர்களின் ஆதரவைப் பெற்ற இணைகள் திரை உலக வானில் மின்னிக்கொண்டுதான் இருக்கின்றன. தற்போது புதிது புதிதாக இளம் ஜோடிகள் அறிமுகம் ஆனாலும் 70 களில் தொடங்கி 2013 வரை சினிமாவில் தோன்றிய பல காதல் ஜோடிகள் ரசிகர்களின் ரசனைக்கு தீனி போட்டிருக்கின்றனர். ரசிகர்கள் அதிகம் ரசித்த அழகான இரு திரையுலகக் காதல் ஜோடிகளைப் பற்றி ஒரு பார்வை

### கமல் - ஸ்ரீதேவி



70 களில் தமிழ் திரை உலகில் வலம் வந்த காதல் ஜோடிகளில் கமல்-ஸ்ரீதேவி ஜோடியின் கெமிஸ்ட்ரி பெரிதும் பேசப்பட்டது. இவர்கள் இருவரும் இணைந்து நடித்தாலே படம் நிச்சயம் வெற்றி என்ற நிலை ஏற்பட்டதால், பல படத்தயாரிப்பாளர்கள் தங்கள் படங் களில் இந்த ஜோடியை ஒப்பந்தம் செய்தனர். காதல் படங்களில் மட் டுமல்லாது, வித்தியாசமான கதை யம்சங்கள் கொண்ட படங்களிலும் இந்த ஜோடி கலக்கியது.

### சுரேஷ் - நதியா

சினிமா உலகில் கல்லூரி கால வாழ்க்கையைப் பற்றி படங்கள் வந்த காலத்தில் அறிமுகமானார் சுரேஷ். அதே காலத்தில் துறு துறு நாயகியாக நதியாவும் திரைத்துறைக்குள் நுழைந்தார். கல்லூரிக் காதலை மையப் படுத்திய படமா? கூப்பிடுங்கள் சுரேஷையும் நதியாவையும் என்று சொல்லு மளவுக்கு பல படங்களில் காதல் ஜோடிகளாக இவர்கள் நடித்திருந்தனர். அந்தக்காலத் தில் நதியா பயன்படுத்திய அணிகலன்கள் பெண்கள் மத்தியில் பிரபலமாகின. நதியா காப்பு, நதியா வளையல், நதியா தோடு என்று பல பொருள்கள் நதியா வின் அடைமொழியோடு விற்பனையில் சாதனை படைத்தன. அதே போன்று இளம்பெண்களின் உள்ளங்கவர் நாயகனா சுரேஷ் ஆராதிக்கப்பட்டார்.





## தாஜ்மஹாலை மிஞ்சிய காதல் சின்னம்

இந்தியாவின் பீஹாரில் கயா மாவட்டத்தின் கெலார் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் தசரத் மான்ஜி. இவர் நிலமில்லாத ஒரு விவசாய கூலி. ஒருநாள் இவரின் காதல் மனைவி பாகுனிதேவி இவர் வேலை செய்து கொண்டிருந்த இடத்துக்கு தண்ணீர் கொண்டு சென்றார் தசரத் வேலை செய்யுமிடத்துக்கு செல்ல வேண்டுமாயின், வீட்டுக்கு அருகில் நீண்டதூரம் நடந்து,மலையைச் சுற்றித்தான் செல்ல வேண்டும். ஆனால் அன்றைக்கு அவரின் உடல்நிலை களைப்படைந்து மலைச்சரிவில் தவறிக் கீழே விழுந்து அடிபட்டார். காயமடைந்த தன் மனைவியைக் காப்பாற்ற தசரத் துடித்தார். ஆனால் வைத்தியசாலைக்கும் உடனே போக முடியாது. அதற்கும் அந்த மலை குறுக்கே நின்றது. வழக்கம் போல மலையைச் சுற்றிக் கொண்டு மருத்துவமனைக்குக் கொண்டுபோக முன்பே தசரத்தின் மனைவி இறந்துபோனாள். இந்த மலையின் குறுக்கே ஒரு பாதை இருந்திருந்தால் தன் மனைவி இறந்துபோயிருக்கமாட்டாள் என்று உறுதியாக நம்பினார் தசரத் மான்ஜி.

கெலார் கிராமத்திலிருந்து வஜீரகஞ் என்ற ஊர் சுற்றுப் பாதையில் எண்பது கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அங்குதான் இவர்களுக்கான மருத்துவ மனை இருந்தது. வஜீரகஞ்க்கு 13 கிலோமீற்றர் தொலைவில் பாதை அமைக்க முடியும். ஆனால் யாரும் அதைச் செய்ய முன்வரவில்லை. விளைவு 30 அடி அகலம், 360 அடி நீளத்திற்கு ஒரு பாதையை உருவாக்கும் பணியை 1959 ஆம் ஆண்டு தன்னந்தனியனாக தசரத் மேற்கொண்டார். மக்கள் இவரை பைத்தியக்காரனாகப் பார்த்தார்கள். அதனால் எவரும் அவருடன் சேர்ந்து உழைக்கவரவில்லை. ஆனாலும் விடாமுயற்சியால் மலையைக் குறுக்கறுத்து ஒரு பாதையை அவர் 1981 ஆண்டு உருவாக்கி முடித்தார். அவரின் உழைப்பின் பயனாக 60 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இன்று மிகக்குறைவான நேரத்தில் எந்தவித பயமுமின்றி நகரத்தை அடைகிறார்கள். அன்றாடம் 8 கிலோமீற்றர் தூரம் பள்ளிக்கு நடந்த அக்கிராமத்தின் குழந்தைகள் 3 கிலோ மீற்றர் மட்டுமே நடந்து இன்று பள்ளியை அடைகிறார்கள். வழக்கம் போல் உயிரோடு இருக்கும் வரை தசரத் என்ற மாமனிதனின் உழைப்புக்கு மதிப்பளிக்காத இந்திய அரசு, 18 ஒகஸ்ட் 2007 அன்று தசரத் இறந்தபோது, அவருடைய உடலை மட்டும் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தது.

இன்றைய நவநாகரீக மனிதன் எல்லாவற்றையும் பணத்தால் கணக்கிட்டு எதை சேமிக்க வேண்டுமோ அதனை சேமிக்காமல் இயற்கையை சுரண்டி தானும் அழிந்து எல்லா ஜீவராசிகளையும் அழிக்கிறான். உலகிலேயே உயர்ந்த காதல் சின்னம் தாஜ்மஹால் என்று சொல்கிறோம். ஆனால் அந்த தாஜ்மஹாலை தன்னுடைய அடிமைகளையும்,பிறநாடுகளிடம் இருந்து கிடைத்த பொருளிலுமே கட்டிவைத்தான் ஷாஜகான். எனினும் தன்னுடைய காதல் மனைவியின் நினைவாக தன்னந்தனியாக தானே ஒரு பாதையை நிர்மாணித்து ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை உயர்த்தியுள்ள தசரத், அமைத்த பாதைக்கு எந்தக் காதல் சின்னம் ஈடாகமுடியுமா?

## காதல் பரிசு:

## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

# எழுச்சி கண்ட பங்களாதேஷ்

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் மற்றும் விக்கெட் காப்பாளர் முஷ்பிகுர் ரஹீம் ஆகியோர் உள்வாங்கப்பட்டதில் இருந்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்து வருகின்றது. 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடர்ச்சியாக அவர்கள் சர்வதேச அரங்கில் சாதித்து வருகின்றார்கள். முன்பெல்லாம் ஒரு போட்டியில் வெற்றி 'பெற்றாலே, அதைச் சாதனையாக நினைத்து மைதானத்தைச் சுற்றிக் கொண்டாடி வருபவர்கள் தற்போது தொடர் வெற்றியையே சாதாரணமாக பதிவு செய்து வருகின்றார்கள்.

அண்மையில், கிரிக்கெட் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு பங்களாதேஷ் வந்த நியூசிலாந்து அணியினர் இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள் மற்றும் ஒரேயொரு 20-20 போட்டிகளில் விளையாடினர். இந்தத் தொடர் முழுவதிலுமே பங்களாதேஷ் அணி வீரர்களின் ஆட்டம் மெச்சும்படியாக இருந்தது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்துத்துறைகளிலும் பங்களாதேஷின் இளம் வீரர்கள் சாதித்திருந்தார்கள்.



மழை காரணமாக முதலாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் நிறைவுக்கு வந்தாலும், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பான துடுப்பாட்டத்தை மேற்கொண்ட பங்களாதேஷ் அணியினர் நியூசிலாந்தின் வெற்றிக் கனவைத் தகர்த்தனர். தொடர் சமனிலையில் நிறைவடைந்தது. டெஸ்ட் தரவரிசையில் நியூசிலாந்து 8ஆவது, இடத்திலும் பங்களாதேஷ் 10ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, மிர்புரில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி டக்வோ'த்-லூயிஸ் முறைப்படி 43ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியிலும் 40 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்த பங்களாதேஷ் ஒருநாள் அரங்கில் நியூசிலாந்து அணிக்கு எதிரான தனது இரண்டாவது தொடர் வெற்றியைப் பதிவு செய்தது. முக்கியத்துவம் இல்லாத மூன்றாவது போட்டியில் நியூசிலாந்து நிர்ணயித்த 307 என்ற இலக்கை நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி கொண்டது. பங்களாதேஷ் துரத்தி அடித்த இரண்டாவது மிகப்பெரிய ஓட்ட இலக்கு இதுவாகும். ஏற்கனவே கடந்த 2009இல், சிம்பாவே நிர்ணயித்த 312 என்ற இலக்கை விரட்டிப்பிடித்தது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஒரேயொரு 20-20 போட்டியில் பங்களாதேஷ் அணி 15 ஓட்டங்களால் தோல்வியடைந்த போதும், இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி அவர்களால் 189 ஓட்டங்களை போராடிப் பெறமுடிந்தமை அவர்களின் துடுப்பாட்ட திறமைக்கான சான்று. இந்தச் சுற்றுத்தொடர் முழுவதிலும் பங்களாதேஷ் அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீமின் பெறுபேறுகள் சிறப்பாக இருந்தன. அவருடன், இளம் வீரர்கள் நயும் இஸ்லாம், ருபல் ஹுசைன், தமீம் இக்பால், சம்சுர' ரஹ்மான், சோஹாக் ஹாசி ஆகியோரும் திறமைகளை வெளிப்படுத்தி இருந்தனர். அடுத்தாண்டு 20-20 உலகக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் இடம் பெறவுள்ள நிலையில் அவ்வணியினர் எழுச்சி கண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முன்னணிக்கு வர நிச்சயம் போராடுவார்கள்.

# கவனிக்க வைத்த பெய்லி

சிரேஷ்ட வீரர்கள் அவுஸ்திரேலிய அணியில் நீடித்து இருந்ததன் காரணமாக வாய்ப்புகள் அற்று வயதேறிய வீரர்களில், தற்போதைய அவுஸ்திரேலிய ஒருநாள் அணியின் தற்காலிக தலைவர் ஜோர்ஜ் பெய்லி முக்கியமானவர். இவர் சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கு அறிமுகமாகியதே கடந்த ஆண்டில் தான். ஆனாலும், தன்னை இதுவரை காலமும் தேசிய அணிக்காக தெரிவு செய்யாத அவுஸ்திரேலிய தெரிவுக்குழுவிற்கு பெய்லி துடுப்பால் பதில் சொல்லியிருக்கிறார்.

அண்மையில் நிறைவடைந்த இந்தியாவுக்கு எதிரான ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், ஒரு போட்டி மழையால் கழுவப்பட எஞ்சிய ஆறு போட்டிகளிலும் 478 ஓட்டங்களை விளாசியுள்ளார். இவற்றில் ஒரு சதமும் மூன்று அரைச்சதங்களும் அடங்கும். அதிலும் இரண்டு அரைச்சதங்கள் 90 இற்கும் மேற்பட்ட ஓட்டங்கள். இதன் மூலம் சர்வதேச ஒருநாள் வீரர்கள் தரப்படுத்தலில் 835 புள்ளிகளைப் பெற்று சடுதியாக மூன்றாவது இடத்திற்கு முன்னேறினார். இந்த அசத்தலான பெறுபேறு காரணமாக எதிர்வரும் ஆஷஷ் போட்டிக்குரிய அவுஸ்திரேலியக் குழாமிலும் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.



அவுஸ்திரேலிய அணியின் மூத்த வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வு பெற்றதாலும், தற்போதைய தலைவர் மைக்கேல் கிளார்க் அடிக்கடி உபாதைகளில் சிக்கிக் கொள்வதாலும், சர்வதேச போட்டிகளில் அனுபவம் குறைந்த, ஆனால் வயதில் கூடிய பெய்லி விரைவாக அவுஸ்திரேலிய அணியைத் தலைமை தாங்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டார். கடந்த, 2012ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற 20-20 உலகக்கிண்ணத்திற்கான அவுஸ்திரேலிய அணியைத் தலைமை தாங்கிய போது, "யார் பெய்லி?" என்றே அனைத்து கிரிக்கெட் இரசிகர் களின் பார்வையும் அவரை நோக்கிக் குவிந்தன.

இவ்வாண்டு ஐ.பி.எல். போட்டிகளில் சென்னை அணிக்காக விளையாடிய பெய்லி, ஒரு போட்டியிலேனும் களமிறங்கவில்லை. பெய்லியின் அண்மைய பெறுபேறுகளைக் கவனித்த சென்னை சூப்பர் கிங் நிர்வாகமும், அணித்தலைவர் தோனியும் நிச்சயம் மனம் வருந்தியிருப்பார்கள். அடுத்தவருடம் பெய்லியின் தலைக்கு மிகப்பெரும் தொகை ஏலமாக நிர்ணயிக்கப்படும் என்பது மட்டும் உறுதி.

31 வயதான ஜோர்ஜ் பெய்லி, தனது வயது காரணமாக தனக்கு அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாது என்பதை உணர்வதாகவும், ஆகவே கிடைக்கும் வாய்ப்பில் தனக்கு விரும்பியவாறு விளையாட விரும்புவதாவும் குறிப்பிட்டுள்ளார். இறுதியாக இடம்பெற்ற சில தொடர்களில் தான் சிறப்பாக விளையாடியமை காரணமாக அதிக தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஆஷஷ் தொடருக்காக தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.


ஹரே கிருஷ்ணா

ISKCON

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

ரூபா.3,000/-
ஒரு செங்கல்லுக்காக செலுத்தி

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

வங்கி விபரங்கள்

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No. : 1120017042

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iskcon@slt.lk
www.iskcon.lk